Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 09 செவ்வாய்க்கிழமை (24.07.2012) பக்கங்கள் 20 ஓசை – 297












நல்லூர் கொடியேற்றம் இன்று... 02


விரிவுரையாளர் பிரச்சினையில் தலையிட... 06


தொடர் பயிற்சியால் சாதிக்கலாம்... 09






ஆபத்தான சமூக உருவாக்கத்தின்... 11





நம்புட்டானால் கடி 13


## போதனா மருத்துவமனையின் அபிவிருத்தியை விரிவுபடுத்த ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையின் அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று மாலை 4.00 மணிக்கு வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வாழ்நாள் பேராசிரியர் பால சுந்தரம் பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்திற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார்.

அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகளை விரிவு படுத்தும் நோக்கில் நான்கு குழுக்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. இந்த நான்கு குழுக்களும் நிர்வாகம் சார்ந்த பிரச்சினை, நோயாளர்கள் சார்ந்த பிரச்சினை, சுகாதாரம் சார்ந்த பிரச்சினை, உட்கட்டமைப்பு சார்ந்த பிரச்சினை போன்றன தொடர்பாக ஆய்வு செய்து தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளன.

சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், வைத்தியசாலையில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இங்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து ஆராயப்பட்டுள்ளது.

இதில் பிரதான பிரச்சினையாக நிர்வாகம் சார்ந்த பிரச்சினை பேசப்பட்டாலும் இது


(19) ஆம் பக்கம் பார்க்க


## அரசியல் கைதிகளை பூசாவுக்கு மாற்ற உத்தரவு

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் போர் கைதிகளை உடனடியாக பூசா சிறைக்கு மாற்றஞ் செய்யுமாறு பாதுகாப்பமைச்சின் செயலர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றையடுத்தே இவ்வுத்தரவை அவர் பிறப்பித்துள்ளார். அண்மையில்


(19) ஆம் பக்கம் பார்க்க


## பணிகளை பகிஷ்கரிப்போம் மருத்துவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

வட மாகாணத்தில் உள்ள சகல அரசாங்க மருத்துவ மனைகளைச் சேர்ந்த மருத்துவர்கள் அனைவரும் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் நளின் ஆரியரட்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் ஊழல் மற்றும் மோசடி குறித்து விரைவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை முன் வைத்தே இந்தப்


(19) ஆம் பக்கம் பார்க்க




# கூட்டமைப்புடன் கூட்டு இல்லை

### மு.கா. திட்டவட்டம்

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலின்போதோ அல்லது தேர்தலின் பின் கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைக்கும்போதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டுச்சேரப் போவதில்லை என்று அதன் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரி வித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணி சேரப் போவதாக பல்வேறு ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜாவும், முஸ்லிம் காங்கிரஸின் ஹசன் அலியும் இணைந்திருந்த புகைப்படம் ஊடகங்களில் வெளியிடப்பட்டிருந்தது. ஊடகங்களில் வெளியான இந்தச் செய்தி வெறும் வதந்தியே தவிர நிஜம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வேட்பு மனுத்தாக்கல் செய்த தினத்தில் வவுனியா கச்சேரியில் மாவை


(19) ஆம் பக்கம் பார்க்க


## துப்பாக்கி ரவைகள் மானிப்பாயில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகுதியில் நேற்று முற்பகல் வீடொன்றில் இருந்து ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தும் ஒரு தொகுதி துப்பாக்கி ரவைகள் மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

பெட்டி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையிலேயே இந்த ரவைத் தொகுதி மீட்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இந்தச் சம்பவத்தை நேற்று மாலை யாழ். பொலிஸாரும் உறுதிப் படுத்தினர். (பா)

## இந்திய அணு உலைகளால் இலங்கைக்கு ஆபத்து

### தடுத்து நிறுத்த புதிய பொறிமுறை

(கொழும்பு)


இந்திய அணு உலைகளால் ஏற்படக் கூடிய கதிரியக்க அனர்த்தங்களைத் தடுத்து நிறுத்தும் பொறிமுறையொன்றை இலங்கையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை கற்பிட்டியில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகாரசபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கதிரியக்க அனர்த்தங்கள் ஏற்படின் அதிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அதன் தலைவர் அணு தொடர்பான அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார். தற்போது அணுத் தொழில்நுட்பம் மின் உற்பத்தி மாத்திரமன்றி விவசாயம், மருத்துவம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் அதிகளவில்


(19) ஆம் பக்கம் பார்க்க


## மரணச் சான்றிதழ் படையினர் வழங்க முடியாது



(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொடர்பாக கண்டறிவதற்கு குழு ஒன்றை அமைக்குமாறு ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடரிலும் இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் பரிந்துரை செய்யப்பட்டபோதிலும் இது தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் அதற்கு நேர் எதிராக காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்க அரசு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இந்தச் செயற்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவட்டக் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது சரணடைந்தவர்களின் பெற்றோர்கள் காணாமல் போனவர்களின் விடயம் தொடர்பாக பல்வேறு இடங்களில் முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர். இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில்


(19) ஆம் பக்கம் பார்க்க


## இந்திய கைப்பொம்மை முதலமைச்சர் கிழக்கில் நியமிக்க முயற்சி

### குற்றம்சாட்டுகிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

இந்தியாவின் தேவைக்கேற்ப கைப்பொம்மை முதலமைச்சர் ஒருவரை கிழக்கில் நியமிப்பதற்கான அரசியல் காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மக்கள் பலியாகி விடக் கூடாது எனத் தெரிவிக்கும் ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, கிழக்கில் தலைதூக்கியுள்ள ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகளை தடுக்க தேர்தல்கள் ஆணையாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி.யின் தலைமையகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை


(19) ஆம் பக்கம் பார்க்க

# மக்களது தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்து வருகின்றோம்



(வேலணை)

மக்களது தேவைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளையே தற்போது மேற்கொண்டு வருகின்றோம் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தீவகப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி வெண்புரவி நகரில் மீள்குடியமர்ந்த மக்களது வாழ்வாதார மற்றும் அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடலொன்று நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பின்தங்கிய நிலையிலுள்ள பிரதேசங்கள் எனக் குறிப்பிடப்படும் இத்தீவகத்தினை ஏனைய பிரதேசங்களைப் போல் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே எம்முடையதும் கௌரவ அமைச்சரின் எண்ணமாகவும் உள்ளது. அந்த வகையில் மக்களது வாழ்வாதார தேவை களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதுடன், விசேட நிதிகளைப் பெற்று இப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்து வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது பிரதேச போக்குவரத்து, வீதி, மின்சாரம், கல்வி, குடிநீர் விநியோகம், சுயதொழில், ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன்,

இதன்போது வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்), வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி, மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# 'ரட்டவிருவோ' அமைப்பு பற்றிய கலந்துரையாடல்

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அவர்களது குடும்ப நலப்பணிகளுக்காகவும், அக்குடும்பங்களை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையைக் கருத்திற் கொண்டு, பிரதேச செயலகப் பிரிவுகளிலும் மற்றும் தேசிய மட்டம் வரை விரிவுபடுத்தப்பட்ட அமைப்பொன்றை உருவாக்குவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் திட்டமிட்டுள்ளது.

இது சம்பந்தமாகத் தெளிவுபடுத்தும் கருத்தரங்கானது இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

# நல்லூரில் முதலுதவி சேவை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தை ஒட்டி இன்று தொடக்கம் 19.08.2012 வரை பகல் வேளையில் மக்கள் நலன் காக்கவும், பக்தர்களின் முதலுதவி தொடர்பாக சேவை செய்வதற்கும் முதலுதவி உதவியாளர், தொண்டர்கள், மருந்தாளர்கள், செஞ்சிலுவை ஆளுநர் சபை உறுப்பினர்கள் அங்கு சேவையாற்றவுள்ளனர்.

அம்புலன்ஸ் வண்டியும் அங்கு நோயாளர்களையும் காயமடைந்தவர்களையும் உடனடியாக வைத்தியசாலைக்கு அனுப்புவதற்காக தயார் நிலையில் இருப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

தேவையானோர் 0213217565 என்ற தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும்.

# விடுதிக்குள் புகுந்து துணிகரத் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் உள்ள பிரபல விடுதியொன்றில் தங்கியிருந்தவர்களிடம் இருந்து நேற்று முன்தினம் இரவு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா திருடர்களால் திருடப்பட்டுள்ளது.

குறித்த விடுதியின் பின்புறமாக உட்புகுந்த திருடர்கள் அங்கு அறையொன்றில் தங்கியிருந்த தென்பகுதியைச் சேர்ந்த இருவரதும், இந்தியாவைச் சேர்ந்த ஒருவரதும் உடைமைகளில் இருந்து குறித்த பணத்தை திருடிச் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் குறித்து குறித்த முகாமையாளரினால் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (பா)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும், சேவை நிலையங்களிலும் 31.07.2011 வரையும் (மீட்புக்காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும், 31.01.2012 வரையும் (மீட்புக் காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் 2012.09.15 (சனிக்கிழமை) மு.ப.8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.


| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/1624) 2012.07.20


# பூலோக கைலாசத்தில் கொடியேற்றப் பெருவிழா



தமிழ் தெய்வமாம் முருகனுக்கு தமிழ் மக்கள் வதியும் இடமெல்லாம் கோவில்கள் எழுப்பப்பட்டுள்ளன.

ஈழத்திருநாட்டில் முருகப் பெருமான் கதிர்காமத்திலும் வடக்கே மாவிட்டபுரத்திலும், தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலும், தொண்டைமானாறு செல்வச்சந்நிதியிலும், நல்லூரிலும், கந்தவனக் கடவையிலும், மண்டூரிலும், சித்தாண்டியிலும், பெருகல் முதலிய புண்ணியத் தலங்களில் பன்னெடுங்காலமாக கோவில் கொண்டு அருள் பாலித்து வருகின்றான்.

பெருமகனை தன்னகத்தே கொண்டு விளங்கும் நல்லூரில் கந்தசுவாமிப் பெருமானுக்கு நந்தன வருஷத்திற்கான கொடியேற்றப் பெருவிழா இன்று பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

காலை 10.00 மணிக்கு நல்லையம்பதியில் கொடியேற்றம் நடைபெறுகின்றது. கொடியேற்ற விழாவைக் காண்பதற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நல்லூரில் கூடுகின்ற காட்சி பக்திபூர்வமான சூழ்நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கும். மஹோற்சவம் ஆரம்பமாகும் இன்றிலிருந்து அதிகாலை 4.00 மணி முதல் நல்லைக்கந்தன் ஆலயத்தில் நேர்த்திக் கடனை நிறைவு செய்வதற்காக அங்கப்பிரதட்ணம் செய்யும் அடியார்கள் நாவிலிருந்து 'முருகா முருகா' என்ற நாமம் எழுந்து பக்திப் பரவசத்தைப் பெருக்கி விடும்.

கொடியேற்றத்தினைத் தொடர்ந்து பத்தாம் திருவிழா அன்று முருகப் பெருமான் அழகிய மஞ்சத்தில் காட்சி கொடுப்பார். பதினேழாம் திருவிழா கார்த்திகை உற்சவமாகவும், இருபதாம் திருவிழா சந்தான கோபாலன் உற்சவம் காலையிலும், மாலையில் கைலாச வாகன உற்சவமும், இரு பத்தியோராம் திருவிழா காலையில் கஜவல்லி மவராவல்லி உற்சவமும், மாலையில் வேல் விமான உற்சவமும், இருபத்திரெண்டாம் நாள் திருவிழா காலையில் மாம்பழத்திருவிழா தெண்டாயுதபாணி உற்சவமும், மாலையில் ஒருமுகத் திருவிழாவும், இருபத்திமூன்றாம் நாள் உற்சவம் சப்பறத் திருவிழாவும், இருபத்திநான்காம் நாள் உற்சவம் தேர்த்திருவிழாவாகவும், இருபத்தியா றாவது உற்சவம் பூங்காவனத்திருவிழாவும் இரு பத்தியேழாவது நாள் உற்சவம் வைரவர் சாந்தி விழாவாகவும் அமையவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா யாழ்ப்பாண மக்களின் கலாசாரத் திருவிழாவாகக் கந்த புராணப் பெருமை போற்றும் விழாவாக அமைந்து விடும்.

**வர்ணனைக் கலாநிதி,**
**மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்,**
**பணிப்பாளர்,**
**சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகம்.**

# அலங்கார உற்சவம்

(வண்ணை)

வண்.வடமேற்கு நாவலடி, பேச்சி அம்பாள் என அழைக்கப்படும் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி பத்து தினங்கள் பக்தி பூர்வமாக நடைபெறுமென ஆலய அறங்காவலர் சபை தெரிவித்துள்ளது.

இத்திருவிழாவானது பத்துத் தினங்களில் பகல் திருவிழா முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகி அபிஷேகமும், இரவுத் திருவிழா மாலை 6.30 மணிக்கு மூலஸ்தானப் பூசையும், 7.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று மனோன்மணி அம்பாள் அலங்கார தண்டிகையில் திருவீதி எழுந்தருள்வாள். (68)

# பூங்காவனம்

பொலிகண்டி பத்திரகாளி அம்மன் ஆலய பூங்காவனத் திருவிழா நாளை மாலை 6.00 மணிக்குச் சிறப்பாக நடைபெறவுள்ளது. (116)

# முள்ளியவளை விபத்தில் இருவர் படுகாயம்

முள்ளியவளை சிலாவத்தை சந்தியில் மோட்டார் சைக்கிள் இரண்டு ஒன்றை ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் கால் முறிந்த நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை 8.00 மணிக்கு சிலாவத்தை சந்தியில் இருந்து முள்ளியவளை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன், சிலாவத்தைச் சந்திக்கு அண்மையில் உள்ள சிறிய ஒழுங்கையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இதில் முள்ளியவளையை சேர்ந்த றங்கநாதன் மயூரன் (வயது-25), அதே பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் படுகாயமடைந்தனர். (கிரு-சிகரம்)

# உதவு ஊக்க மையத்தினால் குடாநாட்டில் உதவி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திகான உதவு ஊக்க இலங்கை மையம் யாழ். மாவட்டத்தில் மீண்டும் நிறுவனங்களின் ஒன்றியத்தினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக மையத்தின் நிர்வாக இயக்குநர் திஸ்ஸவிஜேதுங்க தெரிவித்துள்ளார்.

மூளாயிலுள்ள ஐ.என். எஸ். தொழில் பயிற்சி நிலையத்துக்குரிய கட்டட விஸ்தரிப்பிற்கு நிதி வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், எமது மையம் கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலையத்தாலும் கனேடிய அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் ஆதரவளிக்கப்பட்ட இலங்கை கனடா நிதியத்திலிருந்து ஓர் இலாப நோக்கற்ற அரச சார்பற்ற நிறுவனமாக 2002 ஆண்டு பரிணாமம் அடைந்தது. எமது சேவை யாழ். மாவட்டத்தில் முன வழங்கப்பட்டு சிறிது காலம் தடைப்பட்டிருந்தது. மீண்டும் நிறுவனங்களின் ஒன்றியத்தினூடாக செயற்படுத்த உள்ளோம். எமது பங்களிப்பு யாழ்.மாவட்டத்தை மேம்படுத்தலை நோக்கியதாக இருக்கும். நாம் இரண்டு விடயங்களை மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். முதலாவது மாவட்டத்திலுள்ள அமைப்புக்கள் ஒருங்கிணைந்து வாழ்வாதார மேம்பாட்டினூடாக தாக்குப்பிடிக்கும் அபிவிருத்திக்கு மக்களை இனங்கண்டு அவர்களைத் தயார்ப்படுத்துவது, இரண்டாவது பிரதேச அமைப்புகள் அவர்க்ள் செயற்படும் இடங்களில் வாழ் வாதாரத்தை நோக்கியுள்ள மக்களின் தேவைகளை அவர்களின் பங்களிப்புடன் இனங்கண்டு செயற்பட தயாராகுதல் என்பனவாகும்.

அந்தவகையில் நாம் ஐ.என். எஸ். நிறுவனத்துடன் உத்தியோக பூர்வமாக ஒப்பந்தம் செய்யவுள்ளோம் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு பகுதி நிதி வழங்கவுள்ளோம். இந்த நிகழ்வு முன்பு நடந்திருக்க வேண்டும். ஆனால் எமது நிறுவனத்தின் தலைவரின் மரணத்தால் கால தாமதமாகியது எனத் தெரிவித்தார். ஐ.என். எஸ். நிறுவனத்தின் தலைவி திருமதி.பொன்மலர் இராஜேஸ்வரன் அபிவிருத்திகான உதவு ஊக்க இலங்கை மையத்துடனான நீண்ட கால உறவை நினைவுகூர்ந்ததுடன் ஐ.என். எஸ். நிறுவனத்திற்கு நிதி உதவி பெற அங்கீகாரமளித்த யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சி.வி. கே.சிவஞானத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து திஸ்ஸ விஜயதுங்க அபிவிருத்திக்கான உதவு ஊக்க இலங்கை மையத்தின் சார்பாகவும் திருமதி. பொன்மலர் இராஜேஸ்வரன் ஐ.என்.எஸ். நிறுவனத்தின் சார்பாகவும் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். அதன் பின் 3 இலட்சத்துக்கான காசோலை ஐ.என். எஸ். நிறுவனத்திற்கு வழங்கப் பட்டது.

# தென்னங்கன்றுகளை நட ஆர்வம்காட்டும் மக்கள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள மிகவும் பயன் தரு தென்னைமரங்கள் பலவும் அழிந்து போன நிலையில் காணப்படுகின்றன.

போரின் போது ஷெல் தாக்குதல்களில் முறிந்து போன தென்னை மரங்கள் தவிர, மக்கள் இடம் பெயர்ந்த மூன்று வருட கால இடைவெளிக்குள் யானைகள் நுழைந்து சேதப்படுத்தியவைகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில், மீண்டும் தமது இடங்களில் தென்னை வளத்தைப் பெருக்குவதற்கு மீள்குடியேறிய மக்கள் தென்னங்கன்றுகளை எதிர்பார்ப்பதாகவும், தென்னைங்கன்றுகளை வைத்திருப்பவர்கள் தமக்கு தந்துதவுமாறும் கேட்டுக்கொள்கின்றனர். (138)

## நல்லூர் பதியமர்ந்த முருகா கொடி ஏறிவா!



எல்லையில்லா பேரழகே தொல்லை நகர்கந்தா
தொல்லைதீர்த்து வரமருள கொடியேறிவா!
இல்லாதோரும் இசைபடவாழ்வோரும் கொண்டாடும்
நல்லூர் பதியமர்ந்த முருகா கொடியேறு!
வல்லோர் வகுத்தவழி இல்லாதுபோக நல்லதோர்
முடிவு இல்லையெனும் நிலைமாறக்கொடி ஏறு!
தள்ளாத கருணை மழை பொழிந்தாளுமழகே
எல்லோரும் வாழ இறை கூடி கொடியேறிவா!

-மகிழ்நன்- (மண்டைதீவு)

## நல்லூர் கந்தன் கொடியேறுது!

நல்லையில் ஆடி அமாவாசை - வந்து
ஆறாம் நாள் இன்று சேவல்கொடி ஏறுது!
அகிலமெலாம் புலம் பெயர்ந்த நின் - அடியவர்
திரண்டு வருவர் நல்லை திருவிழாக்காண
எம்மதத்தவரும் உன்னடியில் மயங்கிடுவர் - ஏன்
நாட்டின் தீர்வுக்கு இணங்கிடப் பணியாயோ!
பணித்திடு மாதம் மும்மாரி - பொழியட்டும்
எம் குலம் காக்க குமரனின் கொடி ஏற்றிடுவோம்.

-க.கனகராசா- (ஈழநல்லூர்)

## சங்கரனார் மைந்தா கொடியேறு

ஆறுமலை அழகனே அகிலாண்ட நாதனே
வேலவா கொடியேறு
ஆறுமுக ராஜனே அட்சர வினோதனே
சரவணபவ கொடியேறு
காவடிகள் ஆடிடவே கற்றவர்கள் பாடிடவே
கந்தவேளே கொடியேறு
சேவற்கொடியும் சித்திரவேலும் விண்ணொளிவீச
கார்த்திகேயா கொடியேறு

தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன்

நல்லைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

கந்தனருள் பாடிட வினைகள் எல்லாம் தீர்ந்திடும்
கபில்னா கூல்பார் அன் உணவகம்
எம்மிடம்
ஹையேஸ் வான்
சொகுசு கார்,
ஆட்டோ
திருமணசேவை வாகனங்கள்
யாழ்.கொழும்பு A.C
வான் சேவையும்
செய்து தரப்படும்
தரமான சிற்றுண்டி
வகைகளினையும்
குளிர்பானம், ஐஸ்கிறீம்
வகைகளினையும்
சுவையாக உண்டு
மகிழலாம்.
என்பனவற்றை பெற்றுக் கொள்ளலாம்
0773618014
0779361339
0213213021
சந்நிதி வீதி,
பஸ் நிலையம் அருகாமை,
அச்சுவேலி

மீண்டும் மக்கள் வங்கியிடமிருந்து...

ஜய ஶ்ரீ

மாபெரும் பரிசுப் போட்டி 2012

முன்பு உங்களுக்கு வழங்கிய பரிசுகளை விட அதிகமான பரிசுகளுடன் 2012ல் நாம் வந்துள்ளோம்.

மாதாந்த சீட்டிழுப்பில்,
- ஒரு மைக்ரோ பெண்டா கார் அல்லது ஒரு டெ்.பே டிராக்டர் (தேசிய மட்டத்தில் 01)
- 24" LED SHARP தொலைக்காட்சிப் பெட்டிகள் 48 (பிராந்திய மட்டத்தில் 02)
- 1020 மிக்ஸர் கிரைண்டர்கள்(கிளை மட்டத்தில் 03)

வருட இறுதி சீட்டிழுப்பில்,
- 03 ஆடம்பர ஹொண்டா சிவிக் கார்களை (தேசிய மட்டத்தில் 03)

இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்,

மக்கள் வங்கியின் ஏதேனுமோர் சேமிப்புக் கணக்கில் (சிறுவர் சேமிப்புக் கணக்குத் தவிர்ந்த) அல்லது நடைமுறைக் கணக்கில்,

மாதம் முழுவதும் . ஆகக் குறைந்தது ரூபா 10,000/-யை கணக்கு மீதியாகப் பராமரித்து மாதாந்த "ஜய ஶ்ரீ" சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறலாம். (புதிய கணக்கும் சேர்த்துக்கொள்ளப்படும்)

நீங்கள் சேமிக்கும் மேலதிக தொகையான ஒவ்வொரு10,000/- ரூபாவிற்கும் ஒவ்வொரு வெற்றி வாய்ப்பு வீதம் அதிகரிக்கும்.

2012 மார்கழி மாதம் 01ம் திகதியிலிருந்து 31ம் திகதி வரையான காலப் பகுதியில் ஆகக் குறைந்தது ரூபா 50,000/-னை கணக்கு மீதியாகப் பராமரித்து வருட இறுதியில் மாபெரும் "ஜய ஶ்ரீ" சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறலாம்.

ஜய ஶ்ரீ மாபெரும் பரிசுப் போட்டியில்

2012 சித்திரை மாத யாழ் பிராந்திய வெற்றியாளர்கள்

24" LED SHARP தொலைக்காட்சிப்பெட்டி
வெற்றியாளர்கள்
யா/பிரதான வீதி கிளை - பி.கலாநிதி
சுன்னாகம் கிளை - வி.சுப்பிரமணியம்

மிக்ஸர் கிரைண்டர் வெற்றியாளர்கள்.

யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை
எஸ்.நடராஜா
கே.சற்குணேஸ்வரன்
எஸ்.ஜமுனா

காங்கேசன்துறை கிளை
ரி.மகேஸ்வரி
எஸ். கலியுகவரதன்
எஸ்.மகாலிங்கம்

யாழ்.பிரதான வீதி கிளை
சி.சந்தானம்
பி.சகிலா
கே.சுந்தரலிங்கம்

ஊர்காவற்றுறை கிளை
எஸ். ஜுஹின் சந்திரவதனா
ரி.நவதகலபத்மகீர்த்தி
ஜே. அஞ்சலா

நெல்லியடி கிளை
எஸ்.நஜீன்தன்
ஆர்.தேனுஜா
வி.ஏ.தங்கமயில்

அச்சுவேலி கிளை
எஸ.ஜெசிந்தா
எஸ்.சவிதா
ரி.தையல்நாயகி

சங்கானை கிளை
ரி.சிவதாசன்
எஸ்.லோகேஸ்வரி
எம்.வசந்தாதேவி

சுன்னாகம் கிளை
என். சச்சிதானந்த யோகேஸ்வரன்
ஏ.சுந்தரலிங்கம்
எஸ்.சபாநாயகம்

சாவகச்சேரி கிளை
வை.மல்லிகாதேவி
என்.மனோகரன்
வி.செந்தில்

வல்வெட்டித்துறை கிளை
எஸ்.மகேசன்
என்.பொன்னுத்துரை
ரி.ராஜேஸவரி

யாழ்.பல்கலைக்கழக கிளை
கே.சிதம்பரநாதன்
எஸ்.ஜெகசீலன்
கே. கணேசையா

யாழ்.கன்னாதிட்டி கிளை
எம்.வரலக்ஸ்மி
எஸ்.செல்வேந்திரராஜா
பி.சண்முகேஸ்வரி

பருத்தித்துறை கிளை
ஜே.மேரி பிரான்சிஸ்கா
பி. சியாமளா
எஸ். மகேந்திரராஜா

மாதாந்தம் வெற்றியாளர்கள் விபரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

மக்கள் வங்கியின் "ஜய ஶ்ரீ" உடன் சேமித்திடுங்கள் - மனதிலுள்ள பரிசுகளை கைகளிலே பெற்றிடுங்கள்

AAA Brand Finance Rating, AA (lka) Fitch Rating

Say YES to yes
மக்கள் வங்கியின் வனிதா வாசனா
மக்கள் வங்கியின் ஜனஜய
மக்கள் வங்கி பரிணத
ISA
சாதாரண சேமிப்புக் கணக்கு
அறுவடை
நடைமுறைக் கணக்கு
*நிபந்தனைகளுக்குட்பட்டது
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
www.peoplesbank.lk

பணத்தின் உண்மையான மதிப்பு பிறரிடம் கடன் கேட்கும் போது தான் தெரியும். - பிராங்க்ளின்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## நல்லூர்த் திருவிழா தொடங்கியது!

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. வரும் 25 நாட்களும் முருகனைத் தேடிவரும் பக்தர்களின் வெள்ளம் போன்ற அதிகரிப்பால் யாழ்நகரே களைகட்டுவது வருடாவருடம் காணும் வாடிக்கை. தென்னிலங்கையிலிருந்தும் நல்லூர்த் திருவிழாவுக்கென்றே விசேடமாக கடைகளும் வந்திறங்கி விட்டன.

முருகன் என்பதே அழகன் என்ற பொருளில்தான் அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, தமிழ்க்கடவுளாகவும் தெவிட்டாத இனியனாகவும் அறியப்படுபவன் அவன். இளமைக்கும் அவன்தான் அடையாளம். அதனால்தான் தந்தையாரின் திருவிளையாடல்களைப் போல அல்லாமல், முருகனின் விளையாட்டெல்லாம் முதியவர்களுடனான செல்ல விளையாட்டாகவே இருந்திருக்கிறது. இதனாலும் அவன் நமக்கு நெருங்கிய தோழனாகத் தெரிகிறான்.

மாம்பழத்துக்காகச் சண்டைபிடித்துக் கொண்டு மலையேறுவதாகட்டும், நாவல் மரத்திலேறி நின்று தமிழ்க் கிழவிக்குச் சுட்டபழம் காட்டுவதாகட்டும் வள்ளியைக் கிழவனாக ஏய்ப்பதாகட்டும் எப்போதும் நம்மில் ஒருவனாகத் தோற்றம் காட்டிக் கொண்டிருப்பவன். எல்லோர் மனதுக்குப் பிடித்தவனாகவும் ஆகிறான்.

வளர்ந்து, பல கேள்விகளும் சந்தேகங்களும் உருவாகி, கடவுள் என்ற நம்பிக்கையை இழந்து போனவர்களுக்கும் கூட, அவர்கள் இந்துசமயத்தவராகப் பிறந்திருந்தால், முருகன் என்கிற திருவுரு அவர்களிடம் ஏற்படுத்தியிருக்கக் கூடிய வாஞ்சையும் வசீகரமும் எளிதில் அவர்களை விட்டு அகலாதது. அவர்தம் குழந்தைகள் வடிவிலும் அவன்தான் சிரித்தபடியே தவழ்ந்து வருவதைத் தவிர்த்துவிட முடியாது.

அந்தவகையில் ஒரு கருத்தாகவே நம் வாழ்வுடன் ஒன்றித்துவிட்ட கடவுளாக முருகனைச் சொல்ல முடியும். முதுமை குறித்த அச்சமும் இயலாமையும் அடையாத மனிதரில்லை. அவர்களுக்கும் நம்பிக்கையளிக்கக் கூடிய கடவுளாக முருகன் இருக்கிறான். முதுமைக்கு மட்டுமல்ல, வாழ்க்கை முழுமைக்கும் எல்லோருக்கும் நம்பிக்கைகள்தானே தேவையாக இருக்கிறது. அதைக் கொடுப்பவர்களைக் கடவுளாகக் கொண்டாடுவதும் ஏற்புடையதுதானே!

வரும் இருபத்தைந்து நாட்களும் யாழ்ப்பாணம் மட்டுமில்லாமல் நல்லூரையறிந்த இந்துக்கள் எங்கெங்கு இருந்தாலும் நல்லூர்க் கந்தனை நினைத்துக் கொள்கிறார்கள். விரதமிருக்கிறார்கள். கடைசித் திருவிழாக்களுக்காவது தவறாமல் வந்து சேருகிறார்கள். சிறுவர்கள் முதியவர்கள் பேதமில்லாமல் அனைவருக்கும் கொண்டாட்டத்தை அள்ளித் தருபவனாக முருகன் இருக்கிறான்.

"கருதிக் கருதிக் கவலைப் படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேல்" என்று பாரதி பாடுகிறான். அந்த நம்பிக்கையில்தானே இத்தனை மக்களும் அவனைத் தேடி வருகிறார்கள். வலிகளையும் வதைகளையும் வேண்டிய மட்டும் அனுபவித்துவிட்ட மக்களுக்கு அவர்கள் மனக்காயங்களை மெல்ல மெல்ல ஆற்றி, அவர்களது இயல்பான வாழ்வுக்கு மீண்டும் முழுதாகத் திரும்புவதற்கு, அவர்கள் கந்தன் மீது கொண்டிருக்கும் பக்தியும் நேசமும் அவர்களுக்கு உதவட்டும்.

"பற்றயர்ந்து அஞ்சிய பரிவு கண்டணைந்து சற்றும் அஞ்சேல் எனத் தாங்கும் துணையாகவும், தளர்வெலாம் தவிர்த்து உட்கிளர்ந்திட உதவும் உறுதுணைக் காப்பாகவும், சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும் கவலையும் தவிர்த்துக் கலந்திடும் நன்நட்பு"மாக நல்லூர்க்கந்தன் நம்புகின்ற மக்களுக்குத் துணிவு"தருபவனாக இருக்கட்டும்!

- ஆசிரியர்

# ஆறுமாதத்தில் 3934 பேருக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் மூவாயிரத்து 934 பேர் தென்கொரியாவில் தொழிவாய்ப்புக்களை பெற்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு கொரிய மொழிப் பரீட்சையில் சித்தி பெற்ற இரண்டாயிரத்து 460 பேர் இதில் அடங்குவதாக பணியகம் தெரிவிக்கின்றது.

அத்துடன் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கொரிய பரீட்சையில் சித்தி பெற்ற 474 பேருக்கு இம்முறை கொரியாவில் வேலைவாய்ப்புக்கள் கிடைத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த முறை நடைபெற்ற கொரிய மொழிப் பரீட்சையில் ஒன்பதாயிரத்து 998 பேர் சித்தியடைந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவிக்கின்றது.

அவர்கள் தொடர்பான அனைத்து விபரங்களும் கொரிய வேலைவாய்ப்பிற்காக தெரிவுசெய்யப்படும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த வருடம் ஏழாயிரத்து 411 பேர் தென்கொரியாவில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 17595 பேர் ஒரு மாதத்தில் கைது

(கொழும்பு)

சுற்றிவளைப்புத் தேடுதலில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 21798 பேரில் 17595 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். 2012-06-20ஆம் திகதி தொடக்கம் 2012-07-20ஆம் திகதிவரையான ஒரு மாத காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்படி ஒரு மாத காலத்தில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட பிடிவிறாந்துகளின் எண்ணிக்கையும் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கையும் பிரதேச ரீதியில் பின்வருமாறு,

அம்பாறை - 596 - 596, அநுராதபுரம் - 1340 - 1234, எல்பிட்டிய - 225 - 185, பண்டாரவளை - 309 - 212, பதுளை - 356 - 291, மட்டக்களப்பு - 469 - 409,

முல்லைத்தீவு - 82 - 24, மாங்குளம் - 37 - 37, மன்னார்-59 -57, மாத்தறை-701-604, கண்டி-1103-894, மாத்தளை-786-521, மொனராகலை-356 - 325, நீர்கொழும்பு-673-550, கல்கிஸ -733- 720, பாணந்துறை-903- 561, வடகொழும்பு-246-232,

கொழும்பு தெற்கு - 579 - 324 மத்திய கொழும்பு - 410 - 173, யாழ்ப்பாணம்-291-161, வவுனியா-189-189, திருகோணமலை-241-216, தங்காலை-460-429, காலி -738-710, களுத்துறை -639-584, குருநாகல்-843-526, குளியாபிட்டி -372-325, நிக்கவெரட்டிய -525- 522, சிலாபம் -201-190, புத்தளம் -505 464, நுவரெலியா- 523-336, கம்பளை- 274-244

ஹட்டன் - 269-194, இரத்தினபுரி -1082-884, கேகாலை -573-349, சீதாவாக்கபுர -659-492, களனி - 637-572, கம்பஹா -808 -701, நுகேகொட -922 -800, பொலனறுவை -766- 549, கந்தளாய் -127-83, கிளிநொச்சி -29-27, காங்கேசன்துறை - 157 - 94.

# திருடப்படும் கதியால்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கைவேலி முதலாம் வட்டாரத்தில் இது வரை மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத பகுதிகளில் உள்ள கிழுவங்கதியால்கள் திருடப்படுவதாகத் தெரியவருகின்றது.

பகல் வேளைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்குள் உள்நுழையும் திருடர்கள் அங்குள்ள வேலிகளில் வளர்ந்து நிற்கும் பால் கிழுவைக் கதியால்களை வெட்டி, சிறுகட்டுக்களாகக் கட்டி மறைவிடத்தில் வைத்துவிட்டு மாலைப்பொழுதாகியதும் எடுத்துச் சென்று விற்பனை செய்வதாகவும், ஒரு கிழுவங்கதியால இருபது ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்த ஆடி மாதத்தில் கிழுவங்கதியால்கள் வெட்டிப் பதிவைக்கும் காலமாகையால், திருடர்கள் இப்பொழுது இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (138)

## பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (04)

## வரலக்ஷ்மி பூசை

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி ஆலய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய வரலக்ஷ்மி வீரத விசேட பூசை வழிபாடுகள் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

# போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்தது மற்றும் குப்பை கூழங்களை பொது இடங்களில் போட்டு சூழலுக்கு பங்கம் விளைவித்தது சம்பந்தமாக நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்ட ஏழு வழக்குகளிலும் குற்றவாளிகளுக்கு எதிராக 15000 ரூபா தண்டம் யாழ். நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் போக்குவரத்திற்கு இடையூறு விளைவித்த இருவருக்கு எதிராக இரண்டு வழக்குகளில் தலா 5000 ரூபா தண்டமும் மற்றும் ஏனைய இருவகை வழக்குகளுக்குமாக 5 வழக் குகளுக்கு 5000 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. இவ்வழக்குகளை விசாரித்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராசா குற்றவாளிகளுக்கு இந்தத் தண்டங்களை விதித்தார். (பா)

## ஒன்றுகூடல்

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் நவாலி கிழக்கு முதியோர் சங்கமும் இணைந்து ஒன்று கூடல் நிகழ்வென்றை கடந்த வாரம் நடத்தியிருந்தது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இராஜரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முதியோர்களின் வாழ்க்கை பற்றியும் சூழ்நிலை பற்றியும் விழுது ஆற்றல் மேம்பாட்டு நிலைய வெளிக்கள உத்தியோகத்தர் இ.கோமதி உரையாற்றினார். அத்துடன் சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உமாபாலனும் உரையாற்றினார். (104)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை 25 நாட்கள் மாலை 6.45 மணி முதல் 7.45 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் இன்று ஆரம்ப நிகழ்வில் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் ஆசியுரை வழங்கவுள்ளார். தொடர்ந்து மங்கள இசை இடம்பெறும்.

# நல்லூர் கொடியேற்றம் இன்று



## கொடிச் சீலை வரலாறு

தானங்களில் சிறந்த தானம் எனச் சொல்லப்படும் நெசவுத் தொழிலை (வஸ்து தானம் ) பரம்பரை, பரம்பரையாகச் செய்து வரும் இவர்கள் கைக்கோளர் அல்லது செங்குந்தர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

எனினும், காலம் செல்லச்செல்ல இவர்களது நெசவுத் தொழில் இறக்குமதிப் புடவைகளால் பாதிக்கப்பட்டமையால் இவர்கள் நெசவுத் தொழிலைக் கைவிட்டு வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும், சிலர் இன்றும் தமது பரம்பரைத் தொழிலான நெசவுத்தொழிலைச் செய்துவருகின்றனர். முன்னையகாலங்களில் இந்தமக்களால் நெய்யப்பட்ட கொடிச்சீலையே பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும், காலப்போக்கில் இந்த சீலை நெய்யும் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், இவர்களே இன்றும் நல்லூரானுக்கு கொடிச்சீலை கொடுத்து வருகிறார்கள்.

கொடிச்சீலைத்தினத்தன்று நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து மங்கள வாத்தியங்கள் செங்குந்தர் வீதிக்கு கொடிச்சீலை கொண்டுவர அனுப்பப்படுகிறது.செங்குந்தா பரம்பரை எனப்படுபவர்கள் முருகப்பெருமானின் சகோதரர்களாகவும், படைவீரர்களாகவும் உடைய நவவீரருடைய வம்சாவழியினர் என குறிப்பிடுகின்றார்கள்.

எந்தக் கோவில்களிலும் கொடிச்சீலை மிகவும் புனிதமாக தாம்பாளத்தில் வைத்து உபயகாரரால் தலையில் சுமந்து கொண்டு மங்கள வாத்தியம் முழங்க கோவிலைச் சென்றடையும். ஆனால் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு கொடுக்கும் கொடிச்சீலை இப்படி சர்வசாதாரணமாகக் கொண்டு செல்லப்படுவதில்லை.

இந்தக் கொடிச்சீலையைக் கொடுக்கும் செங்குந்த மரபினர், தம்மால் செய்யப்பட்ட ஒரு சிறு தேரில் கொடிச்சீலையை ஏற்றி கொடியேறும் நாளுக்கு முதல் நாள் காலை மங்கள வாத்தியங்கள் முழங்க தேரில் வைத்து இழுத்துவருவார்கள். கோயிலின் வாயிற்புறத்தை தேர் வந்தடைந்ததும், தேரிலிலிருந்து கொடிச்சீலையை உபயகாரராகிய செங்குந்தப்பெருமகன் தலையில் சுமந்து சென்று கோவில் பிரதம குருக்களிடம் கையளிப்பார். இந்தக் கொடிச்சீலை எடுத்து வரும் தேர் கொன்றலடி வைரவர் கோவிலுக்கு அண்மையிலுள்ள வேல்மடம் முருகன் ஆலயத்திலிருந்தே வருடாவருடம் தேர்ச்சீலையை ஏற்றிக்கொண்டு ஆலயத்திற்குப் புறப்படும்.

செங்குந்தர் யாழ்ப்பாணத்தில் கல்வியங்காடு, கரவெட்டி போன்ற இடங்களிலும், வன்னியில் முள்ளியவளையிலும், திருகோண மலை, மட்டக்களப்பு, வவுனியா, போன்ற மாவட்டங்களிலும், தென் இந்தியாவிலும் இருக்கிறார்கள். இவர்கள் செங்குந்தா முதலியார் என அழைக்கப்படுகின்றார்கள்.

இந்தியாவிலிருந்து செங்குந்தா பரம்பரையினருக்கு பருத்திநூல் இறக்கியபடியால் பருத்தித்துறை எனப்பட்டது. இதேவேளை, பருத்தித்துறையின் கற்கோவளம் என்ற இடத்தில் இந்தியாவிலிருந்து கைக்கோளர் வந்து குடியேறியதனால் இந்தப் பெயர் உண்டாகியது.இந்தியாவிலிருந்து ஏழுவத்தைகளில் (தோணிகளில்) வந்த மக்கள் குடியேற்றிய இடமே திருநெல்வேலியிலுள்ள எழுவத்தை என்ற இடமாகும்.

அத்துடன், இந்தியாவிலிருந்து வள்ளத்தில் கற்கள் பருத்தித்துறை இறங்கு துறைக்குக் கொண்டு வரப்பட்ட போது அந்தக் கற்களை செங்குந்தா மக்கள் தொடர்ச்சியாக நின்று கைகளால் கற்களை மாறி மாறி கடத்தியே கரவெட்டிக் கிழக்கிலுள்ள யாக்கரை விநாயகர் ஆலயத்தினைக் கட்டி முடித்தார்கள் என இந்தப் பரம்பரையினர் குறிப்பிடுகின்றனர்.

நல்லூர் முருகன் ஆலயத்தைவிட வடமராட்சி வல்லிபுர ஆழ்வார், வயல்வெளிக்கந்தசுவாமி கோயில், ஒட்டுசுட்டான் சிவன்கோயில், யாக்கரைப் பிள்ளையார் கோயில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோயில், பருத்தித்துறை பசுபதீஸ்வரர் கோயில், கரவெட்டி நுணாவில் பிள்ளையார் கோயில், மாமங்கேஸ்வரர் கோயில் என்பவற்றுக்கும் இந்தப் பரம்பரையினரே கொடிச்சீலை கொடுத்து வருகின்றனர்.

கொடிச்சீலை கொடுக்க செங்குந்தா மக்கள் எவ்வாறு வந்தார்கள்?

தில்லையில் கோயில் எனச் சிறப்பித்துக் கூறப்படும் சிதம்பரத்தில் எழுந்தருளி இருக்கும் நடராசப் பெருமானுக்கு பூசை செய்யும் பாக்கியம் சந்தான குரவருள் ஒருவரான உமாபதி சிவாச்சரியாருக்குக் கிடைத்தது. உமாபதி சிவாச்சரியார் சோழமன்னன் கொடுத்த பல்லக்கிலே பூசைக்குச் சென்று வந்தார். உடனே, உமாபதி சிவாச்சாரியர் பல்லக்கை விட்டு இறங்கி மறைஞான சம்பந்தரின் பாதங்களில் விழுந்து வணங்கி அவரை குருவாக ஏற்றுக்கொள்ள எண்ணி பல்லக்கினை விட்டு இறங்கிய போது, தான் அவதூறு பேசியதால் தன்னை அடிப்பதற்காக உமாபதிவருகின்றார் என எண்ணிய மறைஞான சம்பந்தர் முன்னால் ஓட அவரை பின் தொடர்ந்து உமாபதியும் சென்றார். இருவரும் ஒருவர் பின் ஒருவராக நெசவு நெய்யும் தொழிலைச் செய்துவரும் செங்குந்தா மக்கள் வாழும் பகுதியினை அடைந்து விட்டனர். அப்போது தாகம் மிக வாட்டியதால் செங்குந்தரை தாகத்திற்கு ஏதாவது தரும்படி மறைஞான சம்பந்தர் கேட்டார். பாத்தோயும், கஞ்சிக்கூழுமே எம்மிடம் இருக்குதெனக் கூறி கஞ் சிக்கூழை அள்ளி வார்க்க மறைஞான சம்பந்தர் அதனை இரு கைகளையும், நீட்டி மண்டைக்கையில் குடித்தார். குருபக்தி கொண்ட உமாபதியார் மறைஞான சம்பந்தரின் கைகளினால் வழிந்த கூழை தன்னுடைய இரு கைகளினாலும் அள்ளிக் குடித்தார்.

இதனால் ஆத்திரம் அடைந்த மற்ற அந்தணர்கள் மன்னனிடம் முறையிட்டனர். மன்னன் அன்றிலிருந்து நடராசப் பெருமானுக்கு பூசை செய்ய உமாபதிக்கு மறுப்புத் தெரிவித்தான். மன்னனால் அவமானப்படுத்தப்பட்ட மறைஞானசம்பந்தர்செங்குந்தர்கள் வாழும் கொற்றவன் குடிசையில் அன்று முதல் வாழ்ந்து வந்தார். இதனால் அவருக்கு 'கொற்றவன் குடி முதலி' என்ற பெயர் வழங்கப்பட்டது.

மார்கழி மாதத்தில் தில்லைவாழ் அந்தணர் திருவிழா ஆரம்பமாகியது. ஆலயத்தின் திரைச்சீலை அரைக்கம் பத்தில் அறுந்து விழுந்தது. இதனால் குழப்பம் அடைந்தஅந்தணர்களும், அரசனும் நடராஜப் பெருமானிடம் முறையிட 'உமாபதி சிவாச்சாரியார் பூசகராகி அவர் பருகிய கூழைக் கொடுத்த செங்குந்தர் நெசவு செய்து அவர்களால் கொடுக்கும் கொடிச்சீலையே நமக்குப் பிரீதி' என அசரீரி கேட்டது.

இந்த அசரீரியைக் கேட்டதில்லை வாழ் அந்தணர்களும், அரசனும் உமாபதி சிவாச்சாரிடம் சென்று தம்மை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டனர்.உடனே உமாபதி யார் 'கொடிக்கவி' என்ற பிரபந்தத்தினைப்பாடசெங்குந்தர் கொடுத்தகொடி வழுவில்லாமல் மேலே ஏறியது. அன்றிலிருந்து செங்குந் தர்கொடுத்த கொடிச்சீலையே தில்லையில் ஏற்படுகின்றது.

## நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்ட கொடிச்சீலை!

வரலாற்று சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழாவிற்கான கொடிச்சீலை நேற்று (23.07.2012) காலை 10.00 மணிக்கு ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு ஆலயத்தின் பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.


யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று (24.07.2012) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில், கொடியேற்றத் திருவிழாவுக்காக ஏற்றப்படுகின்ற கொடி வருடா வருடம் செங்குந்த பரம்பரையினரால் வழங்கப்பட்டு வருவது வழக்கமாகும்.

வழமைபோல், இம்முறையும் கல்வியங்காட்டு பகுதியிலுள்ள செங்குந்த பரம்பரையைச் சேர்ந்தவர்களின் வீட்டிலிருந்து காலை 8.30 மணிக்கு எடுத்துவரப்பட்ட கொடிச்சீலை, கல்வியங்காடு வேல்மடம் முருகன்ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து சிறிய தேரில் வைக்கப்பட்டு நல்லூர் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டது.

காலை 10.00 மணியளவில் நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் இந்தக் கொடிச்சீலை கையளிக்கப்பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தக் கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் உற்சவங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# நீதிச் சுதந்திரத்தை ஒழிக்க அரசாங்கம் துணைபோகாது

## ஜனாதிபதி உறுதி



எமது அமைச்சரவை அமைச்சர் ஒருவர் தொடர்பில் நீதிமன்ற அச்சுறுத்தல் விடயத்தில் சந்தேகம் எழுந்துள்ளமை கவலையளிப்பதாகவும், நீதிச் சுதந்திரத்தை இல்லாமல் ஆக்குவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது அரசாங்கம் துணை போகாது என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் கண்டியில் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு சீரழிய இடமளிக்க முடியாது. சட்டம் ஒழுங்கு இல்லாமல் நாடொன்றை ஆட்சி செய்ய முடியாது. நாட்டின் சட்டத்தை உச்ச அளவில் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது

அன்று விவியன் குணவர்த்தன மனித உரிமைகள் வழக்கில் வெற்றிபெற்ற சந்தர்ப்பத்தில், தீர்ப்பு வழங்கிய நீதிபதியின் வீட்டுக்கு கல்லெறியப்பட்டது அன்று நாட்டின் ஜனநாயகம் இவ்வாறுதான் பாதுகாக்கப்பட்டது.

1978ஆம் ஆண்டில் அரசியல் யாப்புத் திருத்தம் செய்த சந்தர்ப்பத்தில் நீதிபதிகள் உச்சநீதிமன்ற நீதியரசர் முன்பாக சத்தியப்பிரமாணம் செய்தனர். ஆனால அது ஜனாதிபதிக்கு முன்பாக இடம்பெற வேண்டுமென்றும், சத்தியப்பிரமாணம் சரியான முறையில் இடம்பெறவில்லையென்றும் கூறி நீதிபதிகள் நீதிமன்றம் சென்றபோது, நீதிமன்றக் கதவுகள் இழுத்து மூடப்பட்டிருந்த யுகமும் இந்த நாட்டில் இருந்ததாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நான் தொழில் ரீதியாக ஒரு சட்டத்தரணி. எமது சட்டத் தொழில் துறையும், நீதித் துறையும் மிகவும் சிநேகபூர்வமாக செயல்படுகின்றன என்றார்.

# 100 வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப் பரிசில்



100 வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

இலங்கையை ஆசியாவின் கல்வி மையமாக பிரபல்யப்படுத்தும் நோக்கில் இவ்வாறு வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

சுமார் 48 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

புலமைப் பரிசில் வழங்கப்படும் குறித்த மாணவர்களுக்கு வீசா கட்டணங்கள் அறவிடப்படமாட்டாது.

வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுக்கும் நோக்கில் அரசாங்கம் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்களின் அடுத்த தலைமுறைக்கான பயிற்சிப் பட்டறையாக மாகாணசபைகள்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளும் கட்சியினரின் அடுத்த தலைமுறையினருக்கு பயிற்சி பட்டறையாக மாகாணசபைகள் அமைந்துள்ளன என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்பு மனுக்கள் வழங்கப்படமாட்டாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி பகிரங்கமாக அறிவித்திருந்தது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த வாக்குறுதி மீறப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டத்தில் எட்டு ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் நெருங்கிய உறவினர்கள் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்கவின் மகன் சமில திசாநாயக்க, தேசிய உரிமைகள் தொடர்பான அமைச்சர் ஜகத் பாலசூரியவின் மகன் தாரக பாலசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வை.ஜீ.பத்மசிறியின் மகள் வை.ஜீ. ஜனதாரி ஆகியோருக்கு சப்ரகமுவ மாகாண சபைக்கான ஆளும் கட்சி வேட்பு மனு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மக்களை ஏமாற்றி உறவினர்களுக்கு சந்தர்ப்பம் அளித்து வருகின்றது. அரசாங்கம் ஜனநாயக விரோத செயல்களிலேயே ஈடுபட்டு வருவதாக ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

# விரிவுரையாளர்கள் பிரச்சினையில் தலையிட மேர்வின் தயார்



(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராய தான் முன்வரவுள்ளதாக பொது மக்கள் தொடர்பு மற்றும் பொதுசனவிவகார அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொது மக்களை கஷ்டத்தில் தள்ளியுள்ள பிரச்சினை குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டியது தனது பொறுப்பு என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.


இந்நாட்டின் அறிவுடைய கற்றோர், கல்விமான்களை சந்திக்க விருப்பம் கொண்டுள்ளேன்.

பொது மக்கள் கஸ்டத்தில் விழுந்துள்ள நிலை காணப்பட்டால் அது குறித்து ஆராய்ந்து செயற்பட வேண்டியது அவசியம் என்றார்

இதேவேளை, அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்த நாளை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளன தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் பணிநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோட்டார் சைக்கிளை சுற்றிவளைத்த மலைப்பாம்பு



(கொழும்பு)

மோட்டார் சைக்கிளொன்றை செலுத்திச் சென்ற இளைஞர் ஒருவர் திடீரென தனது மோட்டார் சைக்கிளை 15 அடி நீளமான மலைப்பாம்பொன்று சுற்றி வளைத்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்த சம்பவம் களுத்துறை மாவட்டத்தின் வலல்லாவிட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காட்டுப்பகுதிக்குச் செல்லும் பாதையில் தனது நண்பர் ஒருவருடன் பயணம் செய்த அந்த இளைஞர், பாதையோரத்தில் மோடடார் சைக்கிளை நிறுத்தி விட்டு சென்றபோது அப்பாம்பு மோட்டார் சைக்கிளை அடைந்ததாக கருதப்படுகிறது.

அந்த இளைஞர் மீண்டும் பயணத்தை ஆரம்பித்தபோது, பாதத்தை மோட்டார் சைக்கிளில் வைத்திருப்பதில் சிரமத்தை எதிர்நோக்கினார். அதன்பின் மோட்டார் சைக்கிளை பாம்பு சுற்றிவளைத்ததை அவர் கண்டார். மண்ணெண்ணெய் மற்றும் பெற்றோலை விசிறியதன் மூலம் தாம் பாம்பை துரத்தியதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கதிரியக்க அனர்த்த முகாமை நிலையம் கற்பிட்டியில் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த மத்திய நிலையத்தை கற்பிட்டியில் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் கதிரியக்க அனர்த்தங்கள் ஏற்படின் அதிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

அத்துடன் அணு தொடர்பான அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது அணு தொழில்நுட்பம் மின் உற்பத்தி மாத்திரமன்றி விவசாயம், மருத்துவம் மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.

அணுசக்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

# வர்த்தகரின் வான் கொள்ளை

கொட்டாஞ்சேனை பகுதியில் வான் ஒன்று கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமா்ன சுமார் 22 இலட்சம் ரூபா பெறுமதியான வான் ஒன்று கொள்ளையிடப்பட்டுள்ளமை தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். கொள்ளையிடப்பட்ட வான் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், கொட்டாஞ்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கையில் விவசாயத் துறை அறிமுகம் செய்யப்பட்டு நூற்றாண்டு பூர்த்தியினை முன்னிட்டு கண்ணொறுவவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு வார விவசாய கண்காட்சியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்தார்.

# அனலைதீவு மயானம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டிவைப்பு



(யாழ்ப்பாணம்)

அனலைதீவு மக்களின் நீண்டகாலத் தேவையான மயானம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஊர்காவற்துறை பிரதேச சபைத தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் அப்பிரதேச அமைப்பாளருமான ம.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

ஊர்காவற்துறை பிரதேச மக்களின் பெருமளவு விருப்பு வாக்குகளுடன் பிரதேச சபை ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட ஈழமக்கள் ஜனநாயக் கட்சியானது பொது மக்களின தும் புலம்பெயர்ந்த மக்களினதும் ஒத்துழைப்புடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார் மற்றும் சில் வேஸ திரி அலன்டின் ஆகியோரின் அனுசரணையுடனும் தொடர்ச்சியான மக்கள் நலத் திட்டங்களை மேற்கொண்டுவருவது தெரிந்ததே.

அந்தவகையில் கனடாவாழ் அனலைதீவு புலம்பெயர்ந்த மக்களின் அமைப்பான கனடா ஒன்றியத்தின் அனுசரணையுடன் மேற்படி மயானம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டிவைக்கப் பட்டது. ஊர்காவறதுறை பிரதேச சபைத்தவிசாளரும் ஈ.பி.டி.பி.யின் அப்பிரதேச அமைப்பாளருமான ம.ஜெயகாந்தன் அடிக்கல்லை நாட்டிவைத்த அதேவேளை கனடா ஒன்றியத்தின் உபசெயலாளர் சிவம் வேலாயுதம் முன்னாள் அதிபர் காராளம்பிள்ளை பிரதேச முக்கியஸ்தர்களான நடராசா பத்மராசா ஆகியோர் உட்பட பொதுமக்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.

# ரம்ழான் நற்சிந்தனை



**ரமழான் மாதத்தில் பாவமன்னிப்பு கேட்காதவர், நபி(ஸல்) அவர்களின் பெயரை கேட்டபோது ஸலவாத்து கூறாதவர் வயோதிப பெற்றோர்களை உப சரிக்காதவர்கள் நாசம் அடைந்தவராவார்கள்.**

நூல் - ஹாகிம்

(105)

# புனரமைக்கப்படாத நிலையில் ஸ்ரீ கிருஷ்ணர் இந்து ஆலயம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - ஆனந் தபுரம் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கிருஷ்ணர் இந்து ஆலயம் கடந்த போர் அனர்த்தம் காரணமாக மிகவும் சிதைந்து அழிந்து போன நிலையில் காணப்படுகிறது.

கோவிலின் மூலஸ்தானம் முற்றிலுமாக சிதைவடைந்திருப்பதோடு, மடைப் பள்ளி மற்றும் குருக்களின் இல்லம் உட்பட வெளிமண்டபக் கொட்டகைகள் அனைத்தும் சிதிலமான நிலையில் காட்சியளிக்கின்றன.

அத்துடன் விநாயகர் விக்கிரகம் பெயர்க்கப்பட்ட நிலையில், ஆஞ்சநேயரின் இருப்பிடத்தில் வேறு விக்கிரகங்கள் இருப்பதோடு, வசந்த மண்டபக் கதவு உடைக்கப்பட்டு, அதற்குள் ஆலயத்தின் பலதரப்பட்ட பொருட்கள் அனைத்தும் அள்ளிக் குவிக்கப்பட்டு அவை பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவற்றோடு நவக்கிரகங்கள் சில சேதமான நிலையில் கோவிலின் உள் வீதி மற்றும் வெளி வீதிகளில் படர்புற்கள் நிரம்பிக் காணப்படுகின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களுள் ஆனந்தபுரம் - ஸ்ரீ கிருஷ்ணர் இந்து ஆலயமே மிகவும் மோசமாகச் சிதைவடைந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(138)

# ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் அமர்வுகள் கலையும், நுண்கலையும் சமூக விஞ்ஞானம், கல்வியியல், விவசாயம், தூயவிஞ்ஞானம், தொழிலநுட்பவியல் என்ற பிரிவுகளாக நடைபெற்றது. இரு நாட்களும் இடம்பெற்ற கலையும் நுண்கலையும் பிரிவிற்குரிய அமர்வுகளுக்கு துறைத்தலைவர்கள் தலைமை தாங்கினர். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன், .கலாநிதி க.ஸ்ரீகணேசன், பேராசிரியர் சுபதினி ரமேஷ், ஆ.இராசகு மாரன் ஆகியோர் தலைமை தாங்கி வழி நடத்தினர்.

தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் இன நல்லிணக்கத்திற்கு ஒப்பியல் இலக்கியம் எனும் விடயத்திலும், இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன், இந்து ஆலயங்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சினைகள் தொடர்பிலும், ஆங்கிலம் கற்றல், கற்பித்தல் நடைமுறை சிக்கல்கள் தொடர்பில் கலாநிதி இ.கயிலைநாதனும் ஆய்வு களை சமர்ப்பித்தனர். இவை முக்கியமான கட்டுரைகளாகும். பல ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் அறிக்கை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(62)

# அடிக்கடி பழுதடையும் நயினாதீவு அரச பேருந்து

(தீவகம்)

நயினாதீவு பிரதேசத்தில் பலவருடங்களாக சேவையில் ஈடுபடும் அரச பேருந்து அடிக்கடி பழுதடைவதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசத்தில் இப்பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபட்டுவருவதால் நாளாந்தம் சேவையில் ஈடுபடும் போது இடைநடுவில் பழுதடைவதாகவும் இதனால் அதில் பயணம் செய்யும் பயணிகள் நடந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உள்ளூர் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும், மற்றும் உத்தியோகத்தர்களும் இதனால் நேரம் தாமதமாகி செல்ல வேண்டியுள்ளதாகவும் மாணவர்களின் கல்வி இதனால் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பிரதேசத்திலுள்ள மக்களின் போக்குவரத்து தேவையை கருத்திற் கொண்டு சீரான பேருந்து சேவையை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(175)

# முரசின் இன்றைய பலன்

(24.07.2012 - செவ்வாய்க்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 09 ஆம் திகதி. பஞ்சமி
காலை 6.42 வரை. ஷஷ்டி பின்னிரவு 4.47வரை. நட்சத்திரம்
உத்தரம். முற்பகல் 11.31 வரை. அமிர்தசித்தம்
இராகுகாலம் 3.02 - 4.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை.
எமகண்டம் 9.02 - 10.32 வரை. குளிகன் காலம் 12.02 -1.32 வரை.
ஷஷ்டி விரதம் இரண்டாவது ஆடிச்செவ்வாய்

**சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | கேளிக்கை ஈடுபாடு, பிணைபோவதைத் தவிர்க்க, கால்நடைகளால் லாபம். |
| ரிஷபம் | நல்லநாள், ஆன்மிக ஈடுபாடு, ஆரோக்கியத்தில் கவனம், புத்திரரால் அனுகூலம். |
| மிதுனம் | கடன் தீரும், உறவினர்களால் பிரச்சினை, குடும்பத்தேவை அதிகரிப்பு, மறைமுகஎதிர்ப்பு. |
| கடகம் | சுகவிருத்தி, குடும்ப அன்னியோன்யம், அதிகாரிகளை அனுசரிக்கவும். |
| சிம்மம் | புகழாரம், பிணைபோகவேண்டாம், அரசாங்க உதவிகள், கால்நடைகளால் இலாபம் |
| கன்னி | அமைதிகிட்டும், மருத்துவச்செலவுகள், எதிரி ஆதரவுகிட்டும், சிக்கனம் அவசியம். |
| துலாம் | சாதனை புரிவீர், நண்பர்களுடன் நல் லுறவு, வெளிநாட்டு செய்தியால் ஆதாயம். |
| விருச்சிகம் | உதவிகள் கிட்டும், எதிலும் ஆர்வமின்மை, உடல் நலம் பாதிப்பு, அதிகாரிகள் கெடுபிடி. |
| தனுசு | புத்திமேன்மை, கவனம் தேவை, பிரச்சினைகள் தீவிரம் வேண்டாம், நண்பர் உதவி. |
| மகரம் | பிற்பகல் நன்று, போக்குவரத்தில் கவனம், பாதுகாப்புடன் செயற்படவும். |
| கும்பம் | சந்திராட்டமம் கூடாதநாள், விழிப்புணர்வுடன் செயற்படவும். |
| மீனம் | கூட்டுமுயற்சி, நினைத்த காரியம் கைகூடும், முன்னேற்றம். |

# அடிப்படை வசதியின்றி வாழும் புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பொதுமக்கள் பலரும் தங்களுக்கான அடிப்படை வசதிகள் இன்றி அல்லற்படுவதாகத் தெரியவருகின்றது.

இருப்பிடவசதி, குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் அற்ற நிலையில், பல மக்கள் சிரமம்படுவதோடு தமது வாழ்வாதாரத்துக்காகவும் கஷ்டப் படுவதாக அறியமுடிகின்றது.

ஆனந்தபுரம், சிவநகர் மற்றும் 7ஆம் வட்டாரம் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான கல்வீடுகள் மோசமாகச் சேதமடைந்திருப்பதோடு, மண்வீடுகள் பலதும் தரைமட்டமாக்கப்பட்டு, கூரைவீடுகள் எரிக்கப்பட்ட நிலையில் காணப்படுவதால் மீள்குடியேறிய மக்களில் பலர் சீரான இருப்பிட வசதிகள் இன்றி சிரமப்படுவதாகவும் தெரியவருகின்றது.

குடிநீர் கிணறுகள் பல மாசடைந்திருப்பதால் நன்னீருக்கு மக்கள் அலைவதையும், சில கிணறுகளுள் வாகன உதிரிப் பாகங்கள் குறிப்பாக டயர்கள் போன்ற பொருட்கள் போடப் பட்டுள்ள நிலையில், மக்கள் சிரமப்படுவதாகவும் தெரியவருகின்றது.

மீள்குடியேற்றம் செய்யப்படும் பொழுது சிறுதொகைப் பணமும் தரப்பாள், மரறீப்பை, கோடரி, கத்தி போன்ற சில பொருட்களும் மக்களுக்கு வழங்கப்பட்டதாயினும், இவையனைத்தும் தற்போதைய நிலையில் தமக்குப் போதுமானதாக இல்லை என மக்கள் தங்கள் விசனத்தையும் கவலையையும் வெளிப்படுதுவதாகவும் அறிய முடிகின்றது.

(138)



**யாழ் நெடுந்தீவு மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளரும், நெடுந்தீவு ஈ.பி.டி.பி அமைப்பாளருமான தானியல் றெக்சியன் மற்றும் கல்வி அதிகாரிகள், அதிபர்கள் வரவேற்கப்படுவதைக் காணலாம்.**

# தோழிக்காக ஓடும் வீராங்கனை

(லாகூர்)

பாகிஸ்தான் சார்பில் லண்டன் ஒலிம்பிக்கில் களம் இறங்கும் இரண்டு வீராங்கனைகளில் ராபியா இசாக்கும் ஒருவர். 20 வயதான இவர் 800 மீற்றர் ஓட்டத்தில் களம் இறங்கினார்.

அவர் அளித்த பேட்டியில், இந்த போட்டியில் பதக்கம் வெல்லும் வாய்ப்பில் நான் இல்லை என்பதை அறிவேன். இருப்பினும் இந்த ஒலிம்பிக்கில் பங்கேற்பதை சமீபத்தில் மரணமடைந்த எனது தோழி முபீக் அக்தருக்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

அவரும் ஒலிம்பிக்கில் கலந்து கொள்ள ரொம்ப ஆர்வமாக இருந்தார் என்றார். இந்த ஆண்டில் நடந்த சர்வதேச போட்டியில் 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் பங்கேற்ற தன் மூலம் பாகிஸ்தானின் மின்னல் வேக ஓட்டப்பந்தய வீராங்கனை என்ற சிறப்பை பெற்றவர் முபீன். துரதிஷ்டவசமாக கடந்த மாதம் தனது வீட்டின் மாடியில் இருந்து தவறி விழுந்து இறந்து போய் விட்டார்.

# இஸ்ரேல் வீரர்களுக்கு எதிராக விளையாட மறுத்தால் தண்டனை

(லண்டன்)

ஒலிம்பிக் போட்டியின்போது இஸ்ரேல் வீரர்களுக்கு எதிராக விளையாட மறுப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத் (ஐ.ஓ.சி.) தலைவர் ஜாக்ஸ் ரோஜ் தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக்கில் இஸ்ரேல் வீரர்களுக்கு எதிராக விளையாடாமல் புறக்கணிப்போம் என்று எகிப்து மற்றும் அரபு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் அறிவித்துள்ள நிலையில், இதுதொடர்பாக அவர் மேலும் கூறியது: ஒரு வீரருக்கு உண்மையிலேயே உடல் நலக்குறைவோ, காயமோ ஏற்படுமானால் அது ஏற்கத்தக்கது. யாராவது போட்டியிலிருந்து விலகினால் அவர்களுக்கு சுதந்திரமான மருத்துவக் குழுவைக் கொண்டு மருத்துவ பரிசோதனை நடத்துவோம்.

அப்போது அவர்களுக்கு உடல்நலக்குறைவு இல்லாத நிலையில், தவறான தகவல் அளித்திருப்பது தெரியவந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒரு நாட்டு வீரருக்கு எதிராக விளையாட முடியாது என்றுகூறி மற்றொரு நாட்டைச் சேர்ந்த வீரர் விலகுவது தடை செய்யப்பட்டுள்ளதாக அனைத்து நாடுகளின் ஒலிம்பிக் கமிட்டிக்கும் நாங்கள் ஏற்கெனவே தெரிவித்துவிட்டோம் என்றார்.

2004இல் ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் குத்துச் சண்டை போட்டியின்போது இஸ்ரேல் வீரர் இகுட் வக்ஸடன் மோத நேர்ந்தபோது ஈரான் வீரர் அராஸ் மிரேஸ்மெயில் விலகினார். ஆனால் அவருக்கு உடல்நலக்குறைவு ஏதும் இல்லை வேண்டுமன்றே போட்டியிலிருந்து விலகியுள்ளார் என்பது பின்னாளில் தெரியவந்தது.

# நடாலுக்குப் பதில் பாகசோல்

முழங்கால் பிரச்சினை காரணமாக லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இருந்து ஸ்பெயின் டென்னிஸ் வீரர் ரபேல் நடால் விலகியதைத் தொடர்ந்து, ஸ்பெயின் அணியின் தேசியக் கெடியை ஏந்திச் செல்லும் வாய்ப்பு அந்நாட்டு கூடைப்பந்து அணி வீரர் பாகசோலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது மகிழ்ச்சியான விடயம் என பாகசோல் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடக்க விழாவில் பெக்காம்



(லண்டன்)

இங்கிலாந்து கால்பந்து அணியின் முன்னாள் கப்டன் 37 வயதான டேவிட் பெக்காமுக்கு ஒலிம்பிக் கால்பந்து அணியில் இடம் கிடைக்கவில்லை. தான் பிறந்த ஊரில் நடக்க போகும் ஒலிம்பிக்கில் களம் காணும் கனவுடன் இருந்த அவர் இங்கிலாந்து அணியின் மேலாளரின் முடிவால் அதிர்ச்சி அடைந்தார்.

இந்த நிலையில் ஒலிம்பிக் தொடக்க விழாவில் கலந்து கொள்ள பெக்காமுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அணியில் இடம் பெறாவிட்டாலும், ஒலிம்பிக்கில் பங்கெடுக்க வாய்ப்பு அளிக்கப்பட்டதால் பெக்காம் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளார்.

# முடியாது என்று எதுவும் இல்லை



சூர் யானி

என்னைப் பொறுத்தவரை முடியாதது என்று எதுவும் இல்லை. இதுவும் ஒரு சவால் என மலேசியா சார்பாக ஒலிம்பிக்கில் பங்கேற்கும் கர்ப்பிணியான நுர்சூர்யானி தெரிவித்தார். ஒலிம்பிக்கில் பங்கேற்கும் அனுபவத்தை அம்மா வீராங்கனை நுர்சூர்யானி கூறியதாவது:- ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிக்கு முன்பாக நான் கர்ப்பமடைந்திருப்பது தெரியவந்தது. இதனால் எனது ஒலிம்பிக் கனவு கலைந்து விட்டதாக அதிர்ந்தேன். சரி இனி, குழந்தையைப் பெற்றெடுப்பதில் கவனம் செலுத்தலாம் என்ற முடிவுக்கு வந்தேன். இந்த சூழ்நிலையில் தான் 10 மீற்றர் ஏர் ரைபிள் பிரிவில் தகுதி அடிப்படையில் ஒலிம்பிக்குக்கு தேர்வு செய்யப்பட்டேன். அதன் பிறகு தான், கர்ப்பமாக இருந்தாலும் பரவாயில்லை எந்த வழியிலாவது ஒலிம்பிக்குக்கு செல்லும் சிந்தனை எனது மனதில் உதித்தது. என்னை பொறுத்தவரை முடியாதது என்று எதுவும் இல்லை. இதுவும் ஒரு சவால் தான். ஒலிம்பிக்கில் பங்கேற்கும் முடிவை கைவிட்டிருந்தால், வாய்ப்புக்காக அடுத்த 4 ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். யாருக்கு தெரியும் அடுத்த ஒலிம்பிக்குக்கு தகுதி பெறாமல் கூட போகலாம். எனது இலக்கு களத்தில் மிகச்சிறப்பாக செயல்பட வேண்டும். முடிவு எப்படி இருந்தாலும் பரவாயில்லை. தங்கப்பதக்கம் வெல்வதை குறிக்கோளாக கொண்டிருந்தால், அதனால் நெருக்கடி தான் உருவாகும் எனத் தெரிவித்தார்.

# சாதிக்க தூண்டுவது அணியின் உடையே



(அம்பாந்தோட்டை)

இந்திய அணியின் உடையே சாதிக்க தூண்டுகிறது. இதை அணிந்ததும் சிறப்பாக விளையாட வேண்டும் என்ற பொறுப்பு வந்துவிடும் என, இந்திய வீரர் விராத் ஹோலி தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் சதம் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதற்கு, இந்திய அணியின் உடை தான் முக்கிய காரணம். இதனை அணிந்து விளையாடுவதன்மூலம், போட்டியில் சாதிக்க ஊக்கமளிக்கிறது. தவிர, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்ற கூடுதல் பொறுப்புணர்வை ஏற்படுத்துகிறது.

அம்பாந்தோட்டையில் உள்ள மைதானத்தில் முன்னதாக விளையாடிய அனுபவம் இல்லாததால், களத்தடுப்பில் சில தவறுகளை செய்தோம். பின் உடனடியாக திருத்திக் கொண்டதால், இலங்கையின் ஓட்ட வேட்டையை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தது. இங்கு இரண்டாவதாக ஆடுவது சற்று கடினமானது. பந்து வேகமாக துடுப்பை நோக்கி வருவதால், கணித்து அடிப்பது சவாலானது எனத் தெரிவித்தார்.

# மகிழ்ச்சியில் ஸ்மித்தின் மனைவி

(டர்பன்)

கணவரின் ஆட்டத்தை பார்த்தபோது எனக்கு பனிகுடமே உடைந்து போய் விட்டதாக நினைத்தேன் என தென்னாபிரிக்க அணித் தலைவர் ஸ்மித்தின் மனைவி தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் சதம் அடித்து தென்னாபிரிக்க அணிக் கப்டன் ஸ்மித் சாதனை படைத்தார். ஏனெனில் இது ஸ்மித்துக்கு 100ஆவது டெஸ்டாகும். இதன் மூலம் செஞ்சுரி டெஸ்டில் செஞ்சுரி கண்ட 7ஆவது வீரர் என்ற சிறப்பை அவர் பெற்றார். ஸ்மித்தின் மனைவி மோர்கன் டீன் தற்போது நிறைமாத கர்ப்பிணியாக இருக்கிறார். அடுத்த வாரத்தில் அவருக்கு முதலாவது குழந்தை பிறக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த டெஸ்ட் முடிந்ததும் ஸ்மித் தாயகம் திரும்பி விட்டு, ஆகஸ்ட் 2ஆம் திகதி தொடங்கும் 2ஆவது டெஸ்டுக்குள் இங்கிலாந்துக்கு மீண்டும் வந்து விடுவார். இதற்கிடையே ஸ்மித்தின் சதத்தை தொலைக்காட்சியில்பார்த்துக் கொண்டிருந்த அவரது மனைவி மகிழ்ச்சியில், தமாசாக டுவிட்டர் இணையதளத்தில், கணவரின் ஆட்டத்தைப் பார்த்து எனது பனிகுடமே உடைந்து போய் விட்டதாக நினைத்தேன். அவரை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன் என்றார்.

# யாரும் என்னை நம்பவில்லை

நான் உண்மையாக காதலித்தாலும் யாரும் என்னை நம்புவது இல்லை என்று நட்சத்திர கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ வருத்தம் தெரிவித்துள்ளார். போர்த்துக்கல் அணியின் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு பல தோழிகள் உள்ளனர்.அவருக்கு ஒரு ஆண் குழந்தை கூட உண்டு. ஆனால் அந்த குழந்தைக்கு தாய் யார் என்று இன்று வரை உலகுக்கு தெரியாது.

அந்த குழந்தையை ரொனால்டோவின் சகோதரி வளர்த்து வருகிறார். தற்போது ரொனால்டோ ரஷ்யாவை சேர்ந்த பிரபல மாடல் அழகி இரியானா கூஷாயக்குடன் சுற்றி திரிகிறார்.

இந்நிலையில் தொலைக்காட்சி ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், பெரும்பாலும் பெண்களின் இதயத்தையே பார்த்தே நான் காதலிக்கிறேன். ஆனால் யாரும் என்னை புரிந்து கொள்வது இல்லை.



நான் அவர்களுக்கு உண்மையாக இருந்தாலும் அவர்கள் என்னை நம்புவது இல்லை என்று தனது வருத்தத்தை பகிர்ந்து கொண்டுள்ளார். மேலும் தனது மகன் குறித்து கூறுகையில், எனது மகன் பிறந்தது எனது வாழ்க்கையில் மறக்க முடியாக நிகழ்ச்சி. அவன் என்னைப் போலவேஇருக்கிறான். வீட்டில் இருக்கும் சமயத் தில் எப்போதும் என் மார்பின் மீதுதான் உறங்கு கிறான். கால்பந்து போட்டிக்காக அவனைவிட்டு பிரிந்து செல்வதுதான் எனக்கு கடினமான விடயமாக இருக்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

# முச்சதம் அடித்து அம்லா சாதனை

(லண்டன்)

முச்சதம் அடித்த முதல் தென்னாபிரிக்கா வீரர் என்ற சாதனையை அம்லா படைத்துள்ளார்.


இங்கிலாந்துக்கு எதிரான ஓவல் டெஸ்டில் 311 ஓட்டங்களை ஆட்டமிழக்காது அம்லா பெற்றார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முச்சதத்தை ருசித்த முதல் தென்னாபிரிக்க வீரர் என்ற சிறப்பை இவர் பெற்றார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தானுக்கு எதிராக டிவில்லியர்ஸ் 278 ஓட்டங்கள் எடுத்ததே தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரரின் அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையை இருந்தது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை 26 முறை முச்சதம் அடிக்கப்பட்டுள்ளன. அதில் 8 இங்கிலாந்துக்கு எதிராக எடுக்கப்பட்டவையாகும். மேற்கிந்தியத்தீவு வீரர் லாரா 400 ஓட்டங்கள் (இங்கிலாந்துக்கு எதிராக) எடுத்ததே டெஸ்டில் அதிகபட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

1990ஆம் ஆண்டுக்கு பிறகு இங்கிலாந்தில் மண்ணில் நிகழ்த்தப்பட்ட முதல் முச்சத சாதனை இதுவாகும்.



# நெருக்கடியான நிலையில் இங்கிலாந்து



தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி நெருக்கடியான நிலையில் உள்ளது. இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய தென்னாபிரிக்க அணி அம்லா, கலிஸ், ஸ்மித் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 377 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இறுதியில் தென்னாபிரிக்கா அணி இரண்டு விக் கெட்டுக்களை இழந்து 637 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் அம்லா ஆட்டமிழக்காது 529 பந்துகளை எதிர்கொண்டு 35 பவுண்டரிகள் அடங்கலாக 311 ஓட்டங்களையும், கலிஸ் 326 பந்துகளை எதிர்கொண்டு 23 பவுண்டரிகள் அடங்கலாக 182 ஓட்டங்களையும் பெற்றனர். கலிஸ் டெஸ்ட் அரங்கில் 43ஆவது சதமாக இது பதிவானது 36 வயதான கலிஸ், டெஸ்டில் அதிக சதம் அடித்தவர்களின் பட்டியலில் இரண்டாமிடத்தில் உள்ளார்.252 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணி நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்த வேளை நான்கு விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் அணித் தலைவர் ஸ்ரோர்ஸ் 27, பீற்றர்சன் 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஸ்ரெயின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.



பூநகரி நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட இரணைமாதாநகர் அணிக்கு கிளிநொச்சி மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் தவநாதன் கிண்ணம் வழங்குவதைக் காணலாம்.

# தேசியத்தில் இடம்பிடிக்க தொடர் பயிற்சி அவசியம்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச்சிறந்த கால்பந்தாட்ட அணிகள்பூநகரி பிரதேசத்திலே உள்ளன. இவ்வணிகள் தொடர்ந்து பயிற்சிகளை மேற்கொள்வதனூடாக தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என ஈ.பி.டி.பி கட்சியின் கரைச்சி பிரதேசசபை உறுப்பினரும், கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் ஆலோசகருமான அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார்

பூநகரி மத்தி நண்பர்கள் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில். கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச்சிறந்த கால்பந்தாட்ட அணிகள் பூநகரி பிரதேசத்திலே உள்ளன. கடந்த காலங்களில் நடைபெற்ற கால்பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் மூலம் இது உணரப்பட்டிருந்தது. இந்நிலையில் மீள்குடியேற்றத்திற்கு பின்னர் இன்று நடைபெற்ற சுற்றுப்போட்டியின் மூலம் அது மீளவும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. மேலும் இவ் அணிகள் வெற்றிதோல்விகளை சமமாக ஏற்று செயற்படக்கூடிய பொறுப்புணர்வு மிக்க அணிகளாகவும் திகழ்கின்றன. அத்தோடு இன்று நடைபெற்ற போட்டியானது கிளிநொச்சி மாவட்டத்திலும் தேசிய மட்ட போட்டிகளில் பங்கு கொள்ளக்கூடிய திறன்வாய்ந்த கால்பந்தாட்ட அணிகள் உள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளது. எனவே இவ்வணிகள் தொடர்ந்து பயிற்சிகளை மேற் கொள்வதனூடாக தேசிய மட்ட போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.



விளையாட்டுச் செய்திகள்

# கிராமம் நோக்கிய கால்பந்தாட்டம் நாடு முழுவதும் 3140 போட்டிகள்

(கொழும்பு)

கால்பந்தாட்ட விளையாட்டை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதற்காக 314 பிரதேச செயலாளர் பிரிவுகளை இலக்கு வைத்து நாடு முழுவதும் 3140 போட்டிகள் நடத்தப்படும். தேசிய மட்டத்துக்கு அதிலிருந்து 30 வீரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டு உள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மாகாண விளையாட்டுப் பணிப்பாளர்களுடன் அமைச்சில் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் 10 கால்பந்தாட்டக் குழுக்களுக்கு இடையில் போட்டி நடத்தப்படும் அதில் திறமையானோர் தெரிவு செய்யப்பட்டு 314 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடையில் போட்டி நடத்தப்படும். 25 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் 25 குழுக்கள் போட்டியில் பங்கு கொள்ளும். திறமையான 30 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு தேசிய மட்டத்துக்கு கணிக்கப்படுவர்.

பிரதேச செயலாளர் பிரிவுக்கு 10,000 ரூபா, மாவட்டக் குழுக்களுக்கு 30,000 ரூபா, மாகாண மட்ட குழுக்களுக்கு 50,000 ரூபா விடேச கொடுப்பனவாக வழங்கப்படும். அக்டோபர் 1 முதல் 31 ஆம் திகதி-வரை மாவட்டப் போட்டி நடத்தப்படும். இறுதிப்போட்டி டிசம்பர் 15 ஆம் திகதி கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் உயர்ந்த திறமைகளை வெளிக்கொண்டுவரும் 30 வீரர்களை உள்ளடக்கிய கால்பந்தாட்ட மையம் அமையும்.

இந்த மையத்தில் சேரும் வீரர்களுக்கு மாதாந்தம் 75,000 ரூபா விசேட கொடுப்பனவு, உணவு, மருந்து மற்றும் பொருட்களும் வழங்கப்படுமென விளையாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது.

# 214 ஓட்டங்களால் கொக்குவில் இந்து பெரு வெற்றி

(யாழ்ப்பாணம்)

கீர்த்திகனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 215 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டம் ஒன்று கடந்த 14ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீர்த்திகன் 62, லிங்கநாதன் 53, தனலக்ஷன் 52, பவிதரன் 28, சத்தியன் 52 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யசோகுலன் நான்கு, முரளிதரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 319 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் ஜெனதர்ஷன் 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் லிங்கநாதன், ஞானசாந் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியை வீழ்த்தியது யாழ். இந்து


(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஒருநாள்கிரிக்கெட் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அணி 294 ஓட்டங்களால் பெரு வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்றுப் போட்டி ஒன்று கடந்த 16ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி யாழ். இந்துவை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது. இதன் அடிப்படையில் களமிறங்கிய யாழ். இந்துவின் துடுப்பாட்டம் ஆரம்பம் முதலே அதிரடியாக ஆடியது. இறுதியில் யாழ். இந்து 40 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 390 ஓட்டங்களை பெற்றது. இதில் சஜீகன் 88 பந்துகளில் 136 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மதுசன் 19 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்றார். சிவஜனன் 46, றுக்ஸ்மன் 43 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் ஜெனித்தன் 4, கபிலன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 390 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய கிளிநொச்சி மத்தியகல்லூரி அணி 17 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுத்தோல்வியைத் தழுவியது. இதில் ஜெனுசன் 31, ஜெனித்தன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுசன்3, குகானந் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். (93)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் இடம் பெற்ற மாகாணமட்ட கராத்தேப் போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்ற கிளிநொச்சி இந்துக் கல்லூரி வீரர்களுடன் பொறுப்பாசிரியர் ரஞ்சன் மற்றும் கராத்தே பயிற்றுநர் சென்சே விஜயராஜ் ஆகியோரைக் காணலாம். (எஸ்.பி.)

# 52 ஓட்டங்களால் மானிப்பாய் இந்து வெற்றி

(மானிப்பாய்)

சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 52 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 32.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜன்ஷன் 25, குகபிரசாத் 46, பிரதீபன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யசோகுலன் ஐந்து, வினோஜன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 182 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 41. 1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சரண்ராஜ் 35, நிரோஜன் 21, நிருஜன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் குகபிரசாத் ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (எஸ்.பி.)

# வன்முறையின் தோல்வி!

- எஸ்.செந்தில்குமார் கட்டுரையிலிருந்து.

தமிழர் பிரச்சினைக்கு ஆயுதமே தீர்வைக் கொடுக்கும் என்கிற முரட்டுப் பிடிவாதம் கொண்டிருக்கும் இன்னொரு பிரபாகரன் பிறக்க வாய்ப்பே இல்லை என இந்தியா ருடேயிடம் கூறினார் 30 ஆண்டுகளாக இலங்கைத் தமிழர் பிரச்சினையை கூர்ந்து கவனித்து வரும் மூத்த பத்திரிகையாளர் எஸ்.முராரி. ஒரு கெரில்லா படையை சப் கன்வென்ஷனல் போர் முறைக்கு மாற்றி விட்டதாக ஒரு பொய்க்காட்சியில் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளத் தொடங்கிய நாளில் அவர்கள் வீழ்ச்சியடையத் தொடங்கினார்கள் என்கிறார் அவர்.


புலிகள் போன்ற ஒரு கெரில்லா படையால் ஏராள-மான இராணுவப் போர்வீரர் களைக் கொண்ட இலங்கை போன்ற அரசுப்படையை வழக்கமான போர் முறையில் எதிர்கொள்ளவும் முடியும் என புலிகள் நம்பினார்கள்.

2009 போரின் இறுதிக் கட்டத்தில் மூன்று கம்பனி இராணுவம் (40,000பேர்) புலிகளுக்கு எதிராக முன்னேறியது. புலிகள் படையில் 10,000 பேர் இருந்திருக்கலாம். இப் படிப்பட்ட நிலையில் எதிரிப்படைகளிடம் பிரதேசம் பறிபோகாமல் காப்பாற்ற முடியுமா? என்று கேள்வி எழுப்புகிறார் முராரி. ஆனால் பின்வாங்கிச் சென்ற கடைசிக் கட்டம் வரை பிரபாகரன் கொல்லப்படுவார் என யாரும் எதிர்பார்க்க வில்லை. எல்லாமே சாதுரியமான பின்வாங்கல் என்றே கருதப்பட்டது.

முள்ளிவாய்க்காலுக்குப் பிறகான மூன்று ஆண்டுகளில் பிரபாகரனின் மரணத்தை ஏற்கத் தயாராக இல்லாத தமிழ் மன எண்ணச் சிதறலுக்கு இணையமே சாட்சி. பிரபாகரன் கடவுள் மாதிரி என்கிறார்கள். இல்லை என்கிறார்கள். ரட்சிக்க வருவார் என்கிறார்கள். வரமாட்டார் என்கிறார்கள் என்று பேசுகிறது மணிமலர் என்பவரின் இணைய கவிதை.

பிரபாகரன் இறந்து விட்டாரா இல்லையா என்பதை விவாதிக் கக் கூட தாங்கள் தயாரில்லை என்று இந்தியா ருடேயிடம் கூறினார் நாம் தமிழர் அமைப் பின் தலைவர் சீமான். அவர் இருக்கிறார் என்ற நம்பிக் கையே தமிழர் நலனுக்கான எங்கள் அரசியலை நடாத்த உத்வேகம் கொடுக்கும் போது நாங்கள் ஏன் இலங்கை அரசாங்கத்தின் பொய்களை நம்பவேண்டும்?. செத்ததாக இலங்கை அரசு காட்டிய உடல் தொடர்பாக பதில் இல்லாத ஏராளமான மர்மங்கள் உள்ளன என்கிறார் அவர்.

ஆயுத தளத்தில் பிரபாகரன் முன்வைத்த ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் பாதை முற்றி



லுமாக அடைபட்டு விட்டது. ஆனால் தமிழ்தேசியவாத அமைப்புகளும் தலைவர்களும் அதை ஏற்கத் தயாராக இல்லை. பிரபாகரனின் மரணத்தையே ஏற்காதவர்கள். அவர் முன்வைத்த அரசிய லின் மரணத்தையா ஏற்கப் போகிறார்கள்?. பிரபாகரன் இறந்ததாக ஒப்புக்கொண்டால் தாங்கள் முன்வைக்கும் தமிழ்த்தேசியவாதம் செத்து விடும் என அஞ்சுவதால் பிரபாகரனின் இறப்பை அங்கீ கரிக்க மறுக்கிறார்கள் என்கி றார் பத்திரிகையாளர் பாரதி.

27 வருடங்கள் கழித்து தனித்தமிழ் ஈழம் அமைப்பதற் கான டெசோ அமைப்பிற்கு புத்துயிர் கொடுத்துள்ள தி.மு.க தலைவர் மு.கருணாநிதி கூட பிரபாகரனின் மரணத்தை வெளிப்படையாக ஏற்கவில்லை. பிரபாகரனின் மரணம் பற்றிய கேள்விகளுக்கு வீரர்களுக்கு மரணம் என்பதே இல்லை என்பது பொத்தாம் பொதுவாகத்தான் பதில் சொல்கிறார். கால்நூற்றாண்டு களுக்கு முன்பு ஆயுதப்போ ராட்டம் மூலம் தனித் தமிழ் ஈழத்தை எட்டும் நோக்கிற்காக டெசோ மூலம் நிதி திரட்டி போராளி குழுக்களுக்கு வழங்கியவர் கருணாநிதி. ஆனால் இம்முறை வன்முறை அல்லாத வழிகளில் ஈழம் எட்டப்பட டெசோ பாடுபடும் என நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருக்கிறார். பிரபாகரன் பாணி ஆயுத அரசியலுக்கு கொள்கை அளவில் கூட ஆதரவு தர முடியாத சமகால சூழலையே இது காட்டுகிறது.

முள்ளிவாய்க்கால் மனிதப் பேரழிவிற்குப் பிறகு பிரபா-கரனின் தீவிர அபிமானிக-ளிடையே இராணுவத் தீர்வில் அவர் வைத்திருந்த பிடிவாதம் மீது எதிர்மறை மனோபாவம் ஏற்பட்டிருக்கிறது. பிரபாகரனின் இரசிகராக அறியப்பட்ட தூத்துக்குடியை சேர்ந்த ஸே.லெனின் (30) பிரபாகரன் மீண்டும் பிறந்து வரவேண்டும் என்கிறார். ஆனால் ஒரு அரசியல் தலைவராக அவர் பிறக்கவேண்டும். அந்த தனிந பரைத் தாண்டி பல்லாயிரக் கணக்கான மக்கள் செத்து மிகப்பெரிய துயரம் நிகழ அனுமதிக்கப்பட்டது பெரிய துயரம் என்கிறார் அவர்.

சகபோராளிகளைக் கொன்றது. தமிழ், முஸ்லிம் களை ஓரிரவில் அகதிகளாக விரட்டியடித்தது, சொந்த மக்கள் கொத்து கொத்தாக மடியக் காரணமாக இருந்தது, குழந்தைகளை போரில் திணித் தது, நடமாடும் சிறைச்சாலை கள், சித்திரவதைக்கூடங்களை வைத்திருந்தது ஆகிய அனைத்தையும் மீறி நாயக அந்தஸ்து பிரபாகரனின் பிம்பத்தோடு ஒட்டிக்கொண்டி ருக்கிறது. வெறுமனே விடுதலைப்புலிகளின் வலுவான ஊடகப்பலம் கட்டமைத்த பிரபாகரனின் பிம்பம் அல்ல இது என்கிறார் எழுத்தாளரும் உயிர்மை பதிப்பாளருமான மனுஷ்யபுத்திரன். சேகுவரா



போன்ற ஒரு ஆளுமை போல வந்திருக்க வேண்டியவரான பிரபாகரன் தனது எதேச்சா காரத்தாலும் பிற தவறுக-ளாலும் அதை இழந்தார் என குறிப்பிட்டார் அவர்.

# பொறுப்பும் பொறுப்பின்மையும்



"ஒருவர் தீக்குளித்தால் அதைத் தடுப்பதும் தீயை அணைப்பதும் சமூக சேவகர் வேலை, அதைப் படம் பிடிப்பதும் செய்தியாக்குவதும் பத்திரிகையாளன் வேலை" என்பது நான் ஊடகத்துறையில் சேர்ந்த போது மூத்தோர் சொல்லித்தந்த பாலபாடம். முதலில் நான் முதலாளி ஒரு-வரின் அச்சு ஊடகத்தில் பணி செய்ததால் பாலபாடம் இப்படி இருந்தது இயல்புதான் என்பதைப் பிறகு புரிந்து கொண்டேன்.

சில நேரங்களில் இந்தப் பாலபாடம் சரியானதாகவும் மனதில்படும். பொலிஸ் துப்பாக்கிச்சூடு, தடியடி, கொடூரத் தாக்குதல் போன்றவற்றை அம்பலப்படுத்த ஊடகங்கள் உதவுகின்றன என்பதை மறுத்துவிட முடியாது அல்லவா? புகைப்படக் கலைஞர்களின் கமெரா கண்கள்தானே ஆயிரம் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அநியாயங்களைக் கண்முன் விரிக்கின்றன நியாய உணர்வைத் தூண்டுகின்றன. தாமிரபரணி ஆற்றில் மக்களைப் பொலிஸ் தள்ளிவிட்டு மரணிக்கச் செய்த சம்பவம், மும்பை குண்டுவெடிப்புச் சம்பவம், குஜராத் படுகொலைகள் என ஏராளமாக சொல்லிக் கொண்டே போகலாம்.

இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அசாம் மாநிலத்தில் ஒரு பெண் பட்டப் பகலில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதும் அதனைப் படம் பிடித்து "நியூஸ் லைவ்" என்ற தொலைக்காட்சி அலை-வரிசை வெளியிட்டதும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. ஆளும் வர்க்கமோ அதிகார வர்க்கமோ மக்களுக்கு இழைக்கும் கொடுமை-களைப் படம் பிடித்து அம்பலப்படுத்துவதும் இளம் பெண் ஒருவருக்கு சமூக விரோத கும்பலால் இழைக்கப்படும் கொடுமையைப் படம் பிடித்து நேரலை போல் காட்சிப்படுத்துவதும் சமமாகுமா? படம்பிடிக்கப்பட்டாலும் அதை வெளியிடுவதா? வேண்டாமா? எந்த அளவுக்கு என்பதையெல்லாம் தீர்மானிக்கும் பொறுப்பு தொலைக்காட்சி அலைவரிசைக்கு இல்லையா? "நியூஸ் லைவ்" என்பதால் இப்படிப்பட்டக் கொடுமைகளை உள்ளது உள்ளபடி காட்டுவது பொறுப்பா? பொறுப்பின்மையா?

இந்தச் செயல் சரிதான் என்கிறார் தேசிய மகளிர் ஆணையத் தலைவர் மம்தா சர்மா. "மீடியாக்களின் உதவி இல்லாவிட்டால் இப்படி ஒரு சம்பவம் நடந்ததே பலருக்கும் தெரியாமல் போயிருக்கும்" என்பது அவரது வாதம்.

இது ஒரு பக்கம் இருக்க, தொலைக் காட்சி அலைவரிசை ஒன்றின் நிருபர் ஒருவர் அந்த இளம் பெண்ணை மானபங்கம் செய்யும்படி தூண்டிவிட்டதாகப் புகார் எழுந்துள்ளது. இதுபற்றி சிஜடி விசாரணை நடத்த மாநில அரசால் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இந்த நிரு-பர் தூண்டிவிட்டார் என்பதற்கு வீடி-யோ ஆதாரம் இருப்பதாகவும் அதனை விசாரணை அதிகாரியிடம் கொடுக்கப் போவதாகவும் ஒருவர் கூறியிருக்கிறார்.

ஒருவேளை இது உண்மையாக இருக்குமானால் ஊடகங்களுக்கு இடையேயான போட்டி வெறி இப்படியெல்லாம் பரபரப்புகளை உருவாக்க திட்டமிட்டு கொடுமைகள் நிகழ்த்தப்படுகிறதோ என்ற ஐயம் ஏற்படும் அல்லவா? மக்கள் நம்பிக்கை கொள்கிற சமூகப் பொறுப்புமிக்க ஊடக ஊழியர்கள் இப்படி பொறுப்பற்று நடந்து கொள்வார்களா? நடந்து கொள்ளலாமா?



பொறுப்பின்மை எத்தகைய சமூகக் கொடுமைக்குக் காரணமாகிறது என்பதை உணர்வது அவசியம்.

- மயிலை பாலு.

# உங்கள் அந்தரங்க வெளி சுருங்குகிறது

9/11 சம்பவத்திற்குப் பிறகு உலகெங்கிலும் உள்ள அரசுகள் தத்தம் மக்கள் மீதான கண்காணிப்பை அதிகப்படுத்தியுள்ளன. தனிமனிதனின் அந்தரங்கம் இதனால் பறிபோகிறது என்று ஜனநாயகவாதிகள் கதறுகின்றனர். இவர்கள்




கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. அரசு தனது நடவடிக்கைகளுக்கு வழக்கம் போலவே புதுப் புது நியாயங்களை கற்பிக்கிறது. இன்னும் இந்த விவாதம் நடந்து கொண்டுதானிருக்கிறது. குறிப்பாக அமெரிக்காவில் இந்த விவாதம் ஆவி பறக்கிறது. ஆனால் அமெரிக்க அரசு தனது நடவடிக்கையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியிருக்கிறது. அடுத்த இரண்டு வருடங்களில் அமெரிக்க அரசு அனைத்துப் பொது இடங்களிலும், குறிப்பாக விமான நிலையங்களில், ஒரு புதுக் கருவியை உபயோகிக்கப் போகிறது.

ஒரு லேசர் கருவி. இது 50 மீற்றர் தொலைவிலிருந்தபடியே உங்களை வருடி உங்கள் மொத்த தகவலையும் பெற்றுவிடும். நீங்கள் உட்கொண்ட உணவு, உங்களது அப்போதைய அட்ரினலின் அளவு உட்பட அனைத்தும். அமெரிக்க நாட்டுக்குள் வருகிறவர்களையும் அங்கேயே உலவுகிறவர்களையும் கூட நேரடியாக எதையும் விசாரிக்காமல் இரகசியமாகத் தூர இருந்தே கண்காணித்து எல்லாவற்றையும் அறிந்துவிடும் ஏற்பாடு இது. இந்த கருவி குறித்து விரிவான கட்டுரை ஒன்று இங்கே:

http://gizmodo.com/5923980/the-secret-government-laser-that-instantly-knows-every-thing-about-you

# ஆபத்தான சமூக உருவாக்கத்தின் முன்னறிவிப்பு!

- சாலையூரான் -

பருவ வயதை எட்டாத சிறுமியர் சிறுவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத் தப்படுவது இன்று சாதாரண சம்பவங்களாகி விட்டன. குறிப்பாக சிறுமியர் வெளியே முன்பின் அறியாதவர்களால் மட்டுமன்றி தந்தை, மாமன், சகோதரர், போன்ற நெருங்கிய உறவுக்காரர்களாலும் வல்லுறவுக்குட்படுத்தப்படும் சம்பவங்கள் ஊடகங்களில் வந்த வண்ணமுள்ளன.



ஆறுவயதுச் சிறுமியை துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய குற்றச்சாட்டில் இராணுவ வீரரொருவர் பொலிஸாரால் கைது, 14 வயது மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் நாவலப்பிட்டியில் கைது, காரைநகரில் மனநலம் குன்றிய யுவதியை வன்புணர்வுக்குட்படுத்திய சந்தேகநபர் விளக்கமறியலில், யாழ்.ரயில் நிலைய வன்புணர்வு சம்பவத்தில் முதலாவது சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார் என பல சம்பவங்கள் நாடு முழுவதும் நடைபெறும் நிகழ்வுகளாகி விட்டன.

மறுபுறத்தே இதற்கு எதிராக அதிகாரத்திலிருப்போர் நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கு பெண்கள் அமைப்புக்கள் கண்டனம், அதிகரித்த பாலியல் வல்லுறவுச் சம்பவங்களை கட்டுப்படுத்த கடுமையான தண்டனைக்கு அரசு நடவடிக்கை என பதில் ஏற்பாடுகளும் அறிவிப்பாகின்றன.

போருக்கு முந்தைய சூழல், போருக்குப் பிந்திய சூழல் என இரு சமூக நிலைமைகளில் இந்த சம்பவங்களை எதிர்கொண்ட அனுபவமும் எமது மக்களுக்கு இருக்கிறது.

பருவமாகாத சிறுமியர் அல்லது சிறார்கள் மீது மேற்கொள்ளப்படும் பாலியல் வன்புணர்வு செயற்பாடுகள் உண்மையில், ஐந்தறிவு விலங்குகள் மட்டத்தில் நடைபெறாத ஒன்று என்பதை இங்கே குறித்துக் கொள்ள வேண்டும்.

துரதிஷ்டவசமாக இச்சையின் நிமித்தம் மனிதகுலம், தனது பாலுறவுச் செயற்பாடுகளை இயற்கைக்கு மாறாக கையாளும் இந்த நடைமுறை இப்போது பருவமடையாத எதிர்ப்பாலாருடன் வலிந்து பாலுறவு கொள்ளும் அளவுக்கு எமது மனித நடத்தைகள் தரம் தாழ்ந்திருக்கின்றன.

பாலியல் குற்றச்செயல்களை தடுக்கவென விசேட தடுப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட்டிருக்கும் நிலையில், பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களும் இக்குற்றச் செயல்களுக்குள் சிக்கிக் கொண்டிருப்பது, ஆபத்தான தீமைகுறித்த ஒரு முன்னறிவிப்பாகும்.

மறுபுறத்தே, வெறும் இன்ப நுகர்ச்சிக்கான நடவடிக்கைகளுடன் மட்டும் பொருத்திப் பார்க்க முடியாத அளவுக்கு வேறு பல குற்றச் செயல்களுடன் இப்பாலியல் நடத்தைகள் தொடர்புபட்டிருக்கின்றன.

சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம், அனைத்து மட்டங்களிலும் ஒரு மிகைவருமானம் தரும் தொழிலாக மறைமுகமாக அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமன்றி அதீதமான பாலின்பத்துக்காக அதனை பயன்படுத்தும் கலாசாரமொன்றும் அறிமுகமாகியிருக்கிறது.

பெரும் எண்ணிக்கையான இணையத்தளங்கள் பாலுறவுக் காட்சிகளை தாராளமாக காட்டுகின்றன. ஆபாசப் படங்களை இளம் வயதினரும் தமது கைத்தொலைபேசிகளில் வைத்துப் பார்ப்பது மட்டுமன்றி அவற்றைத் தமது நண்பர்களுக்கும் பரிமாறிக் கிளர்ச்சியூட்டிக் கொள்ளும் புதிய சமூக சூழலுக்குள் இளைஞர்கள் இழுத்து விடப்பட்டிருக்கிறார்கள்.

பாவிப்பதற்கு போதைப் பொருளையும் பார்த்து மகிழ ஆபாசப்படங்களையும் கைவசம் கொண்டிருக்கும் ஒரு இளைஞனின் அடுத்தகட்ட நகர்வு எதை நோக்கி இருக்குமென்பதை எம்மால் மிகச் சரியாக ஊகித்துக் கொள்ள முடியும்.

இப்போது பிந்திய நிலைமையாக, அரசு சட்டங்களையும் மீறி அதை அமுல்படுத்த வேண்டியவர்களே இந்தவகை ஒழுக்க மீறல்களில் ஈடுபடுவது தெரியவந்திருப்பதாகும். இதுபற்றி தீவிரமாக சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுத்தலைவர்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது. 90 வீதமான சம்பவங்கள் முறைப்பாட்டுக்காக பதிவு செய்யப்படுவதில்லை என்ற செய்தியும் தெரிய வந்திருக்கிறது. இதைவிட கடந்த 6 மாதத்தில் 700 துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக மற்றொரு தகவல் கூறுகிறது.

சிசுக்கொலை, பெற்ற குழந்தையை கைவிட்டுச் செல்லுதல், மலக்குழியிலிருந்து சிசு கண்டெடுப்பு என இவ்வாறான செயற்பாடுகள் ஐந்தறிவு விலங்குகளிடம் இல்லாத தரம் தாழ்ந்து விட்ட இழிநிலைப் பண்புகளை மனிதர்கள் தமக்குள் கொண்டிருப்பதை வெளிக் கொணர்ந்துள்ளன.


குறுகிய அல்லது சுயநலன் நோக்கில் மனிதனால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத குற்றச்செயல்களுக்குப் புறம்பாக, இளம் சிறார்களை வளர்த்து ஆளாக்க வேண்டிய அப்பிள்ளைகளின் நெருங்கிய உறவினர்களே அவர்களைச் சிதைத்து சீரழிக்கின்ற சம்பவங்கள் அதிகரித்திருப்பது மனித குலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு நிலைமையாகும்.

இவற்றைத் தடுக்கவென கடுமையான சட்ட நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவது அவசியம். மேலும், கிராம மட்டத்தில் இவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்களை தடுப்பதற்கான போதிய அறிவூட்டல் மற்றும், முற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் அங்கு செயற்படும் உள்ளூரமைப்புக்களால் சீராக இனங்காணப்படாதவரை நம் எதிர்கால சந்ததியினரை சிறப்பாக வளர்த்து ஆளாக்குவதென்பது பாரிய சவாலாகவே இருந்து வரும்.

# முதலியத்தின் சரிவு ஏன்?

## ஒரு அலசல்

உலக முதலியம் பெரும் சிக்கலில் இருக்கிறது. மேற்கு பல நூறாண்டுகளாக உலகைத் தன் வல்லமையால் ஆண்டு வந்தது. அதில் ஓர் அளவு உழைப்பும், ஏகப்பட்ட அறிவுத் திரட்டும் பங்களித்தன. கணிசமான பங்கு இராணுவ பலமும், சாமர்த்தியமும் கொடுத்தவை. இன்னொரு கணிசமான பங்கு இனவெறியும், தீவிரக் கிறிஸ்தவத்தின் ஆதிக்கவெறி கொடுத்த மிருகத்தனமும் - தம் வெள்ளை இனத்தவரைத் தவிர, அவரிலும் கிறிஸ்தவரைத் தவிர மீதி எல்லோரும் மிருகங்களே, தம் ஆதிக்கத்துக்கு உட்பட்டு அடிபட்டுச் சாகத் தக்கவர்களே என்ற அகங்காரமும், வெறியும் கலந்த அணுகலில் பல மில்லியன் ஆபிரிக்கரை அடிமைகளாக்கி நாடு கடத்துவதும், ஆசியர்களைக் கடுமையாகச் சுரண்டுவதும் ஐரோப்பியருக்கு எளிய செயல்களாக இருந்ததோடு, ஆபிரிக்கரிலும், ஆசியரிலும் ஒரு குறிப்பிட்ட பகுதியினரைத் தம் பண்பாட்டு மேன்மையின் ஆதரவாளராகவும் ஆக்கி விட்டதால் சுரண்டலை இன்னமும் தொடர அவர்களால் முடிகிறது. இத்தனை கொடுமைகள், வன்முறை, பெரும் சுரண்டல் எல்லாமும் அந்த நாகரிகங்களுக்கு ஏராளமான செல்வத்தைக் கொடுத்த போதும் அவர்களால் அந்த வளத்தைத் தக்க வைக்க முடியவில்லை.



இறுதிக் கணக்கில் அவர்கள் தம் மக்களிலேயே உழைப்பாளர்களையும், மத்திய வர்க்கத்தையும் ஓட்டாண்டிகளாக்கும் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றியதன் விளைவு அந்த நாடுகளின் பொருளாதாரங்கள் இன்று தத்தளிப்பில் இருக்கின்றன. இன்னும் நம் அளவிற்கு ஓட்டாண்டியாகி விடவில்லை என்பது உண்மை. ஆனால் இன்றைய கிரீஸ், ஸ்பெயின், போர்த்துகல், இத்தாலி போன்றன ஒன்றும் முந்தைய வளநாடுகள் இல்லை. பெரும் கடனாளி நாடுகள்.

இதெல்லாம் ஏன், எப்படி நடந்தது என்பதை இக்கட்டுரை ஒரு சிறு அளவு அலசிப் பேசுகிறது. கட்டுப்பாடற்ற, பேராசையால் செலுத்தப்படும் முதலியத்தால் அழிந்த நாகரிகங்கள் இவை என்பதை முன்வைக்கிறது. இந்த முகவரியில்:

http://www.salon.com/2012/07/14/fifty_shades_of_capitalism/

# நியாண்டர்தால்கள் வேட்டையாளர்களல்ல!

ஆதிகால மனிதர்கள் பற்றி உலகம் முழுவதும் பல்வேறு ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் ஆய்வாளர்கள் நியாண்டர்தால்களின் எலும்புகளின் அம்சங்கள் குறித்த ஆய்வை நடத்தினர். பொதுவாகவே, நியாண்டர்தால்கள் என்றால் வேட்டையாடுபவர்கள் என்றுதான் நாம் அறிந்து வைத்திருக்கிறோம். விலங்குகளை வேட்டையாடுவதற்காக, அதிக எடையுள்ள ஈட்டிகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்தியதால் அவர்களது உடல் மிகவும் வலிமையானதாக மாறியதாக வரலாறு தெரிவித்தது. ஆனால், விலங்குகளிடமிருந்து தங்களை காத்துக்கொள்வதற்காக, கடுமையான பாறைகளை செதுக்கி குகைகளை உருவாக்கவும், ஆடைகளை தயாரிப்பதற்குமே அவர்கள் பெரும்பகுதி நேரத்தை செலவிட்டதாக தெரியவந்துள்ளது. இதற்காக கடினமான வேலைகளை அவர்கள் செய்ததால்தான் எலும்புகள் மிகவும் வலிமையாக மாறியதாக கூறப்படுகிறது.

இது குறித்து இந்த ஆய்வை மேற்கொண்ட ஆய்வாளர்கள் தெரிவிக்கையில், நியாண்டர்தால்கள் வேட்டையாளர்கள் என்ற கோணத்திலிருந்து மாறி, நாங்கள் எங்களது ஆராய்ச்சியை மேற்கொண்டோம். இதில் பல புதிய தகவல்கள் கிடைத்தன. நியாண்டர்தால்கள் வேட்டையாளர்களல்ல. அவர்கள் வேட்டையாடுவதை விட குகைகளை கட்டுதல், ஆடைகளை வடிவமைத்தல் போன்ற மற்ற வேலைகளிலேயே அதிக நேரத்தை செலவிட்டுள்ளனர். நியாண்டர்தால்களின் இடதுகையின் பலத்தை விட அவர்களது வலது கையின் பலம் 50 சதவிகிதம் கூடுதலாக உள்ளது. இவர்களின் கைகள் நவீன கால மனிதனின் கைகளை விட மிகவும் வலிமையாக உள்ளது. வேட்டையாடுவது அவர்களின் முக்கிய பணியாக இருந்தாலும், அதுவே பிரதானமாக இல்லை. அவர்களது எலும்புகளை ஆய்வு செய்து பார்க்கையில், நியாண்டர்தால்கள் ஈட்டிகளை தங்களது கைகளுக்கு அடியில் வைத்துத்தான் பயன்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.



# உலகின் மிகப் பழமையான இரத்தம்... 5300 ஆண்டுகள்....!

# பனி மனிதன் - விசித்திரமான தகவல்கள்!

**அறிவியல்** உலகில் அதிரடித் திருப்புமுனையாக உலகத்தை பிரமிக்கச் செய்த ஒரு தகவல் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. உடலிலிருந்து இரத்தம் வெளியேறிய கண நேரத்தில் காற்று அதன் மேல் பட்டவுடன், இரத்தம் இறுகிக் கெட்டியாகி, கட்டியாகிவிடும். இதுதான் இரத்தத்தின் இயல்புத் தன்மை. சிவப்பணுக்களின் ஆயுள் என்பது சுமார் 120 நாட்கள் மட்டுமே. அதற்குள் அவை தன் உருவிழந்து மறைந்து விடும். ஆனால் சுமார் 5,300 ஆண்டுகளுக்கு முன் இறந்த மனிதன் ஒருவனின் உடலிலிருந்து இரத்தம் எடுக்கப்பட்டு, அன்றைய மனித இரத்த கலங்களின் தன்மையும் கண்டறியப்பட்டுள்ளது.

ஓட்சி என்ற பனி மனிதனை 1991 இல் இரண்டு மலையேறிகள் ஒஸ்ட்ரிய இத்தாலிய எல்லையில் அமைந்துள்ள ஆல்பைன் பனியாற்றிலிருந்து கண்டெடுத்தனர். தற்போதைய அறிவியல் தகவல்படி உலகில் அதிக வயதுள்ள நன்றாக இயற்கையான முறையில் பதப்படுத்தப்பட்டுள்ள மனித மம்மி இது மட்டுமே. இதில் பல ஆராய்ச்சிகள் செய்து, இந்த கற்கால மனிதன் ஒரு காயத்தினால் உடனே இறந்திருக்கிறான். மிக வன்மையாகத் தாக்கப்பட்டு, கொடூரமான முறையில் இறந்திருக்கிறான் என்றும் கண்டறிந்துள்ளனர். இந்த உடலைக் கண்டுபிடித்து 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் கூட இதனைப் பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் முடிந்தபாடில்லை.

ஓட்சி என்ற இடத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாலும் அவன் பனியில் உறைந்து பதப்படுத்தப்பட்டிருந்ததாலும் 'ஓட்சி பனி மனிதன்' என்று செல்லமாய் அழைக்கின்றனர். ஆனால் அவன் தாமிர காலத்திற்கு முற்பட்ட ஐரோப்பிய மனிதன் என்றும் கருதப்படுகிறது. இப்போது அந்தப் பனி மனிதனும், அவனது சொத்துக்களான உடை மற்றும் பொருட்களும், இத்தாலியில் உள்ள போல்சானோவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. பனிமனிதன் காயத்தில் உறைந்திருந்த இரத்த கலம்தான். நாம் இதுவரை அறிந்தவற்றில் மிக மிகப் பழமையான இரத்த கலம்.

ஆல்ப்ஸ் மலைத்தொடர் பள்ளத்தாக்கில் இன் நதியில் (Inn River) பனிப்பாளங்களுக்கிடையே சொருகிக் கிடந்திருக்கிறான் இந்த மனிதன். இப்பகுதி ஒஸ்ட்ரிய, இத்தாலிய எல்லையில் உள்ளது என்பதால் இது இரு நாடுகளுக்கும் சொந்தமானது. இதுவரை கிடைத்த ஐரோப்பிய மம்மிகளிலேயே இதுதான் நன்கு இயற்கையில் பதப்படுத்தப்பட்ட மனித மம்மியாகும்.

அவன் இறப்பதற்கு முன் தானிய ரொட்டியையும் சிவப்பு மானின் இறைச்சியையும் உண்டிருக்கிறான். அவன் ஏன் இறந்தான் என்பதன் காரணமும் கூட கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. ஒரு அம்பு அவனது தோளில் ஊடுருவிச் சென்றதன் விளைவால் இறப்பு நிகழ்ந்திருக்கிறது.


> அவன் முழுமையான கவசம் போன்ற உடை அணிந்திருக்க வேண்டும். அவன் உடலில் தைத்த அம்பு அவ்வளவாய் கூர்மை இல்லை. அவனை ஒரு பசுமரத்தின் கூர்மையான பெரிய தண்டு கொண்டு அம்பினால் பலமாய்த் தாக்கி உள்ளனர். அதனால் பெரிய காயம் ஏற்பட்டு அதில் இரத்தம் வழிந்து, வடிந்து மயக்கம் போட்டு பின்னர் இறந்திருக்கிறான்.

இத்தாலிய மனிதவியலாளரும், ஆய்வாளருமான அல்பேர்ட் ஸின்க் (Albert Zink) தான் ஓட்சி பற்றிய உண்மைகளைக் கண்டறிந்தவர். 'உண்மையிலேயே எங்களுக்கு இது மிக மிக ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ஏனெனில் நாங்கள் அங்கே முழுமையான சிவப்பணுவைப் பார்ப்போம் என்று கற்பனையிலும் கருதவில்லை. ஆனால் அங்கே நவீன கால சாம்பிள் போல அதே பரிமாணத்துடன், சிவப்பணுக்கள் முழுமையாகக் கிடைத்தன. எங்கள் கண்களை எங்களால் நம்பவே முடியவில்லை' என்று சொல்கிறார்.

ஓட்சியின் உடலிலிருந்து எடுக்கப்பட்ட சிவப்பணுகள் இப்போதுள்ள நமது சிவப்பணுக்களின் அளவை யும் உருவையும் பெற்றுள்ளன. சிறிய மா உருண்டையை பரோட்டாவுக்கு அமுக்கி வைப்பது போன்ற தோற்றத்துடன் இருக்கின்றன.

அதன் பரிமாணமும் கூட, இன்றுள்ள கலங்களின் அளவே. ஓட்சி 5,300 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து கொண்டு, இபெக்ஸ் மற்றும் மானின் இறைச்சியை உண்டு ஆல்ப்ஸ் மலைகளில் ஏறி இறங்கித் திரிந்திருக்கிறான். 1991 இல் அவனைக் கண்டுபிடித்த போது அவனது இரத்தக் குழாய்களில் இரத்தம் இல்லை. ஓட்சி இறந்து வெகு காலமாகி விட்டபடியால் அவன் உடம்பிலிருந்து இரத்தம் தோள் காயத்தின் வழியே முழுதும் வடிந்திருக்கலாம் அல்லது அவனது இரத்தம் கால ஓட்டத்தில் உருமாறி அழிந்து போயிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதினர். இருப்பினும் அம்பு. சொருகி காயம் பட்ட தோள் பகுதி மற்றும் வலக் கையின் காயம் என இரண்டு இடங்களையும் விஞ்ஞானிகள்

> மனித சமுதாயம் கண்டறிந்தவைகளில் இதுதான் உலகின் முதல் கொலையும் முதல் மனித இரத்தமும்.



பெரிது பண்ணிப் பார்த்தனர். இரத்தக் கட்டு இரத்தத் திசு எதுவும் அப்போது தென்படவில்லை. நனோ கருவி (Nano probe) கொண்டு தேடிய போதுதான் அம்பு தைத்த இடம் மற்றும் வலது கையின் வெட்டில் முழுமையான சிவப்பணுவின் பரிமாணம் கிடைத்தது. பனி மனிதனின் இரத்த சிவப்பணு தற்போதைய நவீன மனிதனுடையதைப் போலவே இருந்ததும் ஆச்சரியத்துடன் கண்டறியப்பட்டது

இந்த மனிதனின் இறப்பு என்பது ஏதோ இயற்கையில் நிகழ்ந்தது அல்ல. இவன் ஆட்டிடையன், தெய்வத்திற்குப் பலி கொடுக்கப்பட்டவன், என்றெல்லாம் விஞ்ஞானிகள் கருதினர். ஆனால் இப்போது அவன கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மை தெரிய வந்துள்ளது. பனி மனிதனின் உடலை வைத்தே அவனது வாழ்க்கை முறைகளைக் கணித்துள்ளனர் விஞ்ஞானிகள். அவன் மதிப்பு மிக்க செப்புப் பட்டை கொண்ட கோடரி வைத்திருந்தான். தன் பயணத்தின் போது மூன்று அடுக்குகள் கொண்ட உடைகளைப போட்டிருந்தான். எனவே அப்போது மிகுந்த குளிர் இருந்திருப்பது தெரிகிறது. அவனது கால் காலணிகள் அழுத்தமாக கடினமாக இருந்தன. அதன் அடிப் பகுதி கரடியின் தோலினால் ஆனது. அவன் கூர்மையான கல் கத்தியை வைத்திருந்தான். அவனுக்கு நெருப்பை உண்டாக்கத் தெரிந்திருந்தது. நெருப்பு உண்டாக்கும் கருவிகள் கொண்ட ஒரு பையும் இடுபபில் கட்டி வைத்திருந்தான். மேப்பிள் (Mapple) இலைகளால் சுற்றப்பட்ட சாம்பல் மற்றும் தணல்களையும் இடைப் பட்டையில் வைத்திருந்தான். அவன் முழுமையான கவசம் போன்ற உடை அணிந் திருக்க வேண்டும் என்றே நம்பினர். அவன் உடலில் தைத்த அம்பு அவ்வளவாய் கூர்மை இல்லை. அவனை ஒரு பசுமரத்தின் கூர்மையான பெரிய தண்டு கொண்டு அம்பினால் பலமாய்த் தாக்கி உள்ளனர். அதனால் பெரிய காயம் ஏற்பட்டு அதில் இரத்தம் வழிந்து, வடிந்து மயக்கம் போட்டு பின்னர் இறந்திருக்கிறான்.

ஓட்சியின் இரத்தக் கலங்களுடன் அதன் அருகிலேயே பைபிரினும் (Fibrin) காணப்பட்டது. எந்த இடத்தில் அம்பு குத்தி உள்ளே இறங்கியதோ அந்த அம்பு முனை பட்ட இடத்தில்தான் பைபிரின் இருந்தது. பைபிரின் என்பது இரத்தம் உறைவதற்கான புரதம். இந்த பைபிரின் துணுக்கு நமக்கு ஓர் அருமையான உண்மையை பிட்டு வைக்கிறது. அதுதான காயம் பட்டவுடனேயே அவன் இறக்கவில்லை என்பது. ஏனெனில் பைபிரின் புதிதாக ஏற்பட்ட காயத்தில்தான் உருவாகும் பின்னர் சிதைந்துவிடும். அதன் பின் ஆராய்ச்சியாளர்கள் அந்த இரத்த கலங்களில் கடந்த காலங்களில் மூலக்கூறு அமைப்பில் என்னென்ன மாற்றங்கள் நடந்துள்ளன என்றும் அதிலுள்ள நீர் இழப்பு மற்றும் வயது மூலம் தெளிவாக அறியலாம் என்று தெரிவிக்கின்றனர்.

இந்தப் பனி மனிதனின் உடைமைகள் மற்றும் துணிகளின் தன்மை மூலம், அன்றைய புதிய கற்கால மனிதன் ஐரோப்பாவில் என்ன மாதிரி வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருந்தான் என்பதை கணிக்க உதவுகிறது.

அவன் மிகவும் பிரபலமான நமது நாகரிகத்தின் பகுதியாக இருந்தான். அவனை முழுதும் ஆராய்ந்து விஞ்ஞானிகள் அவன் 5 அடி 2.5 அங்குலம் இருந்தான் என்று கணிக்கின்றனர். அவன் இறந்த பிறகு, உடலின் உயரம் சில அங்குலங்கள் குறைந்திருக்கலாம். இறப்பு நிகழும்போது அவனது எடை 110 இறாத்தல். ஆனால் இப்போதுள்ள மம்மியின் எடை வெறும் 29 இறாத்தல் மட்டுமே.

பனி மனிதன் இறக்கும் போது அவனுக்கு வயது 46. பொதுவாக அந்தக் காலத்தில் இந்த வயது வரை மனிதர் வாழ்ந்ததில்லை.

அவனது பெருங்குடலில், கொக்கிப் புழுவின் முட்டைகள் இருந்தன. அதாவது அவனுக்கு வயிற்றுப் பிரச்சினைகள் இருந்தன. அதனால் அவனுக்கு வயிற்றுப் போக்கும் இருந்திருக்கிறது. அவனுக்கு கீல் வாதம் இருந்திருக்கிறது. அவனது வலது கால மற்றும் முதுகெலும்பு போன்ற இடங்களில் பச்சை குத்தியது போன்ற தழும்புகள் உள்ளன. இவை அவன் கீல் வாத நோயிலிருந்து விடுபட எடுத்துக் கொண்ட ஆரம்ப சிகிச்சை என்றே கணிக்கப்படுகிறது.

அவனது உடைகளில் இரண்டு பூச்சிகள் இருந்தன. அவனது இடது இடுப்பு எலும்பு, அவனது வயதான தன்மையையும், அங்கே ஏற்பட்ட சின்ன எலும்பு முறிவையும் காட்டுகிறது. அவனது விலா மற்றும் மூக்கு எலும்புகள் உடைந்துள்ளன.

அவன் இறப்பதற்கு முன் கடந்த சில மாதங்களாக மன அழுத்தத்தில் இருந்தான் என்பதை அவனது கை நகங்கள் காண்பிக்கின்றன.

அவனது நுரையீரல் புகையினைச் சுவாசித்ததால் நிறம் மாறி இருந்தன. அவனின் இரைப்பையில் பார்லி, மாமிசம் மற்றும் தானியங்கள் இருந்தன. இவைதான் ஓட்சி உண்ட இவனது கடைசி உணவு என்பதைக் காட்டுகிறது. வயிற்றில் மஞ்சள் மகரந்தம் காணப்பட்டது. அவன் ஓடையிலிருந்து நீர் குடிக்கும் போது விழுந்திருக்கலாம்.

அவன் உடம்பில் 12வது விலா எலும்பைக் காணோம். தலை முழுவதும் முன்பு அடர்த்தியாக முடி இருந்திருக்கிறது. அதுவும் பனியில் கிடந்ததால் முழுமையாக உதிர்ந்துவிட்டது.

அவனது இடுப்பு எலும்பிலிருந்து திசுக்களை எடுத்து (DNA) வை அறிந்து அவனது முழு ஜீனோம் (Genome) வரையப்பட்டு விட்டது.

பனி மனிதனுக்கு பழுப்பு வண்ணக் கண்கள் இருந்தன.

அவனது இரத்தம் ஓ ("O" group) பிரிவைச் சேர்ந்தது.

இன்றைய கோர்சிகன்கள் அல்லது சார்டினியான்கள் போன்றவர்களின் இனத்தைச் சேர்ந்தவன் இவன். இவர்கள்தான் பனி மனிதனின் உடம்பு கிடைத்த இடத்தின் அருகில் ஆல்ப்ஸ் மலையில் வாழ்பவர்கள்.

மனித சமுதாயம் கண்டறிந்தவைகளில் இதுதான் உலகின் முதல் கொலையும் முதல் மனித இரத்தமும்.

# தேசிய சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(சிகரம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசிய சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

ஆண், பெண் திருமண வயது, பதிவுத்திருமணம் செய்வதால் என்ன நன்மை என்பன போன்ற விடயங்களையும், மணநீக்கம், பராமரிப்பு மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான சட்ட ஏற்பாடுகளை எவ்வாறு பயன்படுததுதல் மற்றும் அதற்கான நிவாரணங்களை பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் தொடர்பில் சட்டத்தரணி ஏ.எஸ். அற்புத ராஜ் தனது உரையில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்

அடிப்படை உரிமை மீறலும் பொது மக்களின் உரித்துக்களும் அவை தொடர்பாக பெற்றுக் கொள்ளக்கூடிய நிவாரணங்களும் அது தொடர்பாக எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கை தொடர்பாகவும் சட்டத்தரணி றெமேடியஸ் கருத்து வழங்கினார்.



சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்ககளை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள், சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக எடுக்க வேண்டிய சட்டம் மற்றும் சமூக ஏற்பாடுகள் தொடர்பில் சட்டத்தரணி த.கணாதீபனும்,

நுகர்வோர் பாதுகாப்பு, வெளிநாட்டில் வேலை புரிவோரின் பாதுகாப்பு, முதியோர்களின் பாதுகாப்பு தொடர்பான சட்ட ரீதியான ஏற்பாடுகளும் நிவாரணங்களை பெற்றுக் கொள்ளுதலும்என்பது தொடர்பில் சட்டத்தரணி செல்வி.நிலூஷா கேதீஸ்வரனும், பொது மக்களுக்கு கருத்துரை வழங்கினர்.


இந்த நிகழ்வில் யாழ்.மாவட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், யாழ்ப்பாண பிரதேசசெயலாளர் சு.தெய்வேந்திரம் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஒரே நேரத்தில் சேவையில் ஈடுபட்ட நடத்துநர்களுக்கிடையில் கைகலப்பு

(சிகரம்)

மானிப்பாய் வீதியூடாக பயணிக்கும் மாதகல், காரைநகர் தனியார் பேருந்துகள் போட்டி போட்டுக்கொண்டு ஒன்றையொன்று முந் திச் செல்ல முற்பட்டதால் இரண்டு பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது.

ஒரே வீதியூடாக தமது சேவையை வழங்கி வரும் இந்த இரண்டு தனியார் பேருந்துகளும் நேற்றுக்காலை ஒரே நேரத்தில் ஒன்றன் பின் ஒன்றாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தன.



இதன்போது, அதிக பயணிகளை ஏற்றவேண்டும் என்ற போட்டியுடன் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு அதிக வேகத்துடன் வந்து கொண்டிருந்த இந்தப் பேருந்துகள் காலை 8.00 மணிக்கு சங்கானை பஸ்தரிப்பிடத்தை வந்தடைந்தன. இதனையடுத்து, இந்த இரண்டு தனியார் பேருந்துகளின் சாரதிகள் மற்றும் நடத்து நர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தகராறு கைக லப்பில் முடிவடைந்தது.

ஒரே வீதியூடாகப் பயணிக்கும் தனியார் பேருந்துகள் 10 நிமிடத்திற்கு ஒன்றே சேவையில் ஈடுபடுவது வழமையானது. இருப்பினும், இந்த இரண்டு பேருந்துகளும் ஒரே நேரத்தில் சேவையில் ஈடுபட்டமையாலேயே இந்தத் தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் தாம் எந்தவிதமான சிரமங்களையும் எதிர்நோக்கவில்லை எனவும்,இது போன்ற சம்பவங்கள் இதற்கு முன்னரும் நடைபெற்றுள்ளதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

# றம்புட்டானால் கடி



(ஆனைக்கோட்டை)

தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்படும் றம்புட்டான் பழங்களைச் சாப்பிட்டவர்கள் சொறி சிரங்கு நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது:

தென்பகுதியில் றம்புட்டான் வியாபாரத்திற்கு தடைவிதிக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்திற்கு அதிகளவான றம்புட்டான் பழங்கள் எடுத்து வரப்படுவதால் இவை யாழில் அமோக வியாபாரமாகின்றன.

இந்த நிலையில் வாகனங்களில் எடுத்துவரப்படும் ரம்புட்டான் பழங்களை வீதியோரங்களில் உரப்பைகளை விரித்து அதில் பரவி வியாபாரிகள் இதனை விற்பனை செய்து வருகின்றனர்.

வீதியால் வாகனங்கள் செல்லும் போது எழும தூசு துணிக்கைகள் பழங்களில் படிகின்றன. இதனை வாங்கும் மக்கள் தோலை வாயால் கடித்து உண்பதால் தோலில் உள்ள நுண்கிருமிகளால் இந்த நோய் பரவுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

மானிப்பாய் ஆனைக்கோட்டைப்பகுதியில் றம்புட்டான் வியாபாரங்கள் அதிகளவில் இடம்பெறுவதாகவும் இப்பிரதேசத்தில் உள்ள சிலருக்கே இந்நோய் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

றம்புட்டான் பழங்களை வாங்குவோர் கத்தியால் வெட்டி உண்ணவேண்டும் என வைத்தியர்கள் ஆலோசனை தெரிவிக்கின்றனர். (104)

# தம்பசிட்டி பகுதிக்கு குடிநீர் விநியோகம்

(பருத்தித்துறை)

தம்பசிட்டி அல்வாய் வீதியில் உள்ள மக்களுக்கு குடிநீரை விநியோகிப்பதற்கான வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகிறது.

இவ் வேலைகளை இலங்கை செம்பிறைச் சங்கமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் பொறுப்பேற்று நீர் வடிகாலமைப்பு சபையிடம் ஒப்படைத்துள்ளது.



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு இலவசமாக சுகாதார வசதிகளுக்கான மலசல கூட தொகுதிகளையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(109)

# பதிவிறக்கப் பெட்டகம்

இவர்கள் கருத்துப்படி நாடகங்கள் மக்களுக்கு அவ்வளவு எளிதாகப் புரிந்துவிடக் கூடாது. நெல்லை ஒருபுறம் கொட்டி அது ஒரு முனை வழியாக அரிசியாகவும், இன்னொரு முனை வழியாக தவிடாகவும் வருகிறதே, அந்த அரைக்கும் இயந்திரத்தை சிறு குழந்தையாக இருக்கும்போது வியப்போடு பார்க்கிறோமே; இந்த வியப்பு மட்டுமே பார்வையாளனுக்கு இருந்துவிட்டால் போதும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். அதையும் தாண்டி கலை இலக்கியங்கள் மனித மனத்தைச் சார்ந்து சலனப்படுத்தி ஒரு வாழ்க்கையை வாழ்ந்து பார்க்கும் அனுபவம் தேவையில்லை என்று நினைக்கிறார்கள். நாடகம் என்ற பெயரில் இந்த அறிவு சார்ந்த அராஜகமும், நம்ஆளுமையைக் குத்துகிற அவமானமுமாக இருக்கிற இந்த ஒருவழிப் பயணமே நவீன நாடகங்கள் என்றால் அந்த நாடகங்கள் நமக்குத் தேவையில்லை...

மொழி என்பதே ஒருவரை இன்னொருவரோடு தொடர்பு படுத்த ஏற்பட்ட சாதனம். நீ சொல்லுகிற நாடக மொழி எனக்குப் புரியவில்லை என்றால் அது தமிழில் இருந்து எனக்கு எந்தப் பயனும் இல்லை. தமிழ் திரைப்படப் பாடல்களில் வரும் ஜிங்கள ஜிங்கள ஜீபூம்பா, ஜாலிலோ ஜிம்கானா, ககா கிகீ குகூ போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் தேடிக்கொண்டிருப்பதைப் போன்ற அபத்தம் வேறு எதுவும் இல்லை. நவீன நாடகங்கள் என்ற பெயரில் வெளிவரும் 'ஜிங்கள ஜிங்கள ஜீபூம்பா' நாடகங்களுக்கு அர்த்தம் தேடிக் கொண்டிருப்பது வீண் வேலை.

**– கோமல் சுவாமிநாதன்**

படைப்பு என்பது கருத்தல்ல. ஆகவே தம் படைப்பைப் புரிந்து கொள்ளாமல் உண்டாகும் சர்ச்சைகளில் படைப்பாளன் பங்கேறகாமல் இருப்பதுதான் சரியான நியதி.**– சுந்தர ராமசாமி**

கவிதை புரியாமல் போய்விடுவதில் கூட அவ்வளவு வருத்தமில்லை. அந்தக் கவிதை வேறு யாருக்கோ புரிந்துவிடுகிறதே என்பதை நினைத்துத்தான் வருத்தமாயிருக்கிறது.

**– சூர்யா**

சில சமயங்களில் படைப்பு பேச வருகிற அரசியலையும் தவிர்த்து நமக்கு விருப்பமான அரசியலைப் பொருத்திப் பார்க்கச் செய்துவிடுகிற அபத்தங்களுக்கான சாத்தியங்களும் நிரம்பியிருக்கிற வெளி இந்தக் குறியீட்டு மொழி. குறியீடுகள் எழுத்தை பல்வேறு விதமான வாசிப்பின் சாத்தியங்களுக்குள் அழைத்துப்போகக் கூடியவை. ஒரு பிரதியின் மீதான பல்வேறு வாசிப்புக்கள் என்பது மொழியின் பலவீனமா? பலமா? என்கிற ஆய்வுகளுக்கெல்லாம் அப்பால், இலங்கைத்தீவின் இனமுரண்பாடுகள் குறித்த எழுத்துக்களை, அல்லது தமிழ் மற்றும் சிங்கள அதிகார மையங்களைக் கேள்விக்குள்ளாக்கும் பத்திரிகைகளை, புத்தகங்களை துப்பாக்கிகளின கண்கள் வாசிக்கத் தொடங்கியதற்குப் பிறகு எங்களுடைய மொழிப் பயன்பாட்டின் நேரடித்தன்மை குறைந்து வந்திருக்கிறதை அவதானிக்கலாம். அது ஒரு நழுவல் மொழியை, அச்சமூட்டப்பட்ட சொற்களை, உண்மையைத் தயக்கத்துடன எட்டிப் பார்த்தபடியிருக்கும் எழுத்துக்களை உருவாக்கியிருககிறது. அந்தச் சூழ்நிலை எழுத்தின் சகல துறைகளிலும் வியாபித்திருக்கிறது. எழுத்தின் இந்த நேரடித் தன்மையின்மையை எழுத்தின் பலவீனமாக நான் உணர்கிறேன். அரசர்களின் நிர்வாணத்தை சிலசமயங்களில் குறியீடுகள் ஆடைகளாகத் தோற்றம்பெறச் செய்துவிடுகின்றன. **– த.அகிலன**

தாம் எழுதியபோது விரும்பியபடிதான் பிறர் தம்மைப் புரிந்து கொள்ள வேண்டும் எனக் கோருகிற உரிமை எழுத்தாளருக்குக் கிடையாது. எழுதும் அந்தத் தருணத்திலிருந்தே, எழுத்து என்பது சட்டரீதியாக அன்றி அவருக்குச் சொந்தமிலலாத ஒன்று. ஆனால் என் வாதங்களைத் தவறாகப் பொருள் கொண்டு, "நீங்கள் தவறாக எழுதியிருக்கிறீர்கள்" என யாராவது என்னை விமர்ச்னம் செய்யும்பட்சத்தில், அதை மறுத்து நான் கூறவிரும்பியதை வலியுறுத்த எனக்கு உரிமையுண்டு. ஆனால், அந்த ஓர் அடிப்படையிலன்றி, வாசகனின் சுதந்திரத்தை முற்றாக மதிக்கவேண்டும் என்றே வலியுறுத்துவேன். அதாவது, சொல்லாடல் என்பதை எண்ணற்ற முறைகளில் மாற்றப்படவல்ல எதார்த்தம் என்பேன். எனவே எழுதும் ஒருவருக்கு, தம்முடைய எழுத்துக்கள் எவ்வாறு பயன்படவேண்டும் என்று ஆணையிடும் உரிமை இருக்க முடியாது.

**– ஃபூக்கோ**

# அபிவிருத்திப்பணிகளில் அமைச்சர் டக்ளஸ்...

## கைத்தொழிற்பேட்டை ஆராய்வு



அச்சுவேலியில் அமையப்பெறவுள்ள கைத்தொழிற் பேட்டை இயங்கும் பட்சத்தில் அங்கிருந்து கழிவு நீரை வெளியேற்றுவது தொடர்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆராய்ந்தறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்தி சபையின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமை மேற்படி விடயம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப் பட்டது.

இதன்போது தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை சூழலுக்கும், கடலுக்கும் மாசுபடாதவகையில் சுத்திகரிப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பொதுமுகாமையாளர் ஜெஸ்மின் மன்னப்பெரும உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## மின் விநியோகம் ஆரம்பம்

வலிகாமம் வடக்கு இரு கிராமங்களுக்குரிய மின் விநியோகத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக தொடக்கி வைத்தார்.


வலி வடக்கிலுள்ள தந்தை செல்வாபுரம் மற்றும், வசந்தபுரம் ஆகிய இரண்டு கிராமங்களுக்குமான மின்விநியோகத்தை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தொடக்கிவைத்தார்.

குறிப்பிட்ட பகுதியில் மக்கள் மீளக் குடியமர்ந்து வரும் நிலையில் 25 வருடங்களுக்கு பின்னர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

4 கிலோமீற்றர் நீளமான தூரத்திற்கு வழங்கப் படவுள்ள இம் மின்விநியோகத்திற்காக 8 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நிகழ்வில் கலந்து கொண்ட மக்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் அவர்கள் அடுத்த மாத முற்பகுதியில் மீண்டும் இப்பகுதிக்கு வருகைதரும் போது உங்களது கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமென உறுதிமொழி வழங்கினார்.

இதன்போது ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்), பிரதேச செயலா



ளர் ஸ்ரீமோகனன் வலி வடக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் வலி வடக்கு மாவட்ட பொறுப்பாளருமான ஜெயபாலசிங்கம் (அன்பு) உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கிராம செயலகம் திறந்துவைப்பு

வலி வடக்கின் மாவிட்டபுரம் தெற்கு கிராம செயலகத்தை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

வலி வடக்குப் பகுதிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள் மாவிட்டபுரம் தெற்கு பட்டிக்கடவைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கிராம செயலகத்தில் கிராமசேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், மருத்துவ மாது, மற்றும் விவசாய போதனாசிரியர் ஆகியோரது அலுவலகங்கள் உள்ளடங்




கிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

இக்கிராம செயலகத்திற்கான ஒரு பரப்புக் காணியை அன்பளிப்புச் செய்த தில்லைநடராஜா, நவரட்ணராஜா, செல்வரட்ணராஜா ஆகியோருக்கு அமைச்சர் அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இதன்போது பிரதேச செயலாளர் ஸ்ரீமோகனன், வலி வடக்கு பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவரும், ஈபிடிபியின் வலி வடக்கு பிரதேச அமைப்பாளருமான ஜெயபாலசிங்கம் (அன்பு) உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தாதியர் பயிற்சி

கல்வி பொதுத் தராதர உயர் தர பரீட்சையில் சித்தியடைந்த பெண்களுக்கான விசேட மருத்துவ தாதியர் பயிற்சி நெறியொன்று தேசிய தொழில்பயிற்சி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த பயிற்சி நெறி மொனராகல மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுவதாக அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.இவர்களுக்கான பயிற்சி ஆறு மாதங்களுக்கு வழக்கப்படும்.

இந்த பயிற்சி நெறியினை நிறைவு செய்யும் பயிற்சியாளர்கள் தனியார் மருத்துவ தாதியர்களாகப் பணியாற்றும் வாய்ப் பினைப் பெறுவர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

## 250 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(முல்லைத்தீவு)

கொரிய சிறுவர் நிதிப்பங்களிப்பினால் இலங்கை சிறுவர் நிதியத்தினூடாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்கள் 250 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 125 மாணவர்களுக்கும் கரைத்துரைப்பற்று கோட்டத்திற்குட்பட்ட 75 மாணவர்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப் பட்டுள்ளன. (04)

## பளையிலிருந்து புதுக்குடியிருப்புக்கு பயணக்கட்டணம் எத்தனை ரூபா?

### பயணிகள் கேள்வி

(புதுக்குடியிருப்பு)

தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்களிடமிருந்து மாறுபட்ட விதத்தில் கட்டணம் அறவிடும் நடத்துநர்கள் குறித்து அப்பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் தங்கள் விசனத்தைத் தெரிவித்துக் கொள்வதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக புதுக்குடியிருப்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான தனியார் பேருந்தின் கட்டணமானது 150 ரூபாவாகவும் 160 ரூபாவாகவும் அறவிடுவது குறித்து, சில பயணிகள் பேருந்து நடத்துநர்களோடு தர்க்கப்படுவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை புதுக்குடியிருப்பில் இருந்து பளைக்குப்பயணம் செய்த பயணி ஒருவரிடம் 120 ரூபா கட்டணம் அறவிட்ட வேளை, அதே பயணிஅன்றையதினம் பளையில் இருந்து புதுக்குடியிருப்புக்கு பயணம் செய்கையில் 100 ரூபா கட்டணத்தை நடத்துநர் ஒருவர் அறவிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறாக இடத்துக்கிடம் நாளுக்கு நாள் மாறுபடும் கட்டணங்களால் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் மிகுந்த அசௌகரியத்துக்கு உள்ளாவதோடு, நடத்துநர்களால் அவமானத்துக்கும் உள்ளாகின்றனர்.

எனவே, இவ்விடயத்தோடு, சம்பந்தப்பட்டவர்கள் கட்டணத் தொகையைச் சீர்படுத்தி, மக்களுக்கு "உரிய கட்டண விபரத்தை தெரியப்படுத்த வேண்டுமென பொது மக்கள் மற்றும் பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர். (138)

## தேர்தலுக்குமுன் குடியேற்றங்கள்; சம்பூர் மக்கள் கோரிக்கை

(மட்டக்களப்பு)

திருகோணமலை - சம்பூர் பகுதியிலிருந்து 7 ஆண்டுகளுக்கு முன்னர் மோதல்களின்போது இடம்பெயர்ந்த மக்கள் தம்மை எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமக்கு கிடைத்துவந்த உணவு உதவிகளையும் அரசு கடந்த 8 மாதங்களாக நிறுத்திவிட்டதாகவும் அதனால் மிகுந்த சிரமப்படுவதாகவும் அந்த மக்கள் கூறுகின்றனர்.

இந்திய அரசினால் சம்பூரில் முன்னெடுக்கப்படும் அனல்மின் நிலைய நிர்மாணம் காரணமாக தம்மை சொந்த இடங்களில் குடியமர்த்தாமல் அரசு கைவிட்டுள்ளதாக சம்பூர் மக்கள் நீண்டகாலமாக சுட்டிக்காட்டி வருகின்றனர்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்காக கொழும்பிலிருந்து வரும் பிரபல அமைச்சர்களும் மாகாணத்தில் ஆளும் அரசியல் தலைவர்களும் தேர்தலுக்கு முன்னதாக தம்மை சொந்தக் கிராமங்களில் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும்



சம்பூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பூரில் சுமார் 800 ஏக்கருக்கும் அதிகமான காணிப்பகுதியை அரசவேலைகளுக்காக எடுத்துக் கொள்வதாக அரசாங்கம் அண்மையில் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமது வாழ்விடங்களும் பறிபோவதாக தாம் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளதாகவும் மூதூர் பிரதேசசபை உறுப்பினர் நாகேஸ்வரன் தெரிவித்தார்.

## வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப்பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பல இறக்குமதி பொருட்களுக்கு சுங்க தீர்வையினை குறைத்துள்ள நிலையில், வர்த்தகர்களில் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக நுகர்வோருக்கு எந்தவித அனுகூலமும் கிட்டாமல் போவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சட்டவிரோதமான முறையில் செயற்படும் வர்த்தகர்களை இனங்காணும் வகையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார். அவரின் பணிப்புரைக்கு அமைய அதிகார சபையின் அதிகாரிகள் திடீர் சோதனைகளை நாடளாவிய ரீதியாக நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, கடந்த ஆறு மாத காலப்பகுதியினுள் 23 ஆயிரம் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், அவற்றின் மூலம் இனங்காணப்பட்டவர்களிடமிருந்து 5 கோடியே 50 இலட்சம் ரூபா அறவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Grade - 13

இரசாயனவியல்

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

# கல்வி முரசு

| 02 | T | II |
|---|---|---|

நேரம் : 2 மணி

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc.)

தொடர்ச்சி....

**1 தொடக்கம் 4 வரையுள்ள வினாக்களுக்கான அறிவுறுத்தல்கள்**



| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| (a), (b) மட்டும் சரி | (b), (c) மட்டும் சரி | (c), (d) மட்டும் சரி | (a), (d) மட்டும் சரி | ஒரு கூற்றோ வேறு எண்ணிக்கையான கூற்றுக்களோ சரி. |

1) $CH_3CH{=}C(CH_3)-\underset{C_6H_5}{CH}-C\equiv CH$ என்னும் சேர்வை



a) ஒளியியல் சமபகுதிகளாக இருக்கும் (b) கேத்திரகணித சமபகுதிய இயல்பைக் காட்டும்
b) மிக நலிந்த அமிலத்தன்மையைக் காட்டும்
c) கார $KMnO_4$ கரைசலின் நிறத்தை மாற்றும்

2) ஒளியியற் சமபகுதியங்களை விளைபொருளாகத் தரக்கூடிய தாக்கம் - தாக்கங்கள்
a) பென்சீன் + செறி $H_2SO_4 \rightarrow$ (b) 2 குளோரோபுரொப்பேன் +NaOH(ag)$\rightarrow$
c) எதனல் + HCN $\rightarrow$ (d) 3 மெதயில் எட்சு 2 A $+H_2/Pt \rightarrow$

3) பின்வருவனவற்றுள் எது - எவை R - OH ஐ R - Cl ஆகமாற்றும்
a) $PCl_5$ b) $ZnCl_2/HCl$
c) $COCl_2$ d) KCl

4) பின்வரும் எது / எவை $CH_3$ -  - $NH_2$ உடன் தாக்கமுறும்
a) $CH_3I$ b) $C_6H_6$
c) $C_6H_5OCH_3$ d) $CH_3$ -  - COOH

5) பின்வரும் நோக்கங்க்ள் இரண்டையும் கொடுக்கும் சேர்வை - சேர்வைகள் எது - எவை?
1) அமோனியாசேர் $AgNO_3$ கரைசலுடன் வெப்பமேற்ற வீழ்படிவைக் கொடுக்கும்.
2) $NaHCO_3$ கரைசலுடன் வெப்பமேற்ற $CO_2$ வெளியேறும்.

a) 
b) $HCO_2H$
c)  $NH_3^+I$
d) 


**5 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்குரிய அறிவுறுத்தல்கள்**

| | 1 ம் கூற்று | 2 ம் கூற்று |
|---|---|---|
| 1) | உண்மை | உண்மையும் 1ம் கூற்றின் தகுந்த விளக்கமும் |
| 2) | உண்மை | உண்மையும் ஆனால் 1ம் கூற்றின் தகுந்த விளக்கமும் அல்ல. |
| 3) | உண்மை | பொய் |
| 4) | பொய் | உண்மை |
| 5) | பொய் | பொய் |

| 1 ம் கூற்று | 2ம் கூற்று |
|---|---|
| 5) $CH_3CONH_2$, $CH_3CH_2CH_2$ இலும் பார்க்க மூலர்த்தன்மை கூடியது. | $CH_3$- ஒரு இலத்திரன் இழுக்கும் தொகுதியாகும். |
| 6) பென்சீனை செறி $HNO_3$ உடன் வெப்பமேற்றுவதன் மூலம் நைத்திரோ பென்சீனைத் தயாரிக்கலாம். | பென்சீன் இலத்திரன் நாட்ட பிரதியீட்டுத் தாக்கத்தில் ஈடுபடுகின்றது. |
| 7) நீரற்ற $AlCl_3$ முன்னிலையில் $C_6H_5COCl$ ஐ உம் தாக்கமடையும். | நீரற்ற $AlCl_3$ முன்னிலையில் உருவாகும் $C_6H_5C^+O$ பென்சீனைத் தாக்கி விளைவைக் கொடுக்கும். |
| 8) $C_5H_8$ எப்போதும் ஒரு அல்கைனைக் குறிக்கும் | அற்கைனின் பொதுச் சூத்திரம் $C_nH_{2n-2}$ ஆகும். |
| 9) $CH3-\overset{CH_3}{\underset{CH_3}{C}}-CHO$ ஐதான NaOH கரைசலுடன் தாக்கமடையும். | $CH_3-\overset{CH_3}{\underset{CH_3}{C}}-CHO$ ஐதான NaOH உடன் மஞ்சள் நிற பிசின் போன்ற பதாத்தத்தைக் கொடுக்கும். |

10) பென்சீன் பின்வரும் எதனுடன் தாக்கமடையும்?
1) HBr 2) $CH_3CO_2C_6H_5$
3) குளிர்ந்த கார $KMnO_4$ 4) $CH_3MgBr$
5) செறிந்த $H_2SO_4$

11) $CH_3COCl$ ஐயும் $C_6H_5COC$ ஐ ஐயும் வேறு பிரித்தறிவதற்கு பின்வருவனவற்றுள் எதனை உபயோகிக்கலாம்?
1) NaOH 2) $H_2O$ 3) $C_2H_5OH$
4) $CH_3MgBr$ 5) செறிந்த $H_2SO_4$

12) $NO_2^+$ உடன்  ஆகியவற்றின் தாக்குத்திறன் ஏறுவரிசை
(a) (b) (c)
1) a < b< c 2) c< a< b 3) c< b < a
4) c < b< a 5) b < a< c

13) பின்வரும் எது Na அல்லது NaOH இன் நீர்க்கரைசலுடன் தாக்கமடையாது?
1) $(CH_3)_2$ CHOH 2) $CH_3CHO$
3) $CH_3COOCH_3$ 4) $C_6H_5C \equiv CH$
5) $(CH_3)_2$ $CHOCH(CH_3)_2$

14) F எனும் சேர்வை (சார்மூலக்கூற்றுத் திணிவு 100) ஐதரசனையும் 60% C கலவையும் 32% ஒட்சிசனையும் மாத்திரம் கொண்டுள்ளது F இன் கட்டமைப்பு யாதாயிருக்கலாம்?
1) $CH_3CH = CHCH_2CO_2H$ 2) $CH_3CH_2CH_2CO_2H$
3) $CH_3OCH_2CHCH_2CHO$ 4) $CH_3CH_2OCOCH_2CH_3$
5) $CH_3CHOHCH_2CH_2CHO$

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1.a) பின்வரும் கட்டமைப்புடைய சேர்வையின் IUPAC பெயரீட்டை எழுதுக.

$$CH_3CH_2-\underset{CH_2COOH}{CH}-CH= CH-\overset{NH_2}{\underset{CH_2CH_3}{C}}CHO$$


b) C - 40% H-6.7% O - 53.3% திணிவுப்படி கொண்ட சேதனச் சேர்வையிலுள்ள அணுக்களின் எண்ணிக்கையைச் சதவீத அமைப்பில் தருக.
(C -12, H-1, O-16)

c) கீழ்த்தரப்படும் தாக்கத்தினைக் கருத்திற் கொள்க.

$$CH_3CH_2CL + KCN \rightarrow CH_3CH_2CN + KCL$$

கீழ்த்தரப்படும் கூற்றுக்களில் ஒவ்வொரு அமைப்பிலுமுள்ள பொருத்தமற்ற சொல்லை - குறியீட்டை வெட்டி விடுக.
1) $:CN^-$ ஆனது ஒரு { இலத்திரன் நாடி / கருநாடி } ஆகும்.
2) இத்தாக்கம் { கருநாட்ட / இலத்திரன் நாட்ட } { பிரதியீட்டு / கூட்டல் } தாக்க வகை என அழைக்கப்படுகிறது.
3) CL உடன் இணைந்த காபன் அணு {$Sp^3/Sp^2/Sp$} கலப்புக்குட்பட்டதாகும்.

d) கீழேயுள்ள பெட்டிகளுக்கூடாக தாக்க ஒழுங்கமைப்புக் காட்டப்படுகிறது. A,B,C,D பெட்டிகளுள் பொருத்தமான கட்டமைப்புச் சூத்திரங்களை எழுதி விடுக P, Q எனும் இரசாயனப் பதார்த்தங்களின் குறியீடுகளையும் அப்பெட்டிகளுள் எழுதிவிடுக.





2) $C_5H_{12}O$ மூலக்கூற்றுச் சூத்திரத்தையுடைய A,B,C எனும் அற்ககோல்களில் A,B என்பவை ஒளியியற்றாக்கத்திற்குள்ளானவை. என்னும் A ஆனது B யினது ஒளியியற் சமபகுதியம் அல்ல. இவை இரண்டினதும் ஆவிகளை தனித்தனி வெப்பமேற்றப்பட்ட $Al_2O_3$ இற்கூடாகச் செலுத்திப் பின் HBr சேர்க்க இரண்டும் ஒரே விளைவினைத் தந்தன. A யானது நீரற்ற $ZnCl_2$ / செறி HCl உடன் B யிலும் பார்க்க விரைவில் கலங்கற்றன்மையை ஏற்படுத்தியது. C என்ற சேர்வையில் OH கூட்டத்தை வேறு ஐதரசன் அணுக்களுக்காகப் பிரதியிட்ட போதும் வேறு சேர்வை எதனையும் பெறமுடியாது எனின் A,B,C,D யினது கட்டமைப்புச் சூத்திரங்களை உரிய பெட்டியில் எழுதுக.

| A | B | C |
|---|---|---|
| | | |

# இணைந்த கணிதம்

(சென்றவார வினாக்களுக்கான விடைகள்)



1) $f(x) = 4 \quad x \leq -4$

$= x^2/_4 \quad -4 < x < 4$

$= 4 \quad x \geq 4$ வீச்சு $= \{x/ 0 \leq x \leq 4\}$

2) $ax^2 + 2bx + c = 0 \Rightarrow 4b^2 - 4ac > 0$ - (1)

$bx2+2cx+a = 0 \Rightarrow 4c^2 - 4ab > 0$ -(2)

(1) +(2) $4\,[b^2+c^2-ac-ab] > 0$

$b^2+c^2-ac-ab>0$

~~$a^2 + b^2 + c^2 - ac - ab - bc > a^2bc$~~

$\Rightarrow a^2 - bc < ^1/_2\,[(a-b)^2 + (b-c)^2 + (c-2)2]$ (10)

$\Rightarrow a^2 - bc <$ நேர்

$\Rightarrow a^2 - bc < 0$ எல்லா a,b,c ற்கும் (05)

$\frac{1}{(1-x)}$ $\Rightarrow cx^2 + 2ax + b = 0$ ன மூலங்கள் மெய்யானவை அல்ல (25)

3) $(x^5 + \frac{a^2}{x^2})^n \quad u_r = {}^n c_{r-1}\,(x^5)^{n+1-r}(\frac{a^2}{x^2})^{r-1} = {}^n c_{r-1}\,a^{2r-2}\,x^{5n+7-7r}$ (10)

x ஐச் சாராத உறுப்பு ஆக $r = \frac{5n+7}{7}$ (5)

n ன் மி.சி.பெ = 7 பெறுமானம் $= 7_c^5\,(x^5)^2\,(\frac{a^2}{x^2})5$

$= 7_c^5 \times a^{10}$ (25)

4) $x2_y2+xy=1$

$2x + 2y\frac{dy}{dx} + x\frac{dy}{dx} + y = 0$

$\frac{dy}{dx} = -\frac{(2x+y)}{(2y+x)}$

$\frac{dy^2}{dx^2} = -\frac{[2y+x]\,[2+\frac{dy}{dx}] + (2x+y)\,(\frac{2dy}{dx}+1)}{(2y+x)^2}$

$(x+2y)^3\frac{dy^2}{dx^2} = -(x^2+y^2+xy)$

$(x+2y)^3\frac{dy^2}{dx^2} + 6 = 0$

5)

$A = \frac{1}{9}\begin{pmatrix}1 & -4 & 8\\ 4 & -7 & -4\\ 8 & 4 & 1\end{pmatrix} \quad A^T = \frac{1}{9}\begin{pmatrix}1 & -4 & 8\\ -4 & -7 & 4\\ 8 & -4 & 1\end{pmatrix} \quad AA^T \frac{1}{81}\begin{pmatrix}81 & -0 & 0\\ 0 & -81 & 0\\ 0 & -0 & 81\end{pmatrix}$

$A^{-1} = A^T = \frac{1}{9}\begin{pmatrix}1 & -4 & 8\\ -4 & -7 & 4\\ 8 & -4 & 1\end{pmatrix}$

6) $\text{Sin}3\,\theta + \text{Cosec}^3\,\theta = 2$

sin + cosec = x

$x[\text{Sin}2\,\theta + \text{cosec}^2\,\theta - 1] = 2$

$x\,[x^2 - 3] = 2$

$x^3 - 3x - 2 = 0$

$(x+1)\,(x^2-x-2) = 0$

$(x+1)\,(x-2)\,(x+1) = 0 \quad x = -1$ or 2

7) கோண இரு கூறாக்கிகள் $\frac{2x+y+1}{\sqrt{5}} = \pm\,\frac{x+2y+8}{\sqrt{5}}$


$\oplus \Rightarrow x - y - 7 = 0$

$\oplus \Rightarrow 3x + 3y + 9 = 0 \quad x + y + 3 = 0$

$\left|\frac{\tan\theta\,/ -2 - 1}{1+(-2)\,(1)}\right| = 3 \quad \theta > 1/4$

$x+y+3=0$ கூங் 4 இருகூறாக்கி

8)





$\tan 45 = \left|\frac{m - ^1/_2}{1 + m(^1/_2)}\right|$

$\frac{2m-1}{2+m} = 1 \quad m = 3$ or $- ^1/_3$

கோடுகளின் சமன்பாடுகள் $y - 2 = 3\,(x-1), \quad y - 2 = -1/3\,(x-1)$

$3x - y - 1 = 0 \quad x + 3y - 7 = 0$

9)




$x2+y2+4x+2y-4=0$

தொடுகை $x(1)+y(2)+2(x+1)+1(y+2)-4=0$

நாண் $3x + 3y = 0$ (10)

$x+y=0$ இதை வட்ட சமன்பாட்டுடன் தீர்க்க $x^2+x^2+4x-2x-4=0$

$x^2 + x - 2 = 0$

$(x+2)\,(x-1) = 0$ (5)

தொடுபுள்ளிகள் $x = -2,\ y = +2$ (5) $\quad x = 1,\ y = -1$ (5)

10) $S1 = x2 + Y2 + 4x - 2y - 20 = 0$

$S2 = x2 + y2 - 4/5\,x + 8/5\,y - 16/5 = 0$

S1 ன் மையம் A = (-2, 1) $\quad \sqrt{r_1 = 4 + 1 + 20 = 5}$ (5)

S2 ன் மையம் B = (2/5, - 4/5) $\quad \sqrt{r_2 = ^4/_{25} + ^{16}/_{25} + ^{16}/_5 = 2}$

$AB = \frac{144}{25} + \frac{81}{25} = \frac{15}{5} = 3 = r_1 - r_2$ (5)

உட்புறமாக தொடும் பொதுத் தொடலி $S1 - S2 = 0$

$\frac{24\,x}{5} - \frac{18y}{5} - \frac{84}{5} = 0$

$4x - 3y - 14 = 0$ (10)

## PART B

$\frac{1}{(x-2)\,(x-1)^3} = \frac{k}{x-2}\,\frac{f(x)}{(x-1)^3}$

$1 = k(x-1)^3 + f(x)\,(x-2)$

$x = z \quad 1 = k$

$f(x) = \frac{1 - (x-2)^3}{x-2} = \frac{(2-x)\,[1+(x-1)+(x-1)^2]}{x-2}$ (20)

$f(x) = -[1+(x-1)+(x-1)^2]$ (10)

$\frac{1}{(x-2)\,(x-1)^3} = \frac{1}{(x-2)} - \frac{[1+(x-1)+(x-1)^2]}{(x-1)^3} = \frac{1}{x-2} - \frac{1}{(1-x)^3} - \frac{1}{(x-1)^2} -$ (20)

(b) $(x-a)\,(x-b) + b^2 = 0 \quad \alpha, \beta$

$x^2 - (a+b)\,x + ab + h\,2^2 = 0$

$\alpha + \beta = a+b$

$t = (\alpha + \beta + \alpha)$ or $(\alpha + \beta + \beta)$

$t = (\alpha + \beta) + x$

$x = t - (a+b)$

$(x-a)\,(x-b) + h^2 = 0$, $x = t - (a+b)$ என பிரதியிட

$(t - 2a - b)\,(t - a - 2b) + h^2 = 0$

$(x - 2a - b)\,(x - a - 2b) + h^2 = 0$ ன் மூலங்கள் $2\alpha + \beta \quad \alpha + 2\,\beta$ ஆகும். (30)

12) n=p ஆக முடிவு உண்மை

$Sp = 7/81\,[10^{p+a}) - ap - 10]$ (10)

n = ph ஆக

$S+1 = ^7/_{81}\,[10^{p+1} - 10] + [7x\,(10^p + 10^{p-1} + .... + 10^0)]$ (10)

$= 7/81\,[10^{p+2} - 9\,x10^{\,p+1} - ap - 10 + 9\,\frac{(10^{p+1} - 1]}{9}$ (10)

$= 7/81\,[10^{\,p+2} - a\,(p+1) - 10$ (10)

= RHS

n= 1 ஆக LHS = 7, RHS= $7/81\,[10^2 - 9 - 10] = 7$ (10)

mathematical Induction Statment (10)

b) $Ur = \frac{1}{1.2.3 + ..... + r\,(r+1)\,(r+2)}$

$1.2.3 + ..... + r\,(r+1)\,(r+2)$

$f(r) = r(r-1)\,(r-2)\,(r+3)\,/4$ (10)

$f(r-1) = (r-1)\,r(r+1)\,(r+2)/4$ (5)

$f(r) - f(r-1) = r(r+1)\,(r+2)$ (10)

$1.2.3 + ...... + r\,(r+1)\,(r+2)$

$= \frac{r(r+1)\,(r+2)\,(r+3)}{4}$

$Ur = \frac{1}{r(r+1)\,(r+2)\,(r+3)}$

$Ur = \frac{2/3}{r}\ \frac{-2}{r+1}\ \frac{+2}{r+2}\ \frac{+2/3}{r+3}$ (10)

$Sn = \frac{2}{9} + \frac{-2/3}{n+1} - \frac{-2/3}{n+2} - \frac{-2/3}{n+3} + \frac{2}{n+2}$ (10)

$= \frac{-2}{9} - \frac{4}{3\,(n+1)\,(n+2)\,(n+3)}$ (10)

13) a) $\frac{(x+z^0)\,2}{2x-z^0} = |P + q\,\varsigma^0$

$[(x^2-1) + 2z0x]\,[2x+\varsigma^0] = p + \varsigma^0$ ல் 2

$P = (x^2-1)\,2x - 2x$

$Z = 1/2\,(1+5)$

$= \frac{1}{2}\ \frac{1}{\sqrt{2}} + \frac{1}{\sqrt{2}} = \frac{1}{\sqrt{2}}\,\text{Cos}\,\pi/4 + \text{Sin}\,(\pi/4)$

$z^4 = 1/4\,[\text{Cos}\,x + z^0\,\text{Sin}\,\pi\,]$

$z4 = 1/4$ arg $z4 = \pi$

$q = \frac{(x^2-1)\,2x - 2x}{4x^2+1} \quad q = \frac{x^2 - 1 + 4x^2}{4x^2+1}$

$q = \frac{2x^2 - 4x}{4x^2+1} \quad q = \frac{5x2 - 1}{4x^2+1}$ (10)

$P = \frac{2x^2 - 4x}{4x^2+1} \quad q = \frac{5x2 - 1}{4x^2+1}$

$P^2 + q^2 = \frac{(x^2+1)^2\,(4x^2+1)}{(4x^2+1)^2} = \frac{(x^2+1)^2}{(4x^2+1)}$ (20)

d) $Z = x + 2y$

$Z - 1 = (x-1) + 2y$

$Re\,(z-1) = x - 1 = 0$

$x = 1$ (10)

$\Delta$ COD ல் அப்பலோனியஸ் தேபடி

$OC^2 + OD^2 = 2\,OA^2 + 2A\,C^2$ (10)

$|Z_1 + Z^2|^2 + |Z - Z - Z|^2\ 2 = 2\,Z_1\,2 + 2\,Z^2|^2$ (10)

(தொடரும்.....)

# ஜனாதிபதி பதவி ஏற்புவிழா நாளை புதுடில்லியில் கோலாகலம்



(புதுடில்லி)

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட பிரணாப்முகர்ஜி 69 சதவீத வாக்குகள் வாங்கி அமோக வெற்றி பெற்றார். சுமார் 7 மணி நேரம் நடந்த வாக்கு எண்ணிக்கை முடிவில் செல்லுபடியான 10 இலட்சத்து 29 ஆயிரத்து 750 வாக்குகளில் பிரணாப்முகர்ஜிக்கு 7 இலட்சத்து 13 ஆயிரத்து 763 வாக்குகள் கிடைத்தன.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சங்மாவுக்கு 3 இலட்சத்து 15 ஆயிரத்து 978 வாக்குகள் கிடைத்தன. பிரணாப் முகர்ஜி கடந்த 40 ஆண்டுகளில் மத்திய அரசில் நிதி, இராணுவம், உள்துறை என பல முக்கிய பொறுப்புகளை வகித்தவர்.

ஜனாதிபதி ஆனதைத் தொடர்ந்து அவருக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாக பதவி ஏற்கும் விழா நாளை (புதன்கிழமை) நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் பகல் 11 மணிக்கு நடைபெற உள்ளது. பிரணாப் முகர்ஜிக்கு, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கபாடியா பதவி பிரமானமும், இரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைப்பார்.

இதற்கிடையே ஜனாதிபதி மாளிகையில் பிரணாப் முகர்ஜி குடியேறுவதற்கான ஏற்பாடுகளும் தொடங்கி விட்டன. பிரதீபாபட்டீல் பதவிக்காலம் இன்றுடன் முடிகிறது. அவருக்கு நேற்று வழியனுப்பு விழா நடத்தப்பட்டது. ஜனாதிபதி மாளிகை அதிகாரிகளும், பாதுகாப்புப் படையினரும் அணிவகுப்பு மரியாதை கொடுத்து பிரதீபாவுக்கு விடை கொடுத்தனர். தற்போது டில்லி தல்க தோரா சாலையில் மனைவி சுவ்ராவுடன வசித்து வரும் பிரணாப் முகர்ஜி அந்த வீட்டில் தனக்கு விருப்பமான துர்க்கை சிலையை வைத்து வழிபட்டு வருகிறார்.

இந்தியச் செய்திகள்

அந்த சிலையை பிரணாப் முகர்ஜி விருப்பத்தின் பேரில் ஜனாதிபதி மாளிகையில் தனி பூஜை அறையில் நிறுவ அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். இது தவிர பிரணாப் முகர்ஜிக்கு மிகவும் பிடித்த இந்திரா காந்தியின் பெரிய படம் ஒன்றும் அவரது வீட்டில் இருந்து ஜனாதிபதி மாளிகைக்கு கொண்டு வரப்பட உள்ளது.


மேலும் சோனியாவுடன் தான் இருக்கும் படம் ஒன்றையும் ஜனாதிபதி மாளிகையில் பார்வையாளர்கள் அமரும் அறையில் வைக்க பிரணாப் முகர்ஜி அறிவுறுத்தியுள்ளார். உலகிலேயே மிகப் பெரிய ஜனாதிபதி மாளிகை என்ற சிறப்பு டில்லியில் உள்ள இந்திய ஜனாதிபதி மாளிகைக்கு உண்டு. 200 அறைகளை கொண்ட அந்த மாளிகையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவை குடியேறும் ஜனாதிபதிகளால் சிறு, சிறு மாற்றங்கள் செய்யப்படுவதுண்டு. அது போல இந்த தடவையும் பிரணாப் முகர்ஜி விருப்பத்துக்கு ஏற்ப மாற்றங்கள் செய்ய அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

## இலவசங்களால் தமிழகம் பாழ்படுகிறது

(திண்டுக்கல்)

இலவசங்கள் மூலம் தமிழகம் பாழ்படுத்தப்படுகிறது. மக்களிடம் உழைப்பு இல்லாமல் போய்விட்டது,. என, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார். அவர் கூறியதாவது: சோதனைகளும், துன்பங்களும் தமிழகத்தை தொடர்ந்து முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றன. வெளியிலும், உள்ளேயும் இருப்பவர்களால், தமிழகத்திற்கு ஆபத்து ஏற்படுகிறது இதை முறியடிக்கும் பணியை ம.தி.மு.க., மேற்கொண்டுள்ளது. நதிகளை, மத்திய அரசு ஒருங்கிணைக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் தமிழக முதல்வரின் அணுகுமுறை பாராட்டுக்கு உரியது. யாரிடமும் எங்களுக்கு காழ்ப்புணர்ச்சி கிடையாது நல்லது செய்தால் பாராட்டுவோம் தீயதை எதிர்ப்போம். இலவசம் என்ற பெயரில், தமிழகத்தை பாழ்படுத்திக் கொண்டிருக் கின்றனர் உழைப்பு, மக்களிடம் இல்லாமல் போய் விட்டது. மது குடிக்க வைத்து எதிர்கால சந்ததியினரை பாழடித்துக் கொண்டிருக்கின்றனர். உரவிலையை பலமடங்கு உயர்த்தி விட்டனர். ஈழத்தமிழர் பிரச்சினையில் நாடகம் ஆடிக் கொண்டிருக்கும் கருணாநிதி, மீண்டும் அதை அரங்கேற்றி மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறார். மக்கள் அவரை நம்பமாட்டார்கள், என்றார்

# முல்லைப் பெரியாறு அணையை பராமரிக்க அனுமதி



(புதுடில்லி)

தமிழ்நாடு - கேரளா மாநில அரசுகளுக்கு இடையே முல்லைப் பெரியாறு அணை பராமரிப்பு பிரச்சினை வலுத்து வருகிறது. தமிழர்களின் நலனை இரண்டாம் பட்சமாக கருதும் கேரள அரசு அந்த அணையை உடைத்து விட்டு புதிய அணை கட்டவேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளது.


முல்லைப்- பெரியாறு அணையை தமிழகம் பராமரிப்பதை பொறுத்துக்கொள்ள இயலாத கேரளம் இதுதொடர்பாக உச்சநீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தது. மேலும் நீதிபதி அனந்த் குழு அறிக்கையை தரவேண்டும் என்றும் கேரளா கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் தமிழக அரசும முல்லைப் பெரியாறு அணை பராமரிப்பு உரிமை கோரி மனு செய்திருந்தது.

அதன்படி நேற்று உச்சநீதிமன்றில் தமிழகம் கேரளா மனுக்கள் மீதான விசாரணை நடந்தது. அப்போது முல்லைப் பெரியாறு அணையில் மத்திய அரசு அதிகாரிகள் முன்னிலையில் தமிழகம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளலாம் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அதுபோல ஆனந்த் குழு அறிகையை கேரளாவுக்கு கொடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். இதை யடுத்து இந்த வழக்கு விசாரணை ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# ஜெகன்மோகன் பிணை மனு வாபஸ்




(ஐதராபாத்)

ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவரும், கடப்பா தொகுதி எம்.பி.யுமான ஒய்.எஸ். ஜெகன்மோகன் ரெட்டி பிணை கோரி தாக்கல் செய்த மனுவை திரும்பப்பெறுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜெகன் மோகன் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கில் கடந்த மே மாதம் 27ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து, அவர் பிணை மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், அவரது பிணை மனு மீதான விசாரணையின் போது, ஜெகனுக்கு பிணை அளிக்கக் கூடாது என்று சி.பி.ஐ. தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட ஆந்திர உயர்நீதிமன்றம் ஜூலை 4ஆம் திகதியன்று ஜெகன்மோகன் ரெட்டிக்கு பிணை வழங்கவில்லை. எனவே, இதனை எதிர்த்து ஜெகன் மோகன் ரெட்டி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில், சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெகன்மோகன் ரெட்டிக்கு எதிராக சி.பி.ஐ. இதுவரை எந்த ஆதாரத்தையும் தாக்கல் செய்யாததால், ஆந்திர உயர்நீதிமன்றம் பிணை வழங்கும் சூழ்நிலை நிலவுவதாக தெரிகிறது. உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிணை மனுவை ஜெகன் திரும்பப் பெற்றுக் கொள்வார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.




## அமிதாப் பச்சன் வீட்டில் திருடன்

மும்பையில் உள்ள பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் வீட்டுக்குள் புகுந்த திருடனை பொலிஸார் கைது செய்தனர். மத்திய பிரதேச மாநிலத்தை சேர்ந்த கேவத் என்ற 20 வயது இளைஞன், அமிதாப் பச்சன் வீட்டுக்கு அருகே உள்ள குல்மோகர் மரத்தில் ஏறி அதிலிருந்து வீட்டின் பால்கனிக்குள் நுழைந்துள்ளான். பின்னர் வீட்டில் இருந்த 8 ஆயிரம் ரூபாயை எடுத்து கொண்டு தப்ப முயன்றுள்ளான். அப்போது ஏதேச்சையாக அங்கு வந்த வீட்டு வேலைக்காரர்கள் கேவத்தை கையும் களவுமாக பிடித்து, பொலிஸில் ஒப்படைத்துள்ளனர். திருட வந்த அந்த நபர் வேறு நோக்கத்துடன் உள்ளே வந்தாரா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்

## கப்டன் லட்சுமி சேகல் மரணம்



(கான்பூர்)

சுதந்திரப் போராட்ட வீராங்கனை கப்டன் லட்சுமி சேகல் நேற்று மரணம் அடைந்தார். கான்பூரில் தங்கி இருந்த அவருக்கு நேற்று காலை மாரடைப்பு ஏற்பட்டது. இதனால் அவரது உயிர் பிரிந்தது.

அவருக்கு வயது 97. கப்டன் லட்சுமி, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் தேசிய படையில் கப்டனாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்



**ரஜனிகாந் றஸ்மி**

உயரப்புலம்,

ஆனைக்கோட்டை

மூன்றாவது பிறந்தநாள்

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்தை - தினமுரசு 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# சீனாவின் தலைநகரில் கடும் மழை

# வெள்ளத்தில் மூழ்கி 37பேர் பலி



(பீஜிங்)

சீனா தலைநகர் பீஜிங்கில் பெய்த கடும் மழைக்கு 37பேர் பலியாகியுள்ளனர். கடந்த அறுபது வருடங்களில் இல்லாத அளவுக்கு கொட்டித்தீர்த்த இந்த கடும் மழைக்கு சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள வீடுகள் உடைந்து வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. இந்த வெள்ளத்தில் 25 பேர் உயிரோடு அடித்து செல்லப்பட்டதுடன் 6 பேர் வீடு இடிந்ததில் கொல்லப்பட்டனர். மற்றும் 6 பேர் மின்சாரம் பாய்ந்து மரண மடைந்தனர்.

இந்த மழையால் 20 லட்சம் பேர் கடுமையாக பாதிக்கப்பட்டதுடன் சுமார் 100 கோடி அமெரிக்க டொலருக்கு மேல் மிகப் பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் கொட்டி தீர்த்த மழைக்கு சுமார் ஒரு இலட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப் படுத்தப்பட்டனர். நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் பாதிப்படைந்துள்ளன. சாலைகள், குகைச் சாலைகள் மற்றும் பாலங்கள் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

மின்சாரம் தடைப்பட்டதுடன் ரயில் போக்குவரத்து தொலைபேசி இணைப்புகள், இணையதள சேவைகள் எல்லாம் தடைபட்டுள்ள நிலையில் 12 நகரங்களில் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் 12000இற்கு மேற்பட்ட மீட்புக்குழுவினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். சேதத்தின் விளைவுகள் இன்னும் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

## ஜப்பான் கடல் அருகே அமெரிக்க விமானம் விபத்து

ஜப்பான் நாட்டின் அருகே, அமெரிக்காவுக்கு சொந்தமான போர் விமானம் ஒன்று கடலில் விழுந்தது. அமெரிக்காவின் அமோரி விமானப் படைத் தளத்திலிருந்து எப்-16 ரக போர் விமானம் புறப்பட்டு சென்றது.

இந்த விமானம் நேற்று காலை 7.30 மணி அளவில் ஜப்பான் நாட்டின் அருகே உள்ள பசுபிக் கடலில் விழுந்தது.

இந்த போர் விமானத்தை ஒரே ஒரு விமானி தான் ஓட்டிச் சென்றார். அவர் கதி என்ன? என்று தெரியவில்லை. இச்சம்பவம் குறித்து ஜப்பான் அதிகாரிகள்



கூறுகையில், விபத்துக்கான காரணம் குறிந்து ஆராய்ந்து வருகிறோம், அதேவேளை விமானியை மீட்கும் பணியும் தீவிரமாக நடந்து வருகிறது என்று தெரிவித்தனர்.

## சிரிய உள்நாட்டுப் போரில் பலியானோர் தொகை 19ஆயிரம்

சிரியாவில் கடந்த ஓராண்டிற்கும் மேலாக நடந்து வரும் உள்நாட்டு போரில், இதுவரை 19 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்பு அறிவித்துள்ளது.சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்அசாத்தை பதவி விலகக் கோரி, போராட்டக்காரர்கள் கடந்தாண்டு மார்ச் மாதம் முதல் போராடி வருகின்றனர்.

போராட்டக்காரர்களை ஒடுக்க இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில், இதுவரை 19,106 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பிரிட்டனை சேர்ந்த மனித உரிமை அமைப்பின் பார்வையாளர் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அப்துல் ரஹ்மான் குறிப்பிடுகையில், சிரியாவில் ஏற்பட்ட கிளர்ச்சியில், 13,296 அப்பாவி மக்களும், 4,861 இராணுவ வீரர்களும், 949 போராட்டக்காரர்களும் பலியாகியுள்ளனர்.

சிறையில் அடைக்கப்பட்ட மற்றும் காணாமல் போனவர்களை பற்றி இன்னும் தகவல் இல்லை என்றார்.இந்நிலையில் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில், இராணுவத்துக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கடந்த சில நாட்களாக கடுமையான சண்டை நடந்து வருகிறது.

டமாஸ்கஸ் நகரின் முக்கிய பகுதிகளில்; டாங்குகளும், ஏவுகணைகளும் நிறுத்தப்பட்டுள்ளன. கிளர்ச்சியாளர்கள் மீது ஹெலிகாப்டர் மூலம், இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.இராணுவத்துக்கு எதிராக 'எரிமலை' என்ற பெயரில் போராடடத்தை நடத்தி வருவதாகவும், தங்கள் மீது இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க அரசு படைகள் முயற்சிப்பதாகவும், போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.


நிலைமை மோசமாகி வருவதால், சிரியாவுக்கு ஆயுதம் விநியோகம் செய்யும் ரஷ்யாவுடனும், சீனாவுடனும், ஐ.நா முன்னாள் பொதுச் செயலர் கோபி அன்னன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

போராட்டக்காரர்களை கொன்று குவிக்கும் சிரியா அரசு மீது பொருளாதார தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா பாதுகாப்பு சபையில் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டது.

ஆனால் இந்த தீர்மானத்தை ரஷ்யாவும், சீனாவும் ஏற்கவில்லை. இதற்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## தான்சானியா படகு விபத்தில் அழுகிய நிலையில் மீட்கப்பட்ட சடலங்கள்





கிழக்கு ஆபிரிக்க நாடான தான்சானியாவில் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 146 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தான்சானியாவின் தர் எஸ் சலாம் என்ற நகரில் இருந்து ஜான்ஜிபார் தீவுக்கு கடந்த புதன் கிழமை படகு சென்று கொண்டிருந்தது. அதில் 291 பயணிகள் இருந்தனர். படகில் 250 பேர் வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றி சென்ற படகு, இந்திய பெருங்கடலில் மூழ்கியது. படகில் இருந்தவர்கள் கடலில் மூழ்கி உயிருக்கு போராடினர்.

தகவல் அறிந்து மீட்புப் படையினர் விரைந்து சென்று பலரை காப்பாற்றினர். அதற்குள் நீரில் மூழ்கி பலர் இறந்தனர். பலர் காணாமல் போயினர்.

இதுகுறித்து அதிகாரி அலி ஜுமா ஷம்ஹனா கூறுகையில், இதுவரை வெளிநாட்டினர் உள்பட 145 பேரை உயிருடன் மீட்டோம். 69 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. இன்னும் 77 பேர் காணவில்லை.

கடந்த 3 நாட்களாக அவர்களை தேடும் பணி நடந்தது. யாரும் கிடைக்கவில்லை. மூன்று நாட்கள் ஆனதால் இனிமேல் அவர்கள் உயிருடன் இருக்க வாய்ப்பில்லை. அதனால் மீட்பு பணி நிறுத்தப்பட்டு விட்டது என்றார்.

இதேவேளை இறந்தவர்களை அடையாளம் காணுவதற்காக உடல்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை அழுகி விட்டதால் அந்த பணியும் நிறுத்தப்பட்டு சடலங்கள் புதைக்கப்பட்டு விட்டன.

உலகச் செய்திகள்

## பல மாதங்கள் பதுங்கியிருந்த பாம்பு

(சூரிச்)

சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள சுஹோவில் என்ற இடத்தில் அனிகா (வயது 28) என்ற பெண் தனது கணவருடன் வசித்து வருகிறார். இவருடைய வீட்டு குளியல் அறையில் சுமார் இரண்டரை அடி நீளமுள்ள பாம்பு பதுங்கி இருந்தது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து 6 மாத காலத்திற்கும் மேல் அது அங்கேயே இருந்திருக்கிறது. ஆனால யாருடைய கண்ணிலும் படாமல் வாஷ் பேஷனுக்கு அடியில் பதுங்கியுள்ளது.

சம்பவத்தன்று அனிகா தற்செய



லாக கீழே குனிந்து பார்க்கும் போது பாம்பு இருப்பதை கண்டு பொலிஸுக்கு தகவல் கொடுத்தார். அவர் அதிர்ச்சியில் கூச்சல் போட்டதால் பாம்பு ஊர்ந்து ஜன்னல் வழியாக வெளியே தப்பிச் சென்று விட்டது. இந்த பாம்பு பக்கத்தில் இருக்கும் காட்டுப்பகுதியில் இருந்து வந்திருக்கலாம் என்றும், அது விஷமற்றது என்பதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படுத்தவில்லை என்றும் வீட்டு உரிமையாளர் கூறினார்.

## சுவர்களை உடைப்போம் ஈராக்கில் தாக்குதல் எச்சரிக்கை

(கெய்ரோ)

ஈராக்கில் சிறை வைக்கப்பட்டுள்ள தங்கள் இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகளை விடுவிப்பதற்காக பல புதிய தாக்குதல்கள் நடத்த திட்டமிட்டிருப்பதாகவும், ஈராக்கில் முன்பு இருந்ததை போல தங்கள் இயக்கம் மீண்டும் வலிமைபெறும் எனவும் அல்-கொய்தா இயக்கம் அறிவித்துள்ளது.

தன்னை அல்-கொய்தா இயக்கத்தின் தலைவராகக் கூறியுள்ள அபுபக்கர் அல்பக்தாதி, இதுபற்றிய ஒலிபரப்பு ஒன்றை தங்கள் இணையதளத்தில் வெளியிட்டுள்ளார். இதில் 'சுவர்களை உடைப்போம்' என்ற பெயரில் புதிய தாக்குதல் ஒன்று நடத்தப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

ஆனால் அந்த ஒலிப்பதிவில் இடம் பெற்றுள்ள குரல் யாருடையது என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை. கடந்த 2010-ம் ஆண்டில் அல்-கொய்தா இயக்கத்தின் தலைவர் ஆன அல்பக்தாதியின் குரல், தற்போது தான் முதல்முறையாக பதிவு செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

ஈராக்கின் அனைத்துப் பகுதிகளிலும் முன்பு இருந்ததைபோல அல்-கொய்தா இயக்கம் மீண்டும் வலிமை பெற, பழங்குடியின தலைவர்கள் உதவ வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.


கடந்த 2007, 2008ஆம் ஆண்டுகளில் அமெரிக்க கூட்டுப் படையினர் நடத்திய தாக்குதல்களால் அல்கொய்தா இயக்கம் ஈராக்கில் தனது வலிமையை இழந்தது குறிப்பிடத்தக்கது.



# ஞானிமடம் அ.த.க. பாடசாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

(கிளிநொச்சி)

பூநகரி ஞானிமடம் அ.த.க. பாடசாலைக்கு 22 மில்லியன் ரூபா பெறுமதியில் இருமாடிக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணியை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் ஆரம்பித்துவைத்தார்.



ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாரின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (யுனிசெப்) நிதியுதவியில் பூநகரி ஞானிமடம் அ.த.க. பாடசலைக்கு சுமார் 22 மில்லியன் ரூபா செலவில் இருமாடி வகுப்பறைக் கட்டடத் தொகுதி அமைக்கும் பணியை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் நேற்று அடிக்கல்லை நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

குறித்த பாடசாலையில் நிலவிய வகுப்பறைப் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் வகையில் ஆறு வகுப்பறைகளையும் ஆசிரியர் தங்ககத்தையும் உள்ளடக்கியதாக இக்கட்டடத்தொகுதி அமையப் பெறவுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரால் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி மேம்பாட்டிற்காக மேற்கொண்டு வரும் விசேட வேலைத்திட்டத்திற்கமைவாக பின்தங்கிய பகுதிகளின் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக இப்பாடசாலைக்கான கட்டடத் தொகுதியும் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புவனராஜா, பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தர்மரத்தினம், பாடசாலையின் அதிபர் திருமதி கனகசபை, ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் குலசேகரம், கிராம சேவையாளர் ராஜகோபால் ஆகியோரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் மற்றும் பழைய மாணவர்களும், பெற்றோர், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# கொலை வழக்கு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பெண் ஒருவரைக் கழுத்து நெரித்து கொலை செய்ததான வழக்கில் சந்தேகநபரை எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் மா.கணேசராசா நேற்று உத்தரவிட்டார்.

கடந்த 2007 ஆம் ஆண்டு தை மாதம் 19 ஆம் திகதி திருநெல்வேலி பல்கலைக்கழக வீதியில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவரை கழுத்து நெரித்துக் கொலை செய்ததான குற்றச்சாட்டில் சந்தேகநபர் மீது யாழ். நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் இவ்வழக்கின் சந்தேகநபருக்கு பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த சந்தேகநபர் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது சந்தேகநபரை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார். (பா)

# மண்டைதீவு – அல்லைப்பிட்டி வீதி தற்காலிகமாக புனரமைப்பு



மண்டைதீவு மக்களின் நலன் கருதியும் கோரிக்கைக்மைவாகவும் வேலணை பிரதேச சபை தவிசாளர் சி.சிவராசவின் நெறிப்படுத்தலாலும் வேலணை பிரதேச சபை உறுப்பினர்களான ஜெ.ஜெயரஞ்சன் மற்றும் சி.ரவின்சன் ஆகியோருடன் இணைந்து பிரதேச மக்களின் ஒத்துழைப்புடனும் தற்காலிகமாக மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதி புனரமைப்புச் செய்யப்பட்டது.

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதியானது தீவகம் தெற்கு பிரதேச செயலகம், தீவக கல்வி வலயம், கோட்டக் கல்விப் பணிமனை, வைத்தியசாலை மற்றும் வங்கிகள், இலங்கை மின்சாரசபை போன்ற அரச நிறுவனங்களின் தேவைகளை நாடிவரும் மக்கள் இப்பாதை ஊடாக குறுகிய நேரப் பயணம் மூலம் எதிர்காலத்தில் சிறந்த பயனை மக்கள் பெற்றுக் கொள்ளமுடியும் என நம்பப்படுகின்றது.

# மின்வெட்டு நாடு முழுவதும்

(கொழும்பு)

நாடு முழுவதும் குறித்த பகுதிகளில் தினசரி இருமணி நேர மின்வெட்டு அமுல் செய்யப்பட்டு வருகிறது.

நாட்டின் மின்சார விநியோகத்திற்கு 400 மெகாவோட்ஸ் மின்சார உற்பத்தியை வழங்கும் நுரைச்சோலை மற்றும் கெரவலப்பிட்டிய ஆகிய மின்சார உற்பத்தித் தளங்களில் தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்டுள்ளமையை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதனா மருத்துவ...

தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருடன் பேசி இதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அடுத்த கட்டப் பிரச்சினையாக நோயாளர்கள் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பாக விவாதிக்கப்பட்டு அதற்குரிய தீர்வை உரிய முறையில் பெற்று வைத்தியசாலை நிர்வாகம் அதற்குரிய நடவடிக்கைகளை ஒரு வாரகாலத்திற்குள் மேற்கொள்ள வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டது.

வைத்தியாலையில் தற்போது நிலவி வருகின்ற சுகாதார நடைமுறைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

இதன்போது வைத்தியசாலையில் உள்ள பிரேத அறையில் சடலங்கள் தேங்கி இருப்பதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதாவது வைத்திசாலையில் உள்ள பிரேத அறையில் உள்ள குளிரூட்டிகள் பராமரிக்கின்ற ஒப்பந்தக்காரருக்கு 15 லட்சத்திற்கு மேலாக வைத்திசாலை நிர்வாகம் வழங்கவேண்டியுள்ளதால் முதடைந்துள்ள குறித்த குளிரூட்டிகளைத் திருத்துவதற்கு காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக சிங்கப்பூரில் உள்ள சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருடன் தொடர்பு கொண்ட அமைச்சர் ஒரு வாரகாலத்திற்குள் குளிரூட்டிகளை சீர்செய்யுமாறு தங்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை தொடர்பாக தான் கவனம் எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

வைத்தியசாலையில் நிலவிவருகின்ற நிர்வாகம் தவிர்ந்த பிரச்சினைகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு தீர்வை வைத்தியசாலை நிர்வாகம் காணவேண்டும் என்று வைத்திசாலை நிர்வாகத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளது.

## பணிகளை...

பணி நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகள் நிறைவடையும் வரையில், யாழ்ப்பாண மருத்துவ மனையின் பணிப்பாளரை, பிறிதொரு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய...

பயன்படுத்தப்படுவதாக அணு சக்தி அதிகார சபையின் தலைவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் அணுத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு மேலும் அதிகரிக்கப்படுவதால் இலங்கையில் திடீர் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பது முக்கியத்துவம் வாய்ந்ததென கலாநிதி ரஞ்ஜித் விஜேவர்தன மேலும் சுட்டிக்காட்டினார்.

## மரணச் சான்றிதழ்...

அவர்களின் விபவரங்களைத் தெரிந்துகொண்ட இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை காணமல் போனவர்களின் உறவினர்களை முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து காணாமல் போனவர்களிற்கான மரணச்சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றது. அத்துடன் அங்கு வருகை தந்த 30 இற்கு மேற்பட்டவர்களிடம் வெற்று வெள்ளைத்தாளில் கையொப்பமும் இராணுவத்தால் பெறப்பட்டுள்ளது. காணாமல் போனவர்களுக்கு மரணச்சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் இராணுவத்தினருக்கு இல்லை. இதனை சிவில் நிர்வாகமே மேற்கொள்ளவேண்டும். சிவில் நிர்வாக நடவடிக்களில் இராணுவம் தலையிடுவதால் ஜனநாயகம் பாதிக்கப்பட்டு வருகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அண்மையில் யாழில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். கட்டளைத் தளபதி தாங்கள் மக்களுக்கு 2000 வீடு கட்டிக்கொடுத்திருக்கின்றோம் அரசியல்வாதிகள் மக்களுக்கு என்ன செய்தார்கள் என்று கேள்வி எழுப்பியிருந்தார். அரசியல்வாதிகள் என்ன செய்தார்கள் என்று கேட்கும் அதிகாரம் இராணுவத் தளபதிக்கு இல்லை, பாதுகாப்பு படைகளின் தளபதி பாதுகாப்பு விடயங்களை மட்டுமே பார்க்கவேண்டும் நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். அரசியல் வாதிகள் என்ன செய்தார்கள் என்பதைக் கேட்கும் உரிமையும் அதிகாரமும் மக்களுக்கே இருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சினால் வீடு கட்டுவதற்கு இராணுவத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் அவர்கள் கட்டிக்கொடுக்கலாம் எங்களுக்கும் அரசாங்கம் வீடு கட்டுவதற்கு நிதி ஒதுக்கினால் நாங்களும் கட்டிக்கொடுப்போம் என்றார்.

அத்துடன் இன்று வவுனியாவில் நடைபெறவுள்ள நிமலரூபனின் இறுதிச் சடங்கிற்காக அவரின் வீட்டினை துப்பரவு செய்யும் பணியை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். இது மக்களை அந்த இறுதிச்சடங்கில் கலந்துகொள்ளவிடாமல் செய்கின்ற ஒரு செயலாகவே பார்க்கப்படுகின்றது என்றார்.

நாடாளுமன்றத்தில் அரசு அரசியல் கைதிகளிற்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்வது தொடர்பாக வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் அந்த வாக்குறுதிகளை மீறுகின்ற வகையில் நீண்ட காலமாக சிறைச் சாலைகளில் வாழுகின்ற தமிழ் அரசியல் கைதிகளை பூசா முகாமிற்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகின்றது. இதனால் அந்தக் கைதிகளை அவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் சென்று பார்வையிடும் உரிமையும் மறுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தை இணைப்பதற்கு இந்தத் தேர்தலும் இனிவரப் போகின்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலும் ஒரு முக்கியமான தேர்தலாக அமையப்போகின்றது. இந்த இரண்டு சபைகளிலும் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தை இணைப்பதற்கு தீர்மானம் நிறைவேற்றி நாடாளுமன்றத்தின் ஊடாக இந்த இணைப்பைச் செய்யலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இந்திய கைப்பொம்மை...

இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே அதன் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் இந்தியாவின் கைப் பொம்மையாக செயற்படக் கூடியவர் ஒருவரை முதலமைச்சராக நியமித்துக் கொள்வதில் ஆர்வம் காட்டும் அதேவேளை தமிழர் தரப்பு தமிழரொருவரையும் முஸ்லிம் தரப்பு முஸ்லிம் ஒருவரையும் முதலமைச்சராக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இவ்வாறான இனவாத ரீதியான சிந்தனையை ஏற்றுக்கொள்ள முடியாது. இனங்களிடையே ஒற்றுமையை கட்டியெழுப்பும் விதத்தில் அனைத்தும் அமைய வேண்டும். அதேவேளை கிழக்கின் முதலமைச்சர் எமது நாட்டு மக்களின் விருப்பு வெறுப்பிற்கமையவே தெரிவு செய்யப்பட வேண்டுமே தவிர இந்தியாவின் தேவைக்காக அல்ல என்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு கிழக்கில் ஆயுதக்குழுக்களைப் பயன்படுத்தி பலாத்காரங்களை மேற்கொள்ளும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். இதனை கண்டறிந்து தடுப்பதற்காக விசேட குழுவொன்று கிழக்கிற்கு அனுப்பி வைக்கப்படுமென்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். தேர்தல் சட்டம் மீறல் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலனறுவை நகரங்களில் பாரிய கட்அவுட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சுவரொட்டிகள், பொலித்தீன் அலங்காரங்கள் என அரச தரப்பு முன்னாள் முதலமைச்சர்களும் வேட்பாளர்களும் பிரசாரங்களை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

## அரசியல்...

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற தமிழ் அரசியல் கைதிகள் மீதான தாக்குதலையடுத்து எழுந்துள்ள அழுத்தங்களையடுத்து அரசியல் கைதிகள் மற்றும் போர் கைதிகளை ஓரிடத்தில் வைத்து பேண திட்டமிடப்பட்டுள்ளது.

## கூட்டமைப்புடன்...

சேனாதிராஜாவை சந்தித்த போது எடுக்கப்பட்ட புகைப்படமே இவ்வாறு ஊடகங்களில் வெளியானதாகத் தெரிவித்துள்ளார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடனோ வேறு எந்தக் கட்சியுடனோ புரிந்துணர்வு உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, தேர்தல்களில் எவ்வாறு போட்டியிடுவது தொடர்பில் இன்றைய தினம் கட்சித் தலைமையகத்தில் விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சடலங்களை தகனம் செய்ய மின் உலை அமைக்க முடிவு

## தரம் உயர்கிறது செம்மணி மயானம்

(திருநெல்வேலி)

செம்மணி மயானத்துக்கு இன்னும் இரண்டு வருடங்களில் உடலங்களைத் தகனம் செய்வதற்காக மின் உலை அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையினால் கடந்த சனிக்கிழமை காலை திறந்து வைக்கப்பட்ட மயான மதில் மற்றும் வளாகத் திறப்பு விழாவில் தலைமையுரை ஆற்றும் போது சபையின் தலைவர் லயன். சி.இலட்சுமிகாந்தன் இதனைத் தெரிவித்தார்.

இந்த மின் உலைக்காக ஒரு கோடி எழுபது இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட 40 இலட்சம் ரூபா செலவில் இம் மதிலும், வளாகமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தெற்குப் பக்க மயானம் இரண்டு ஏக்கர் நிலம் கொண்டதாகவும், வடக்குப் பக்க மயானம் சுமார் ஒரு ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகவும் உள்ளது.

இம் மயானத்தில் உடலம் ஒன்றைத் தகனம் செய்வதற்கு அல்லது அடக்கம் செய்வதற்கு ஆயிரத்து 250 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும். மிருகங்களைப் புதைப்பதானால் 1000 ரூபா செலுத்துதல் வேண் டும்.

இருநூறு மரக்கன்றுகளும் நாட்டப்படவுள்ளன. இங்கு அந்தியேட்டிக் கிரியைகள் செய்வதற்கான மடம், கேணி என்பன அமைக்கப்பட்டுள்ளன.

செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபை 1992ஆம் ஆண்டு சட்டத்தரணி இராஜராஜேஸ் வரன் தங்கராசா தலைவராகவும், லயன் வ.பரமசிவத்தை செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இச்சபையினால் தொடர்ந்தும் செம்மணி மயானம் அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (137)

## தனிப்பட்ட தகராறு; 500 கோழிகள் பலி



(புத்தளம்)

புத்தளம், மதுரங்குளி, வேலாசிறி கிராமத்தில் கோழிப் பண்ணை ஒன்று தீ பற்றியதால் சுமார் 500 கோழிகள் பலியாகின. தனியார் ஒரு வருக்குச் சொந்தமான மேற்படி கோழிப் பண்ணையில் ஏற்பட்ட தீ காரணமாக கோழிகளுடன் சேர்ந்த பண்ணையில் வைக்கப்பட்டிருந்த உபகரணங்களும் எரிந்துள்ளன.

குறித்த கோழிப்பண்ணையில் 20 நாட்கள் வயதுடைய புறொயிலர் வகை கோழிகள் 500 காணப்பட்டதாகவும் அவை அனைத்தும் தீயில் பலியாகின. தனிப்பட்ட தகராறு காரணமாகவே பண்ணைக்கு தீ வைக்கப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகவும் கோழிப் பண்ணையின் உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளினை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அவசரத் தேர்தல்



சர்வதேச அழுத்தங்களில் இருந்து தப்பித்துக்கொள்ளவே அரசாங்கம் அவசரமாகத் தேர்தலொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளதென முன்னிலை சோஷலிசக் கட்சி தெரிவித்துள்ளது.

தலவத்துகொட - மாதிவெல கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய முன்னிலை சோஷலிசக் கட்சியின் உறுப்பினர் தர்மலிங்கம் கிருபாகரன் இவ்வாறு தெரிவித்தார்.

## புகலிடம் தேடிய கர்ப்பிணிப் பெண் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் உள்ளிட்ட 141 பேருடன் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்த படகில் இருந்த கர்ப்பிணிப் பெண் (இலங்கை) சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலிய பேர்த் நகரில் உள்ள வைத்தியசாலையில் குறித்த கர்ப்பிணிப் பெண் சேர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. புகலிடக் கோரிக்கையாளர்கள் 141 பேரை ஏற்றிச் சென்ற படகு கிறிஸ்மஸ் தீவிற்கு 185 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து அவுஸ்ரேலிய சுங்கக் கப்பல் அதிகாரிகளால் பிடிக்கப்பட்டது.

இவ்வாறு புகலிடம் கோரிச் சென்றவர்களில் அதிகமானோர் இலங்கையர்கள் எனவும், சிலர் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கிறிஸ்மஸ்தீவு தடுப்பு முகாமிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## இலங்கையில் நீதித்துறை திறமையாக செயற்படுகின்றது

இலங்கையில் நீதித் துறை மிகவும் திறமையாகச் செயற்படுகின்றது. நீதிச் சுதந்திரத்தை இல்லாமல் ஆக்குவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தச் சக்திக்கும் அரசாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி கண்ணொருவ விவசாயக் கட்டட வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய விவசாய வாரக் கண்காட்சியில் பங்குபற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார். இந்நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொடர்ந்து உரையாற்று கையில்,

நீதிமன்ற இறைமையைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. சட்டம் ஒழுங்கு சீரழிய இடமளிக்க முடியாது. சட்டம் ஒழுங்கு இல்லாமல் நாடொன்றை ஆட்சி செய்ய முடியாது. நாட்டின் சட்டத்தை உச்ச அளவில் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி கூறினார்.

## மின் தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களை இடமாற்றம் செய்வதற்காக நாளை மற்றும் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையும் உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## சமையல் தாமதமானது விழுந்தது அடி கணவனுக்கு

(யாழ்ப்பாணம்)

வீட்டில் கணவன் சமையல் செய்து கொடுக்கவில்லை என்பதற்காக மனைவியின் தாக்குதலுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட நிலையில் கணவன் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த கணவன் வீட்டில் தினமும் சமையல் வேலைகளைத் தானே செய்து வருவதாகவும், மனைவிக்கு நானே தேநீர் வழங்க வேண்டும் எனவும் நேற்றைய தினம் சமையல் செய்வதற்குத் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால் தனது மனைவி தடியால் தன்னைக் கடுமையாகத் தாக்கியதாகப் பொலிஸாரிடம் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நடந்த சம்பவத்தை வீட்டில் நேரில் வந்து பார்க்குமாறும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு 3 பிள்ளைகள் உள்ளதாகவும் கணவன் கராச தொழில் செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (104)

## மரண அறிவித்தல்

### திருமதி பர்வதாம்பாள் கோவிந்தராஜா



வடக்கம்பராய் பூதராசி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பர்வதாம்பாள் கோவிந்தராஜா அவர்கள் கடந்த 21.07.2012 சனிக்கிழமை மாலை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதிக் குருக்கள் இராசம்மாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சோமசுந்தரக் குருக்கள் பல்வளைநாயகி அம்பாள் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற இசையாசிரியர் கோவிந்தராஜா ஐயர் அவர்களின் பாசமிகு மனைவியும் ஆவார்.

அன்னார் திலகேஸ்வரி, விஜயசுந்தரம் (அமரர்), ஓய்வுபெற்ற தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கொள்வனவாளர் மகாராசா (அச்சுவேலி - தற்போது கனடா), நந்தகோபாலக் குருக்கள் (பிரத்மகுரு நெடியகாட்டுப் பிள்ளையார் கோவில் - வல்வெட்டித்துறை), பராசக்தி, கதிரமலை, ஓய்வுபெற்ற இசையாசிரியர் பொன்னம்மா சத்தியமூர்த்தி (கொழும்பு - தற்போது அவுஸ்ரேலியா) ஆகியோரின் மைத்துனியும், பரமேஸ்வரி (ஓய்வு பெற்ற இசையாசிரியர் - வவுனியா, தற்போது தபாலதிபர் - லண்டன்), பரமேஸ்வரன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா, உதயகுமாரி (லண்டன்), உதயகுமாரன் (கனடா), ஸ்ரீதரன் (அமரர்), கேதீஸ்வரி, வள்ளிகாந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும், ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), அருந்தவநாயகி (கனடா), அறிவழகி (ஆசிரியர், ந/மங்கையற்கரசி வித்தியாலயம்), ஸ்ரீதரன் (லண்டன்), காமினி (கனடா), வதனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வரதா (கனடா), வனஜா (கனடா), வத்சலா (கனடா), ஸ்ரீகரன் (கனடா), ஸ்ரீசங்கமீரா, ஸ்ரீசங்கீதன், ஸ்ரீசங்கநேசன், சாயினி (கனடா), சயந்தவி (கனடா), சௌஷாமினி, சோபனா, கணசியாம் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் 203, கோவில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**லயன். கோ.ஸ்ரீஸ்கந்தராஜா (மகன்),**
**203, கோவில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல் :**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

(C/1593)

## இடைக்காலத்தடை மேலும் நீடிப்பு

உதயன் பத்திரிகை ஆசிரியர் தொடர்பாக யாழ்.நீதவான் எந்த நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு விதிக்கப்பட்டிருந்த இடைக்கால உத்தரவை ஓகஸ்ட் 29 ஆம் திகதி வரை நீடித்த மேல் முறையீட்டு நீதிமன்றம், யாழ். நீதவானை ஓகஸ்ட் 28 இல் நீதிமன்றில் ஆஜராகுமாறு இன்று மீண்டும் அறிவித்தல் விடுத்துள்ளது.

இதேசமயம் பிரதிவாதியான யாழ். நீதவான் மாணிக்கவாசகர் கணேசராசா, யூலை 17 ஆம் திகதியிட்டு மேல்முறையீட்டு நீதவான் சிறிஸ்கந்தராஜாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தான் உதயன் ஆசிரியருக்கு எதிரான வழக்கு விசாரணையிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

மேலும், தான் நீதவான் நீதிமன்றத்தின் மேற்படி வழக்கு விசாரணையிலிருந்து விலகிக் கொள்வதால் தன்னை இவ்வழக்கின் பிரதிவாதி என்ற வகையில் நீதிமன்ற நடவடிக்கையிலிருந்து விடுவிக்கும்படி அவர், கேட்டுள்ளார்.

## உல்லாசப் பயணிகளுக்கு உலங்குவானூர்தி

எம்.ஐ-171 ரக 14 உலங்குவானூர்திகளைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், இதற்கான கொள்வனவுக் கட்டளை ரஷ்யாவின் ரொசோபொ ரன் எக்ஸ்போர் கம்பனியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என அக்கம்பனி அறிவித்துள்ளது.

10 வருட கடன் அடிப்படையில் 30 கோடி அமெரிக்க டொலர்கள் செலவில் இந்தக் உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உல்லாசப் பயணத்துறைக்காக இந்த உலங்குவானூர்திகள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக விமானப்படையின் பேச்சாளர் அன்ரூ விஜேசூரிய ரொய்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கை விமானப்படை ஹெலிடுவர்ஸ் என்ற பெயரில் உல்லாசப் பயணச் சேவையை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தகுதியான மாணவர்களுக்கு பல்கலை அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பல்கலைக் கழகம் செல்ல அனுமதி அளிக்கப்பட வேண்டும் என சோஷலிச மாணவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இருமுறை வெளியிடப்பட்டுள்ள இஸட் புள்ளியால் பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்துள்ளதாக அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அடுத்த மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு இந்த மாணவர்களால் தயாராக முடியாது என சோஷலிச மாணவர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் முதல் தடவை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களும் திருத்தம் செய்யப்பட்டு நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட இஸட் புள்ளியின்படி பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூலை 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.